# முகங்களும் மூடிகளும்

கோகிலா மகேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




(சிறுகதைத் தொகுதி)

கோகிலா மகேந்திரன்

வெளியீடு
கலை இலக்கியக் களம்
தெல்லிப்பழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'Mukangalum Moodikalum'

(A Collection of short Stories)

By

**Kohila Mahendran**

Publishers & Copy right
Lyceum of literary & Aesthetic Studies
Tellippalai

**Date of Publication**
**26 th December - 2003**

**Printers**
*Harikanan Printers*
*K.K.S. Road, Jaffna*

Pages -150 +XVII

Price :- 200/=

மகாஜனக் கல்லூரியில்
எனது விலங்கியல் ஆசிரியர்
உயர்திரு.ச. பொ.கனகசபாபதி
அவர்களின்
பாதங்களுக்கு
இந்நூல்
சமர்ப்பணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே .......


| | | |
|---|---|---|
| 01. | முகங்களும் மூடிகளும் | 01 |
| 02. | விஷம் | 16 |
| 03. | முகாமுக்குப் போகாத அகதி | 27 |
| 04. | தொண்டர் | 36 |
| 05. | வாழ்வுந்தலும்... | 43 |
| 06. | பெண் பனை | 50 |
| 07. | நெருஞ்சி | 59 |
| 08. | தலையீடு | 67 |
| 09. | இளம் கனவு | 75 |
| 10. | பூக்குளிப்பு | 84 |
| 11. | ஏ - 9 பாதை | 91 |
| 12. | மெத்தென்ற மௌனம் | 102 |
| 13. | நெருக்கீட்டின் பின்.... | 109 |
| 14. | கூறானது மனம் | 116 |
| 15. | மலையைச் சுமத்தல் என்பது... | 124 |
| 16. | பிறழ்வின் தோற்றம் | 130 |
| 17. | உயர்ந்து செல்லும் சீரழிவு மானி | 137 |
| 18. | புலன்களுக்கு அப்பால் உள்வாங்குதல் | 143 |


# வாழ்த்து

செந்தமிழ் வளர்த்த செழுங்குடிப் பிறந்து
கல்விச் செல்வம் கைவரப் பெற்றே
நல்லாசிரியையாய் நற்பணி புரிந்த
கோகிலா எனும் குலக் கொழுந்தே வாழிய.

மாணவியாகத் திகழ்ந்திடும் போதே
நாடகம் நடித்தும் சிறுகதை எழுதியும்
மாணவரிடையே தனித்துவம் கொண்டனை.
பேணரும் குணத்துப் பெரியோய் வாழிய.

ஈழத்துள்ள பல வாம் ஏட்டிலும்
இன்னும் பிறவாம் நாட்டுள ஏட்டிலும்
வாழும் இலக்கியம் இது வெனக்காட்ட
வளமார் இலக்கியம் பலவும் படைத்தனை.

மேடைகள் பலவினும் நாடகம் நடத்தி
நாடகத்துறைக்குப் புதுமைகள் சேர்த்தனை
யா நலத்துள்ளும் சிறந்த தாய்க் கொள்ளும்
நா நலம் விளங்க மேடையில் பேசி
பேச்சுக் கலைக்கே அழகினைச் சேர்த்தனை
சரி யெனப் பட்டதைச் சகமே எதிர்க்கினும்
சரி யெனக் கூறும் இயல்பினை வாழிய
பெண்ணின் பெருமை புவியோர்க் குணர்த்திய
திண்மை உள்ளம் படைத்தோய் வாழிய
சிந்தையைத் தூண்டவும் கற்பனை வளர்க்கவும்
வல்ல நின் எழுத்து வாழிய நிலைத்தே
தெய்வ அருளால் நீயும் நின் துணைவரும்
அருமைப் புதல்வனும் வாழிய நீடே.

மயிலங் கூடல்,
இளவாலை.
17.12.03.

புலவர்.ம.பார்வதி நாதசிவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

பலவிதமான கலைப்படைப்புகளை ஆக்கி வரும் கோகிலா மகேந்திரன் அவர்கள் ஏற்கனவே வெளிவந்த தனது சிறுகதைகளிலிருந்தும் சர்வதேசமட்டத்தில் பரிசு பெற்ற கதைகளிலிருந்தும் தேர்ந்தெடுத்துத் தொகுத்தவை "முகங்களும் மூடிகளும்" என்ற நூலாக வெளிவருகின்றது. இவற்றை ஒன்று சேர்ப்பதற்கான பொதுக் காரணி – இந்நூலின் தொனிப்பொருள் – அதாவது இச் சிறுகதைகளினூடாகத் தொகுக்கப்படும் கருத்து யாது என்று தேடினால் அது பலவாகப் புலப்படும்.

முக்கியமாக, இப்பிரதேசத்தில் இரு தசாப்தங்களுக்கும் மேலாக நடக்கும் போரைப் பின்புலமாக – கதைகளின் சம்பவங்கள் நிகழும் சூழலாக – பின்னணியமைப்பாக (Setting) அவை கொண்டிருக்கின்றன. தற்பொழுது நிலவும் போர் நிறுத்த காலத்தில் – சமாதான முயற்சி நிகழும் காலப்பகுதியில் இந்நூல் வெளிவருவது மிகப்பொருத்தமானதும் காலத்தின் தேவையைக் கருத்திற் கொண்டு செய்யப்படுவதுமாகும். ஏனெனில் நீண்டகாலமாக உள்நாட்டுப் போர்நடந்து, சமூகங்கள் சீர் குலைந்து, நொந்து போயிருக்கும் நிலையில் இருந்து மீள – சமாதான சமூக சூழ்நிலையைக் கட்டியெழுப்ப – புனர்நிர்மாண அபிவிருத்தி நடவடிக்கைகளை எடுக்க – அங்கு வாழும் மக்களின் உள சமூக ஆரோக்கியத்தைக் கவனிக்க வேண்டிய தேவை உலகளாவிய ரீதியில் உணரப்பட்டுள்ளது. ஞாபகங்களைக் குணமாக்குதல் (Healing of Memories) என்று தென்னாபிரிக்காவில் வர்ணிக்கப்படுவது – நடந்த கசப்பான அனுபவங்களை, அநீதிகளை, கொலைகளை, குண்டுப்பொழிவுகளை மீண்டும் நினைவுபடுத்தி – அவற்றுக்குப் பொறுப்பானவர்கள் தமது குற்றத்தை உணர்ந்து – பாதிக்கப்பட்டவரைச் சமூக மட்டத்தில் அங்கீகரித்து – இயலுமான விமோசனத்தைப் பெற்றுக் கொடுத்தல் போன்ற சமூக செயற்பாடுகளில் அடங்கும். நடந்தவற்றைப் பின்னோக்கிப்பார்த்து அவற்றை ஜீரணித்து, ஊடகப்படுத்தி ஏற்றுக் கொண்டால் தான் எதிர்காலத்தைப் பற்றி உடன்பாடான முறையில் சிந்திக்கலாம். புனர் நிர்மாண அபிவிருத்திச் செயற்பாட்டில் ஈடுபடலாம். நடந்தவற்றைப் பற்றி மக்கள் மன ஆறுதல் அடைந்தால்தான் சமாதானம் நிலைத்து நீடிக்கும். இந்நூல் இதற்கான ஆரம்ப முயற்சி என்று சொல்லலாம்.



போரின்பல பரிமாணங்களை – நாளாந்தம் மக்கள் அநுபவித்த பல தரப்பட்ட இடையூறுகள் கஷ்டங்கள், தாக்கங்கள், பாதிப்புகள் ஆகியவற்றை – வெவ்வேறு கோணங்களிலிருந்து கதைகளினூடாக விபரிக்கின்றது இந்நூல். நாங்கள் அனுபவித்த சம்பவங்களினுடனும் உணர்வுகளுடனும் எங்களைச் சுலபமாக அடையாளம் காணக்கூடிய விதத்தில் இக்கதைகள் விரிகின்றன

**"......இரவு முழுவதும் ஒரே அட்டகாசம்....... பதினாறு திக்கிலும் கேட்ட பொம்மர் குண்டு வீச்சுகள்... ஹெலி தீர்த்துக்கட்டிய கலிபர் தாக்குதல்கள்!... காற்றின் ஒவ்வொரு அசைவிலும் காலன் வருவதாய்க் கனவு வருகிறது.... பயம்.....பயம்.......விபரிக்க முடியாத பயம்....!"**

இக்கதைகள் எம்மைத் திரும்பவும் அந்தக் கொடிய காலப்பகுதிக்குக் கொண்டு செல்கின்றன. அது இடம்பெயரும் ஆசிரியரூடாகவோ தந்தை தனது கண்முன் இழுத்து, அடித்துக் கொண்டு செல்லப்படுவதைப் பார்க்கும் சிறுவன் ஊடாகவோ, அல்லது திரும்பவும் தன் ஊருக்கு வரும் போராளியின் கண்களினூடாகவோ பார்க்க – அனுபவிக்க வைக்கப்படுகிறது. இந்நிகழ்வுகள் கிளப்பிய உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் திரும்பவும் நினைக்கவும் அனுபவிக்கவும் வைக்கின்றன கதைகள். உண்மையில், நாம் நடந்தவற்றைத் திரும்பவும் வெவ்வேறு பார்வைகளில், வெவ்வேறு கோணங்களில் இருந்து பார்க்க வேண்டிய கட்டத்திற்கு வந்துவிட்டோம். இதற்குத் துணிவும் தேவை. கருத்துச் சுதந்திரமும் தேவை. எங்களில் மறைந்திருக்கும் ஆக்கத்திறன்களும் கலை வடிவங்களும் இந்த முக்கிய மீட்புப் பணிக்காக வெளிக் கொணரப்பட வேண்டும். இவ்வாறான ஒரு சமூக மீளாய்வு செய்யப்பட்டால்தான் நடந்தவற்றுக்கான அர்த்தம் சமூக மட்டத்தில் கற்பிக்கப்பட்டு எதிர் காலத்தை ஆரோக்கியமாக எதிர் கொள்ளக் கூடிய நிலை ஏற்படும்.

இச் சிறுகதைகளின் சிறப்பம்சங்களாக அவற்றில் பரவிக்கிடக்கும் உளவியற் கருத்துகள், செயற்பாடுகள். உதவிகள். விளக்கங்கள் முதலியவற்றைக் குறிப்பிடலாம். ஒவ்வொரு கதையிலும் வரும் கதா பாத்திரங்களின் ஆழ் மனதில் இருக்கும் உணர்வுகள், உணர்ச்சிகள், பயங்கள், கோபங்கள், வடுக்கள் போன்றவை யதார்த்த ரீதியாக வெளிக் கொணரப்படுகின்றன. மனமானது ஒரு விடயத்தை எவ்வாறு கையாளுகின்றது, எவ்வாறு ஒரு பிரச்சினைக்குள் சிக்கிக்கொள்கின்றது. எவ்வாறு அதிலிருந்து விடுபட எத்தனிக்கின்றது என்பது போன்ற மனதின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவிதமான செயற்பாடுகள், எங்களால் சுலபமாக விளங்கக் கூடிய முறையில் கதைகளினூடாக விளக்கப்படுகின்றன. ஆகவே இந்நூலை உளவியல் தத்துவங்களின் செய்முறை என்று சொன்னால் அது மிகையாகாது. மிக முக்கியமாக உளப்பிரச்சினைகளில் இருந்து எவ்வாறு விடுவிக்கப்படலாம் என்பதும் இங்கு கூறப்படுகின்றது. உதாரணமாக **'மெத்தென்ற மௌனம்'** என்ற கதையில் நேரடியான வழிகாட்டலில் இருந்து. **''பெண்பனை''** **''பிறழ்வின் தோற்றம்''** **''உயர்ந்து செல்லும் சீரழிவுமானி''** **''இளம் கனவு''** 'நெருக்கீட்டின் பின்' போன்றவற்றில் உளவளத்துணைச் செயற்பாடுவரை தெளிவாக விளக்கப்படுகின்றது.

இவ்வாறான பல பொது அம்சங்களுடன் ஆசிரியராகிய கோகிலா மகேந்திரன் இச்சிறுகதைகளில் தனது கற்றல்–கற்பித்தல் செயற்பாடுகளையும் கைவிடலில்லை. பொருத்தமாக விஞ்ஞான அறிவு ஆங்காங்கே புகட்டப்பட்டுள்ளது. உதாரணமாக. **''பெண்பனை''** **''தலையீடு''** **''புலன்களுக்கு அப்பால் உள்வாங்குதல்''** போன்றவற்றில் தாவரவியல், சூழலியல், விலங்கியல் அறிவு நன்கு வெளிப்படுகின்றது. எங்களுக்குத் தெரியாமலே வாசகராகிய நாம் இவற்றை உள் வாங்கி விடுவோம். எமது சொல் அகராதியும் பல அர்த்தமுள்ள சொற்களின் அறிமுகத்தால் வளர்க்கப்படுகின்றது. மற்றும் ஒரு சமூகவியல் நலன் விரும்பி என்ற பொறுப்பிலிருந்து ஆழமான மனித நேய, சமூக முன்னேற்றக் கருத்துக்கள் மிருகங்களினூடாகவும் தாவரங்களினூடாகவும் கூடச் சொல்லப்படுகின்றன. George Orwell இன் Animal Farm என்ற நூலின் பாணியில் **''விஷம்''** என்ற கதை அமைகின்றது. **''பெண்பனை''**யில் பெண்ணியக்கருத்துக்கள் முன் வைக்கப்படுகின்றன. தற்பொழுது அதிக சர்வதேச கவனத்தை ஈர்த்துள்ள – சிறுவர், போராளிகளாவதான பிரச்சினைக்குரிய விடை **''இளம் கனவு''** என்ற கதையில் கிடைக்கின்றது. சிறுவர் ஏன் போராளிகளாக, வீட்டைவிட்டு ஓடிப்போகிறார்கள் என்று ஆராய்ந்து அக்காரணங்களை நிவர்த்தி செய்தால் இப்பிரச்சினை ஏற்படாது. இயற்கைக் காட்சிகளை எவ்வாறு மனதின் வெளிப்பாடுகளுக்கும் குமுறல்களுக்கும் ஒத்தவாறு பிரதிபலிக்கிறார் – கையாளுகிறார் என்ற வகையில் நூலாசிரியரின் கவித்துவத்தைக் காணலாம். பல குறியீடுகளும் அங்காங்கே மறைந்திருந்து எங்கள் சிந்தனைகளைத் தூண்டிவிடுகின்றன. இன்னுமொரு போற்ற வேண்டிய பண்பு தற்காலத்தில் தென்னிந்தியாவிலும் இங்கேயும் பாணியாக வந்துவிட்டகதையமைப்புக் (Plot) கொண்ட – மலிந்த காதல் கதைகள் இத் தொகுதியில் இடம்பெறாததாகும்.



ஒரு நல்ல தொகுப்பு நூல் – தொடர்ந்தும் கஷ்டமான சோதனைக்குரிய காரியங்களைக் கூறாமல் சற்று ஓய்வு கொடுக்கும் நோக்கில் –மெல்லிய நகைச் சுவையுடன் சிரிக்கவைக்கும் முறையில் **'நெருஞ்சி''** **''ஏ-9 பாதை''** ஆகிய கதைகள் வந்து ஆறுதல் தருகின்றன.

இந்தச் சிறு கதைத் தொகுப்பில். ஒரு குறைபாட்டைக் குறிப்பிடலாம் என்றால், இச்சிறுகதைகள் மிகவும் சிறுத்துப்போயின என்பதையே சொல்லலாம். இக்காலத்து வாசகர்கள் நீண்டகதைகளை வாசிக்கப் பொறுமை அற்றவர்களாகக் காணப்பட்டாலும், இக் கதைகளைச் சுற்று விரிவாக்கம் செய்து உள, சமூக மனித நேயக் கருத்துக்களை இன்னும் ஆழமாகக் கையாண்டிருக்கலாம்.

ஒட்டு மொத்தமாக, இச்சிறுகதைத் தொகுப்பு பல முக்கிய காரியங்களை ஒரே நேரத்தில் செய்கின்றது. இவையெல்லாம் கதாசிரியர் கோகிலா மகேந்திரனின் பல்துறை சார் புலமையையும், முதிர்வையும் காட்டுகின்றன.

இந்நூல், தமிழ்ச் சமுதாய நலன் விரும்பிகள், உளவியல் ஆய்வாளர்கள் கலை இலக்கிய இரசிகர்கள் மற்றும் எம்மைப் போல் இக்காலப் பகுதியில் போரின் மத்தியில் வாழ்ந்தவர்கள் என்று எல்லோராலும் படிக்கப்பட வேண்டிய – பயன்பெறப்படவேண்டிய– ஒன்றாகும்.

**மார்கழி - 2003**

**பேராசிரியர். தயா சோமசுந்தரம்,**
**உள மருத்துவத்துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

யாழ்ப்பாணத்தின் மண்வளம் மிக்க கிராமங்களில் ஒன்றான தெல்லிப்பளை விழிசிட்டியிலே பிறந்து வளர்ந்தவர் கோகிலா மகேந்திரன். ஆக்க இலக்கிய கர்த்தாக்களுக்குக் கிராமிய வாழ்வு வெறும் அனுபவமாக மாத்திரமன்றி ஒருவித 'கற்கைநெறி'யாகவும் அமைவதுண்டு. கிராமம் 'வாய்திறந்து பேசும்' இலக்கியங்கள் உலகப் புகழ் பெற்றவையாக அமைவதற்கு எழுத்தாளனின் இந்தக் 'கற்கைநெறியும்' ஒரு காரணமாகலாம். கோகிலாவின் படைப்புக்கள் பலவற்றிலே 'கிராமியக்கற்கைநெறி' புலப்படுவதையும் அவதானிக்கலாம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கிராமமும் நகரமும் சங்கமித்த கல்லூரிகளிலே தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரியும் ஒன்றாகும். கோகிலா கல்வி பயின்ற காலங்களில் மகாஜனக்கல்லூரியை 'அம்பனைப் பல்கலைக்கழகம்' என்று அழைத்த வரலாறும் உண்டு. இக்கல்லூரிக்கென்று தனித்துவமானதோர் கலை இலக்கியப் பாரம்பரியம் இருப்பதை அனைவரும் அறிவர். ஈழத்தின் புகழ்பெற்ற எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்களை 'ஈன்று புறந்தந்த' பெருமை மகாஜனாவுக்கு உரியது. கோகிலா எழுத்துத்துறையிலே பிரகாசிப்பதற்கு இந்த 'மகாஜனமரபும்' வலுவான காரணியாகலாம்.

விஞ்ஞானக் கல்வி கற்ற கோகிலா பேராதனைப் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவியாக இருந்தவர். தனிமனித நோய்க்கு வைத்தியம் செய்பவராக வரவேண்டியவர் இன்று சமூகத்தின் நோய் நொடிகளை இனங்கண்டு இலக்கிய வைத்தியம் செய்யும் எழுத்தாளராக முகிழ்த்திருக்கின்றார்.



ஆசிரியர், அதிபர், கல்வி அதிகாரி, சீர்மியர் முதலான பல்வகைப் பரிமாணங்களினூடு, தான் பெற்றவற்றைச் சிறந்த இலக்கியமாகச் செதுக்கும் திறன் கோகிலாவுக்குக் கைவந்த கலை. கந்தோர், கதிரை, மேசை, கோப்புக்கள், குடும்பம் முதலானவற்றோடு மட்டும் தன் கடமை முடிந்தது என்று நின்றுவிடாது உளவியல்சார் செயற்பாடுகளிலே ஆர்வம் கொண்டு நல்ல சீர்மியச் செயற்பாட்டாளராகவும் விளங்குகின்றார்.

நாவல், சிறுகதை, நாடகம், ஆய்வு முதலான துறைகளிலே ஆழமான சுவடுகளைப் பதித்துள்ள கோகிலா நல்ல வாசகியும் ஆவார். தமிழ், ஆங்கில இலக்கியங்களில் நல்ல பயிற்சியும், தேர்ச்சியும் உடைய இவரது படைப்புக்கள் ஒவ்வொன்றிலும் ஒருவகை வித்தியாசமான தனித்தன்மையைத் தரிசிக்க முடியும்.

பன்மொழிப் பாண்டித்தியமுடைய வ.வே.சு.ஐயரின் ஊடாகத் தமிழ்மொழிப் பிரவேசம்' செய்ததெனக் கூறப்படும் சிறுகதை என்னும் இலக்கிய வடிவம் முப்பதுகள் நாற்பதுகளில் வேர்விட்டு, ஐம்பது அறுபதுகளில் வளர்ச்சி கண்டு எழுபது எண்பதுகளில் கிளைபரப்பி இன்று விழுது விட்டுச் 'சடைத்த' பெருவிருட்சமாகிவிட்டது. தமிழகத்தில் சிறுகதை வேர்விட்டு வளரத்தொடங்கிய காலத்திலேயே ஈழத்திலும் சிறுகதை முளைத்து வளரத்தொடங்கிவிட்டது. ஒவ்வொரு காலகட்டத்திற்கும் உரிய சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டுக் கூறுகளை ஏதோ ஒரு அளவில், ஏதோ ஒரு வகையில் உள்வாங்கிச் சிறுகதை என்னும் இலக்கிய வடிவம் 'பயணித்து'க் கொண்டிருக்கின்றது.

சிறுகதை என்ற இலக்கிய வடிவத்திற்கு வரைவிலக்கணம் கூறப்புகுந்த ஆய்வாளர்கள் முழுமையான வெற்றி பெற்றார்கள் என்று கூறுவது கடினமானது. திறனாய்வாளர்கள் கூறிய வரைவிலக்கணங்களை இங்கே விளக்கமாகக் கூறினால் இவ்வுரை 'பாடக்குறிப்பு'ப் போலாகிவிடும் ஆபத்தும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோகிலாவின் 'முகங்களும் மூடிகளும்' என்னும் சிறுகதைத் தொகுதியிலே பதினெட்டுச் சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. அமைப்பிலும், அளவிலும், போக்கிலும் வேறுபட்டு இச்சிறுகதைகள் காணப்படுகின்ற போதிலும் உள்ளடக்க வகையில், அல்லது நோக்கு நிலையில் ஏதோ ஒரு உள்ளீடு, உணர்வு நரம்பாக (Spinal Cord)ச் செல்வதையும் அவதானிக்க முடிகின்றது.

இத்தொகுதியிற் காணப்படும் கதைகளிற் பெரும்பாலானவை மனித நடத்தையின் பின்னணியில் உளச்செயற்பாடு எவ்வாறு அமைகின்றது என்பதை நேரடியாகவோ, மறைமுகமாகவோ, குறியீடாகவோ சொல்லிச்செல்பவையாகவே காணப்படுகின்றன. தனிமனித நடத்தைகளின் பின்னணியிலேயே குடும்பம், சமூகம், அரசுவகிக்கும் பங்கினையும் இவரது கதைகளினூடு கண்டு கொள்ள முடிகின்றது.

ஆசிரியர் தான்கண்டதை, கேட்டதை, அறிந்ததை, அனுபவித்ததைச் சிறுகதையென்னும் இலக்கிய வடிவத்தினூடு 'சிறைப்பிடித்துள்ளார். இக்கதைகள் சொல்லுகின்ற செய்திகளுக்கும் அப்பால் சொல்லாமல் கரந்திருக்கும் பொருளே மனத்தில் பரந்து விரிந்து செல்லும் தன்மையை வாசகர்கள் அனுபவிப்பர்.

வாசகனின் நெஞ்சைத் தொடுகின்ற விடயங்கள் மாத்திரமன்றி நெஞ்சைச் சுடுகின்ற பலவிடயங்களை இக்கதைகள் கொண்டுள்ளன. தனிமனித நடத்தைகளினூடு சமூகத்தை ஊடுருவிக் கதிர்ப்படமாக (X Ray) எடுத்துக்காட்டியுள்ளார் எனலாம். எல்லாக்கதைகளிலுமே இத்தன்மையைக் காணலாம் எனினும் வகை மாதிரிக்குச் சிலவற்றைச் சுட்டிக்காட்டலாம். முகாமுக்குப் போகாத அகதி, பெண்பனை, இளம் கனவு, பூக்குளிப்பு, கூறானது மனம் முதலானவை நெஞ்சைச் சுடுவதை நிதர்சனமாகவே அனுபவிக்கலாம்.



குறியீடாக இவர் கையாளும் விடயங்கள் பெரும்பாலும் அரசியற் பின்னணி கொண்டவையாகவே காணப்படுகின்றன. வாசகன் இலகுவாக இனங்காணக்கூடிய குறியீடுகளும் உண்டு. இடர்ப்பாடோடு அடையாளம் காண வேண்டிய குறியீடுகளும் உண்டு. அணி இலக்கண ஆசிரியர்களின் மொழியிலே கூறுவதானால் ஒட்டணியும் உண்டு. இலேச அணியும் உண்டு. வாசகனின் உணர்திறனுக்குச் சவாலாக அமையும் கதைகளும் இல்லாமல் இல்லை. இத்தொகுதியில் இடம்பெறும் 'விஷம்', 'புலன்களுக்கு அப்பால் உள்வாங்குதல்' முதலான கதைகள் குறியீட்டுக்கதை எழுதுவதில் ஆசிரியர் வல்லவர் என்பதைத் தெளிவாகவே புலப்படுத்துகின்றன. இக்குறியீட்டுக் கதைகளுக்குள்ளே சொல்லாத சேதிகளையும் சொல்லிச் செல்லுகின்றார்.

இத்தொகுதியில் இடம்பெறும் இரண்டு கதைகள் கடித வடிவிலே அமைந்துள்ளன. கடித இலக்கியம் என்று ஒருவகை உண்டு என்று கூறுகிறார்கள். இலக்கியக்கடிதம் என்று ஒருவகை உண்டு. ஆனால் இதில் இடம்பெறும் கதைகள் கடித இலக்கியக்கதைகளாகவே காணப்படுகின்றன.

காற்றுவெளியில் 'கைவீசி நடக்கும்' இலாவகமான உரைநடையை இவர் கையாண்டுள்ளார். நெருஞ்சி என்ற சிறுகதையில் இப்பண்பினை நிறையவே காணலாம். புதுமைப்பித்தனின் 'ஒருநாள் கழிந்தது' என்னும் சிறுகதையை ஒரேவழி நெருஞ்சி நினைக்கவைக்கின்றது.

இவர் கதைகளை நிறைவு செய்யும் பாணி இன்னொரு சிறுகதைக்குத் தொடக்கமாக அமைவது போல அமைவதும் உண்டு. உதாரணமாக:

'இரவுச்சாப்பாட்டிற்கு வீடுபோனால் போதும்! வீடு இருந்தால் தானே!!' (ஏ9பாதை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தேளா? எங்கேயிருந்தது? நான் கணேல்லை' என்றார் அவர். மூன்று நாளும் அவர் காலைக்கடன் கழித்தது நிச்சயம். அவரது வெள்ளை ஆடையை நான் உற்றுப்பார்க்கத் தொடங்கினேன்'

(புலன்களுக்கும் அப்பால் உள்வாங்குதல்)

முதலானவற்றைச் சுட்டிக்காட்டலாம்.

இதுவரை வெளிவந்த ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைத்தொகுதிகளிலே வித்தியாசமான போக்கிலும், நோக்கிலும் அமைந்த தொகுதியாக முகங்களும் மூடிகளும் என்னும் தொகுதியைப் பார்க்கலாம். பல்பரிமாண ஆளுமை கொண்ட கோகிலா மகேந்திரனிடமிருந்து இன்னும் பலசிறுகதைத் தொகுதிகள் வரவேண்டுமென்று எதிர்பார்க்கிறோம்.

**25-12-2003**

**கலாநிதி எஸ். சிவலிங்கராசா,**
**தமிழ்த்துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**



# கதைகளில் "சொல்லாத சேதிகள்" சில: –

உளவியல் துறையில் நீண்டகாலமாகவே எனக்கு ஆர்வம் இருந்தது. அத்துறை சார்ந்த 'சுய கற்றல்' 1970 களிலேயே ஆரம்பித்திருந்தது. அவ்வப்போது அந்த ஆர்வம் எனது சிறுகதைகளிலும் பிரதிபலித்துள்ளது. 1985 இல் காங்கேயன் கல்வி மலரில் பிரசுரமாகிப் பின்னர் சாகித்திய விருது பெற்ற "வாழ்வு ஒரு வலைப் பந்தாட்டம்" தொகுதியில் அமைந்த 'பிறழும் நெறிகள்' கதை ஒரு உதாரணம். 1993இல் சாந்திகத்தில் உளவளத்துணையாளர் பயிற்சி பெற்ற பின்னர், உளவியல்துறை மீதான ஆர்வம், குறிப்பாகச் சீர்மிய உளவியல் என்று ஆழமாகியது (Conselling psychology) அந்த அறிவும் அவ்வப்போது கதைகளில் பிரதிபலிக்கத்தான் செய்தது. 1995 இல் மல்லிகையில் வெளிவந்து பின்னர் வாழ்வு ஒரு வலைப்பந்தாட்டம் தொகுதியில் சேர்க்கப்பட்ட "மனதையே கழுவி" என்ற சிறுகதை சீர்மியக் களத்தில் நிற்பது. இதை ஒரு தரமான சிறுகதை என்று செங்கை ஆழியான் அவர்கள் தனது ஆய்வு நூலில் குறிப்பிடுகிறார்.

1986 – 2003 காலப்பகுதியின் தசையும் இரத்தமுமான எனது கதைகள் பலவற்றிலும் சீர்மிய உளவியல் சார்ந்த எண்ணக்கருக்கள் இருப்பதை அவதானித்துப் பலரின் வேண்டுதலுக்கு இணங்க அவற்றை ஒரு தொகுதியாக்குகிறேன். கடந்த இருபது வருட காலத்து யுத்தம் தந்த அகப்பாதிப்புகளையும் புறப்பாதிப்புகளையும் சில சமயம் அவற்றுக்கான உளவியல் ரீதியான தீர்வுகளையும் சிறுகதை வடிவத்துக்குள் நின்று சொல்ல முனைந்திருக்கிறேன்.

"A good short story book is sound and solid like a rock and answers every urgent konck" என்ற Laurie. E .Dawson இன் கருத்து எனக்கு இலட்சியமாகிறது. அதில் எவ்வளவு வெற்றி பெற்றேன் என்பதை நீங்கள் தான் சொல்ல வேண்டும்.

நெஞ்சின் அவலத்தைக் குறிவைத்து ஓடி அடைந்து காட்டுதல் சிறுகதை என்பார் புதுமைப்பித்தன். "சிறுகதைக்குச் சிக்கனம் உயிர்" என்பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப.ரா. சீர்மிய உளவியல் கருத்துக்கள் தெளிவாக வெளிவருவதைச் சில வேளை சிறுகதையின் இத்தகு வரைவுகள் தடுத்திருக்கலாம்.

எதைச் சொல்லப் புறப்பட்ட போதும் இது கட்டுரை அல்லச் சிறுகதை என்பதை நான் மறந்துவிடவில்லை என்று நம்புகிறேன்.

ஒரு நல்ல கலைப்படைப்பு அதிக தூரம் பார்த்தல், பிரச்சினைக்கு விடை அளித்தல், புதிய சமுதாயத் தேவையைச் சுட்டுதல், நிறைவுக்கு முதல் முயற்சி செய்தல் ஆகிய பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும் என்று கூறுவர். போருக்குப்பிற்பட்ட இக்காலப் பகுதியில் "உள நலச் செம்மையாக்கம்" என்ற சமுதாயத் தேவை இருப்பதைப் பல ஆய்வுகள் சுட்டுகின்றன. 'நெருஞ்சி' கதையின் நாயகனான மினிபஸ் நடத்துநரிடமும் 'நெருக்கீட்டின்பின்' கதையின் தாசனிடமும் இன்னும் பல பாத்திரங்களிலும் இத்தகைய 'ஆரோக்கியக் குறைவு' வெளிப்படுகிறது. தாசன் – நெருக் கீட்டுக்குப் பிற்பட்ட மனவடு, கண்டித நோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டிருப்பதையும், 'உயர்ந்து செல்லும் சீரழிவுமானி' மாணவி மெய்ப்பாட்டு நோயைக் கொண்டிருப்பதையும் இத்துறை அறிவு கொண்டவர்கள் இனம் காண்பர்.

உள ஆரோக்கியக் குறைவுக்கான காரணங்கள் எப்படிக் குடும்பத்தில் இருந்து தோற்றம் பெறுகின்றன என்பதைப் "பிறழ்வின் தோற்றம்" உணர்த்த முனைகிறது.

கதை சொல்லும் உத்தி முறைகளில் பல மாற்றங்களைப் பரீட்சித்துள்ளேன். உயர்ந்து செல்லும் சீரழிவு மானி கதையைப் படிக்கும் ஒரு சீர்மியர், சீர்மியநாடி கதை சொல்லிக் கொண்டு வரும்போது – சீர்மியர் கூறும் ஒத்துணர்வுப் பதில்களை (அது கதையில் இல்லாத போதும்) ஊகித்துக் கொள்வார். அந்தப்பதில் அங்கு வருவதால் தான் மாணவி அடிக்கடி 'ஓம் ரீச்சர்', "ஓம் ரீச்சர்" என்று சொல்கிறார்.

போருக்குப் பிறகு மனிதர் பலரிடமும் ஏற்பட்டுள்ள ஒரு மனப்பாங்கை – எப்படியும் காசு சேர்ப்பதே இலட்சியம் –ஏ–9 பாதை காட்ட முனைகிறது. சில கதைகள் விடயங்களை நேரே தொடுகின்றன. வேறு சில பூடகமான குறியீட்டுக் கதைகளாக உள்ளன. 'வாழ்வு ஒரு



வலைப்பந்தாட்டம்' தொகுதியில் 'சர்ப்ப மரணம்' ஒரு நல்ல குறியீட்டுக்கதை என்று விமர்சகர்கள் பலரும் குறிப்பிட்டிருந்தார்கள், இத்தொகுதியில் 'விஷம்' "புலன்களுக்கு அப்பால் உள்வாங்குதல்" "கூறானது மனம்" "தலையீடு" ஆகிய கதைகள் தரும் பூடகமான செய்தி எது என்று நினைக்கிறீர்கள்? கலைப்படைப்புகள் தரும் செய்திகளைச் சரியாகப் புரிந்து கொள்வது அவ்வளவு இலேசில்லை என்பதை ஏறத்தாழ 30 வருட கால ஆசிரியத் தொழிலில் நான் உணர்ந்து கொண்டிருக்கிறேன். மாணவர்கள் நிறையவே சிரமப்படுவதை அவதானித்திருக்கிறேன்.

எனது சீர்மிய உளவியல் அறிவை மேன்மைப்படுத்தியவர்களில் முக்கியமானவர் பேராசிரியர். தயா சோமசுந்தரம் அவர்கள். அவரே இந்நூலுக்கான பெறுமதி மிக்க முன்னுரையையும் வழங்கியுள்ளார். பேராசிரியர் அவர்களின் வழிகாட்டலில், சாந்திகத்தில் உளவளத்துணையாளர்களைப் பயிற்றுவிக்கும் அனுபவத்தைப் பெற்ற போது தான் உண்மையில் நான் சீர்மிய உளவியலை விரிவாகக் கற்றேன். GTZ அனுசரணையுடன் நடைபெறும் சீர்மிய ஆசிரியர் பயிற்சி நெறியின் பயிற்றுநர் அனுபவங்கள் தான் பல கதைகளின் கருப்பொருளை எனக்குள் விதைத்தன. அவருக்கு நன்றி சொல்ல என்னிடம் வார்த்தைகள் இல்லை.

கலாநிதி. எஸ் சிவலிங்கராஜா அவர்கள் எனது இலக்கிய முயற்சிகள் அனைத்திற்கும் உந்து சக்தியாய் இருந்தவர். எப்போதும் தூய மனதுடன் பாராட்டி எழுத்தாளர்களை ஊக்குவிப்பவர். அவரது அணிந்துரையால் இந்நூல் கனதி பெறுகிறது. அவருக்கு ஆழ்ந்த நன்றிகளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

2003 ஆம் ஆண்டிலே வலம்புரி ஆசிரியர் பீடத்தைச் சேர்ந்த கவிஞர். எஸ். துரைசிங்கம் அவர்கள் அடிக்கடி என்னைக் கதைக்காக வற்புறுத்தியிருக்காவிட்டால் இக்கதைகளில் பல எழுதப்பட்டிருக்காது. என்னைத் தூண்டி எழுதுவித்தமைக்கும் வலம்புரியின் 'வெள்ளி முற்றத்தில்' பல கதைகளைப் பிரசுரித்தமைக்கும் நன்றி உடையேன்.

ஏனைய சில கதைகளைப் பிரசுரம் செய்த 'மல்லிகை' ஆசிரியர் டொமினிக் ஜீவா, 'அருள்ஒளி' ஆசிரியர் ஆறுதிருமுருகன், 'உள்ளம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் குழு ஆகியோருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இத் தொகுதியில் வரும் 'முகாமுக்குப் போகாத அகதி' சிறுகதை முன்னரே ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அம்மொழி பெயர்ப்பைச் செய்த கவிஞர் சோ.ப.அவர்களுக்கும் எனது நன்றி உரியது.

செம்மையான உள்ளமும் உன்னத ஆளுமையும் கொண்ட ஒருவர் வாழ்த்தினால் அந்த வாழ்த்துப் பலிக்கும் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு. இந்த மண்ணில் வாழும் அருமந்த அறிஞர், கவிஞர், புலவர்.ம.பார்வதி நாதசிவம் அவர்கள் என்னை வாழ்த்துகிறார் என்பது எனக்குப் பெரும் நிறைவைத் தந்து எனது சுய மதிப்பை உயர்த்துகிறது. அவரை வணங்குகிறேன்.

இந்நூலை வெளியிடும் தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களத்தினருக்கு நான் எப்போதும் நன்றி உடையவளாக இருக்கின்றேன்.

இந்த நூல் இவ்வளவு அழகாகவும் தரமாகவும் வர உழைத்தவர்கள் ஹரிஹரணன் பிறிண்டேர்ஸ் அவர்களுக்கு நன்றி சொல்லாமல் இவ்வுரை நிறைவு காண முடியாது. ஹலோ! ஹரிஹரணன் பிறிண்டேர்ஸ் உங்கள் அனைவருக்கும் நன்றி!

எப்போதுமே எனது இலக்கிய முயற்சிகளுக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கும் எனது குடும்பத்தினருக்கும் நன்றி கூறி உங்களை உள்ளே செல்ல அனுமதிக்கின்றேன்.

**26.12.03**

**கோகிலா மகேந்திரன்**
**வலிகாமம் கல்வி வலயம்**
**மருதனார்மடம்**
**சுன்னாகம்**





# முகங்களும் மூடிகளும்



நேற்றுக்காலையில் அவன் கிராமத்தினுள் நுழையும் போது, மன்னார்த் தளபதியின் மரணத்தை யொட்டிக் கிராமத்தைத் தோரணம், மாவிலை, வாழைமரம், தென்னங் கன்றுகளால் நிரப்புவதில் கிராமம் முழுவதுமே சுறுசுறுப்பாக மூழ்கியி ருந்தது.

சந்தியில் படம் வைத்து ஊதுபத்தி கொழுத்தும் வேலையில் ரகு, ரவி, குமரன் எல்லாரும் மும்முரமாக நின்றனர். இவனுக்கு உள்ளூர ஒரு நிறைவு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" சனங்கள் எங்களை மதிக்கத் தொடங்கிட்டுதுகள்!...." வாழைக் குட்டிகளையும், தென்னங்கன்றுகளையும் அநியாயமாய்க் கொலை செய்ய வேண்டாம் என்று இவன் சொல்ல நினைத்த போதும், அவர்களின் உணர்வு பூர்வமான செயற்பாடுகளில் தனது அறிவு தடை போடக் கூடாது என்ற நினைவுடன் ஒன்றும் பேசாமலே வந்து விட்டான்!

மழைத் தூறலையும் பொருட்படுத்தாமல் மணல் மேட்டில் அமர்ந்திருந்தான். பக்கத்தில் அந்தப் பெரிய ஆலமரம்! முன் பெல்லாம் இந்த ஆலமரத்தை ஒவ்வொரு நாளும் பார்ப்பான்.

அது ஒரு அமைதி!

குச் சொழுங்கையால் யாராவது சைக்கிளில் வந்து, அவனுடன் சிறிது நேரம் கதைத்துக் கொண்டிருந்தால் நன்றாக இருக்கும் போலிருந்தது. அப்படிக் கதைத்து எவ்வளவு காலமாயிற்று?

அவன் எட்டி எட்டிப் பார்த்தான். யாரும் வரவில்லை. ரகு, ரவி, குமரன் ஒருவரும் வரவில்லை. காலையில் கோயிலடிக்கு வருமாறு இவன் கேட்டிருந்தும் வரவில்லை. ஏன்?

ரவி இந்த ஆலமர வேரில் இருந்து பாடுவானே ஒரு பாட்டு! "சிங்கத் தமிழன் தம்பி" என்று! அந்தப் பாட்டு மனதை எவ்வளவு உயர்த்தி விடும்!

குச்சொழுங்கை, கோயில் வீதியோடு வந்து இணையும் இடத்தில் இரண்டு ஆடுகள் மட்டும் குனிந்து இரை பொறுக்கிக் கொண்டிருந்தன. கார்த்திகை மழைக்கு முளைத்திருந்த பசும் புல்லின் ருசியில், அவனைப் போலவே.... மழை பற்றி அக்கறை கொள்ளாமல் .........!



இவன், ரகு, ரவி, குமரன் இவர்களை எல்லாம் விட உயர்ந்து விட்டான். அந்த உயரந்தான் அவர்களுக்கும் அவனுக்குமான அந்நியோந்நியத்தைக் குலைத்து விட்டதா? அவர்கள் எல்லாம் இம்முறை ஏ.எல் சோதனை எடுக்கிறார்கள். அவன் எடுக்க வில்லையாயினும் அவர்களை விட உயரம்! விளையாட்டுக்களில் இவனுக்கிருந்த திறமை நாலு பேரும் விரும்பிய ஒன்றில் இவன் வெற்றி பெற வாய்ப்பு அளித்தது. வெற்றி பெறாதவர்கள்?

இருட்டு இன்னும் முற்றாகப் பிரியாத அதிகாலை நேரம்! கடலில் எழுந்து வரும் ஊதற் காற்று வெறும் மேனியில் பட்டுக் குளிர்ந்து விலகுகிறது. அவன் உதடு விலகாமல் சிரித்துக் கொண்டான். தனது நெஞ்சில் வருவது சந்தோஷந்தானா........ அல்லது துயரமா என்று அவனுக்குத் தெரியவில்லை. தளபதியின் மரணத்தையொட்டி நேற்றுக் கட்டப்பட்ட தோரணங்கள் சற்றுக் காய்ந்த நிலையில் மேலே தொங்கின. மன்னார்த் தளபதியை இவர்களுக்கு ஒரு போதும் நேரிலே கூடத் தெரியாது!

இவனை எல்லாருக்கும் தெரியும். கல்லூரியில் படிக்கும் போது...... இந்திரன் மாஸ்டர் எப்போதும் அவனைக் கேலி செய்வார். கிண்டல் செய்வார். ஆனால் அந்தக் கிண்டலிலும் ஒரு ஆழமான பிரியம் இருக்கும். அவர் விஞ்ஞான பாடத்தில் கேட்கும் கேள்விக்கு இவன் பிழையாகப் பதில் சொல்லி விட்டால், "உன்ரை மறு மொழிக்கு ஒரு வாழைப்பழத் தோல் மாலையும் போட்டு, வெறுஞ் சோடாப் போத்தலும் வாங்கித் தரவேணும் குடிக்க .......!" என்று சொல்லிச் சிரிப்பார்.

நேற்று மாலை தற்செயலாக அவரை வழியில் கண்டான். அவர் ஒரு சிறு சிரிப்புடன் இவனைத் தாண்டிச் சென்றுவிட்டார். அவர் நின்று இவனை ஏதும் கிண்டல் செய்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் போல் இவன் உணர்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூன்று வருடங்களுக்கு முன் இப்படித்தான் ஒரு பொழுது புலராக் கருமை வேளையில் தடதடத்துறுமின கவச வண்டிகள். அப்போதுதான் ரஞ்சன் பிடிபட்டான். ரஞ்சனைப் பூஸாவுக்குக் கொண்டு போன பிறகு இவனை இங்கிலாந்துக்கு அனுப்பிவிட அப்பா எவ்வளவோ முயன்றார். இவன் ஒரு நாள் அதிகாலையில் திடீரென்று தான் விரும்பிய இடத்திற்குப் போய்விட்டான்.

கோயில் பக்கம் இருந்து மணிகேட்டது. திருவெம்பாவை மணியோ? மழைத்தூறல் - சத்தத்திற்குள் கலந்து வந்த மணிச் சத்தம் வினோதமாக நன்றாக இருந்தது. திருவெம்பாவை கூட இம்முறை கார்த்திகை மாதத்தில் வந்து விட்டது.

"எத்தினையோ வருஷமாய்....... அஹிம்சை, அஹிம்சை, என்று மாறாமல் கிடந்து அழிந்த தமிழனே மாறிட்டான். நான் மாறப்பிடாதோ?" என்று வழமையாய் மார்கழியில் வரும் திரு வெம்பாவை இம்முறை கார்த்திகையில் வந்து விட்டது.

இவன் எழுந்து மணிக் கோபுரப் பக்கம் சென்றான். அங்கு மணி அடித்தது ஐயரல்ல! விசர் நேசம்மா! மகன் கொழும்பில் ஐம்பத்தெட்டில் உயிருடன் கொழுத்தப்பட்ட நிகழ்வுடன் விசராகிப் போன நேசம்மா!

"என்னைத் தெரியுதோ நேசம்மா? சுப்பிரமணிய வாத்தியாற்றை மோன் செந்தில் ........."

"கறி வேப்பிலைச் சுப்பிரமணிய வாத்தியாரோ! தெரியும், தெரியும் ......" என்று தொடங்கிய நேசம்மா தொடர்ந்து.

"ஏ, பி, சி, டி ......... கிழவன்ரை தாடி ...... ஏறோ பிளேன் வருது..... குண்டு போடுது ......." என்று வழமை போலத் தொடர் பற்றுப் பேசிக் கொண்டு, நிலத்தில் அமர்ந்து மணலில் மாம்பழம் கீற ஆரம்பித்து விட்டாள்.





இவன் திரும்பியும் வந்து மணலில் அமர்ந்தான். கோயிலின் மேற்குப்புற வீதியில் பிரிந்து செல்லும் சந்தியில் புதிதாய் எழுந்திருக்கும் சிலை மங்கலாய்த் தெரிந்தது. மூதூரில் வீர மரணம் அடைந்த போராளி ஒருவனுக்குச் சிலை எழுப்பியிருக்கிறார்கள். "சிங்கப்பூர்ச் செல்லையாவின் அன்பளிப்பு ........." என்று கீழே பெரிய எழுத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

பெரிய ஒழுங்கை முகப்பில் ஓர் உருவம் தென்பட்டது. காஞ்சனாவாக இருக்குமோ? கூர்ந்து பார்த்தான் !

இந்த ஊரில் இவனுக்கு அவள்தான் மிக உகந்தவளாக இருந்தாள். காற்சங்கிலி அணிந்த அவளது கால்களில் இவனுக்கு நிறைய விருப்பம் இருந்தது. காஞ்சனாவை ஒரு முறைகாண முடியலாம் என்ற ஆவல்தான் அவனை இவ்வளவு தூரம் இழுத்து வந்தது. காஞ்சனாவைச் சந்திக்க முடியவில்லை.

அருகில் வந்த பிறகுதான் தெரிந்தது. அப்பா கூடையுடன் சந்தைக்குப் போகிறார். அப்பாவுக்கு வீட்டுப்பாரம் அதிகந்தான். அவர் எல்லார் மேலும் எந்த நேரமும் துள்ளிப் பாய்வதற்கு அந்தப் பொறுப்பும் ஒரு காரணமாக இருக்கலாம். அம்மா இருந்திருந்தால்...! நிலைமை வித்தியாசமாக அமைந்திருக்குமோ என்னவோ?

அம்மா இறுதி நேரத்தில் ... ஆஸ்பத்திரியில் கிடந்த நினைவுகள்! இவனைக் கட்டி அணைத்து, "சமுதாயத்திற்குப் பயனுள்ள பிள்ளையா வளந்திடு ராசா!" என்று கண்ணீர் துளிர்க்கச் சொன்ன சொற்கள் எத்தனையோ மாரி காலங்களைத் தாண்டி இப்போது போல் ..... மனதில் பசுமையாய் நின்று விட்டது.

அவன் அம்மாவின் ஆசையைக் காப்பாற்றவில்லை என்று சொல்ல முடியாது. சமுதாயத்திற்கு அவனால் எவ்வளவு பயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை அப்பா இப்போது உணராமல் இருக்கலாம். ஆனால் உண்மை எப்போதும் எங்கும் ஒளித்துக் கொள்ளாது.

அப்பா அவனையும் மணலையும் தாண்டி அமைதியாகச் சென்றார். அந்த அமைதியில் கடுமையான உஷ்ணம் இருந்தது அவனுக்குத் தெரியும்.

அமைதியின் மோனத்தில் அலை எறிந்து கிடந்த கீற்று முகில்களினூடே சூரிய ஒளிக்கதிர்கள் தெறித்துப் பரவின.

அப்பாவுக்கு அவன் இதில் சேர்ந்து கொண்டது பிடிக்கவில்லை. அவன் ஒரு 'டொக்டராக' வரவேண்டும் என்பதே அப்பாவின் எதிர்பார்ப்பு. முடியாத ஒன்றைச் செய்ய வேண்டும் என்று எதிர்பார்த்து அவரே ஏமாந்து போயிருப்பதற்கு அவன் எவ்விதத்திலும் பொறுப்பாக முடியாது!

வகுப்பில் முதலாக வருகிற அன்ரனே போன வருடம் 'நாலு எஸ்' எடுத்திருக்கிறானாம். வகுப்பில் பத்தோ..... பதினைந்தோ இவன் நிலை. இவன் 'டொக்டராக' வரவேண்டும் என்பது அப்பாவின் விருப்பம்.

கோயில் மதிற் சுவர்களில் பல கண்ணீர் அஞ்சலிகள் ஒட்டப்பட்டிருந்தன. அவற்றில் பல சனசமூக நிலையத்தினால் வெளியிடப்பட்டிருந்தன. அப்பா சனசமூக நிலையத் தலைவர்!

அப்பாவுக்கும் சுயநலந்தான். தானும் தன் குடும்பமும் சிறப்பாக வாழ வேண்டும், புதியவீடு, ரி. வி, டெக், ஹொண்டா, திறி இன் உவண், அன்ரனா, மிக்ஸி, கிறைண்டர், ஐஸ்கிறீம் செற்..... இவற்றுடன்! இதற்கு மேல் சிந்திப்பது அப்பாவுக்குக் கஷ்டம்!



மூத்த தலைமுறை தன் நரை மயிர்களைக் கறுப்பு மயிர்களுக்கிடையில் மறைக்க எவ்வளவுதான் முயன்றாலும் அந்த நரைமயிர் இடையிடை வெளியே துருத்திக் கொண்டு தோன்றித்தான் விடுகிறது.

தன் ஆற்றாமைகளை உள்ளே அமுக்கிக் கொண்டு வாழ்ந்த அப்பா, நேற்று இப்படித்தான் வெடித்துக் கத்தினார். அப்பா சந்தையில் கத்தரிக்காயும் கீரையும் வாங்கி வந்திருந்தார். அக்கா பார்த்து விட்டு,'' கத்தரிக்காய் கழுவேக்கை ஏதோ எண்ணையாய் வருது.... மணக்குது....... எண்ணை அடிச்ச காய் போலை கிடக்கு... சமைக்கிறதோ........ வேண்டாமோ?'' என்று கேட்டாள்.

இவன் அப்போது தான் வந்து முற்றத்தில் நின்றான். அவன் எதிர்பார்த்த வரவேற்பு எதுவும் கிடைக்கவில்லை. அப்பாவின் முகத்தில் சிறிது ஆச்சரியம் மட்டும் தெரிந்தது. தான் அந்நியமாய். ஒதுங்கி நிற்க முடியாமல் இவன் உள்ளே......... அக்காவின் அருகில் சென்று, ''கீரையிலையும். அடிச்ச எண்ணை அப்பிடியே கிடக்கு, இது சமைக்க வேண்டாம் அக்கா...... பொல்லாத நஞ்சு'' என்று கூறிவிட்டான்

''நாட்டைக் காக்க வெண்டு வெளிக்கிட்டுப் போனவர். போய்த் துலையிறது தானே! பேந்தேன் வருவான்..... வந்து வீட்டு வேலையளிலை தலையிடுவான்.....?'' பலமாய்க் கத்தினார் அப்பா.

ஒருவனை வெறுப்பது என்பது...... அவன் மகனாகவே இருந்த போதும் கூட...... மிகவும் இலகுவானது என்று அந்தக் கணத்தில் இவனுக்குத் தோன்றியது.

இந்த வீட்டுக்காக..... இவன் ஒன்றுமே செய்யவில்லையா? இங்கிருந்து வெளியேறுமட்டும்...... கடைக்குப் போய்ச் சாமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்குவது இவன்தானே! எத்தனை நாள் அக்காவுடன் சேர்ந்து சமைத்தும் கூட இருப்பான். இவன் காய்கறித் தோட்டம் போட்டிருந்த இடம் கூட..... இப்போது கட்டாந்தரையாய்க் கிடக்கிறது. அதெல்லாம் அப்பா மறந்து விட்டாரா?

அவனுக்குள் இருந்த மகிழ்வெல்லாம் அந்தக் கணத்திலேயே தொலைந்து போனது. வீட்டில் யாருடனும் பேசவே கூடாது போலவும், அப்பா உட்பட எல்லாருடனும் ஒரு முறை பேசிவிட்டுப் போக வேண்டும் போலவும் ஒரு வினோதமான மனக் கஷ்டம்.

விளையாட்டுத் துவக்கினால் ஆமிப் பொம்மை சுட்டு விளையாடிக் கொண்டிருந்த தங்கை மட்டும் இவனைக் கண்டு சிரித்தபடி ஓடி வந்தாள்.

"அண்ணை, எனக்கென்ன வாங்கிக் கொணந்தனி?" என்று கேட்டாள். அப்போதுதான் அவளுக்கு ஒரு "காண்டோஸாவது" வாங்கி வந்திருக்கலாம் என்று இவனுக்குத் தோன்றியது.

எந்தக் குழப்படியுமே இல்லாத அமைதியான பையனாக இருந்த அவன் திடீரென்று ஒருநாள் புறப்பட்டுப் போய்விட்டது அப்பாவுக்கு மாத்திரமல்ல... அக்காவுக்கும் தங்கைக்கும் மாத்திரமல்ல...... அந்தக் கிராமத்திற்கே ஒரே ஆச்சரியமாய்க் கிடந்திருக்கும் என்பது அவன் எதிர்பார்த்தது தான். ஆனால்.... மூன்று வருடங்களுக்குப் பின் பூரண பயிற்சி பெற்று அவன் திரும்பி வருவது..... திரும்பி வந்து விட்டுப் போவது அளவற்ற ஆனந்தத்தையும் அமைதியையும் கொண்டு வந்து எல்லாரிடமும் காட்டி விட்டு எடுத்துப் போவது மாதிரி இருக்கும் என்று அவன் நம்பியதுதான் பிழையாகப் போய் விட்டது.

எல்லாரும் சொல்கிறார்கள்... சனங்கள் மாறி விட்டார்கள் என்று! இல்லை! அப்பாவைப் போன்ற பலர் அடிப்படையில்



மாறவில்லை. பாம்பு தோலைக் கழற்றினாலும் பரிசுத்தவான் ஆவதில்லை! மூத்த தலைமுறைதான் புரிந்து கொள்ளவில்லை என்றால்...... அக்காவாயினும்...... அப்பா இவனைப் பெருங் குரலெடுத்துப் பேசிய பிறகு அவள் அழுகிறாள்.

தன் தம்பி குவைத்துக்குப் போய்... லட்சம் லட்சமாய்ப் பணம் சேர்த்துத் தனக்கு வீடு கட்டி, தன் கணவனை விலைக்கு வாங்கி, பிறகு தன் மகளுக்கும் மாமாவாக இருந்து நாற்பது வயது வரை திருமணம் செய்யாமல் உழைத்துத்தர வேண்டும் என்று எதிர்பார்க்கும் சாதாரண யாழ்ப்பாணத்து அக்கா......!

அவள் அழத்தான் வேண்டும்! வீட்டில் ஒருவருமே சரியில்லை என்ற எண்ணம் மனதில் கசப்பாய் வந்தது.

காலை நேரக் காற்று காவிக் கொண்டு வந்த கோயில் பூந்தோட்டத்து மல்லிகை மணத்தைக் கூட ரசிக்க முடியாதபடி மனம் கசந்தது.

வேகமாய் வந்த சைக்கிள் ஒன்று அவனுக்கருகில் 'பிறேக்' பிடித்து நின்றது.

"ஹலோ செந்தில்....... எப்பிடி? எப்ப வந்தனி? ராத்திரி நாங்கள் தான் கடற்கரையிலை 'சென்றி' க்கு நிண்டனாங் கள்........"

"ஏதும் நடந்ததே? சத்தம் கேட்டுது......"

"ஓ........ வழக்கம் போலை வெளிக்கிடப் பாத்தவங்கள்.... ஹெலிக்கொப்டருக்கு 'விவ்ரி கலிபர்' அடிச்சம்........ கீழையும் இரண்டு மூண்டு பேர் விழுந்திருப்பினம். திரும்பிட்டாங்கள்....."

"ஐ...... சீ......... "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திடீரென்று அந்த உற்சாகமும் சந்தோஷமும் கலந்த ஊற்று எங்கிருந்து புறப்பட்டதென்று தெரியவில்லை.

சென்ற இரவு அவன் நித்திரை செய்யவில்லை. வீட்டின் பின் தோட்டத்தில் ஒரு பதுங்கு குழி அமைத்திருக்கிறான். அப்பா, அக்கா, தங்கை மூவரும் பதுங்கிக் கொள்ளமுடியும்.

மாலையில் தொடங்கிய அந்த வேலை முடிய...... இரவு பத்து மணியாகிவிட்டது. அதன் பிறகு, தான் வாழ்ந்த வீட்டின், கிராமத்தின் ஒவ்வொரு பகுதியையும் மீண்டும் மீண்டும் பார்க்க ஒரு விருப்பம்! இரவு முழுவதும் கழிந்து விட்டது.

ஒரு வேளை இந்த மாதத்தில்.. அரசு நடத்த நினைக்கும் உக்கிரமான மும்முனைத் தாக்குதலில் அவன் இறந்து விடக்கூடும்.

சாவதற்காக அவன் வாழவில்லை. ஆனால்.... எப்போதும் வாழ்வதற்காக ஒருவேளை அவன் சாகக்கூடும். அதற்குள் எல்லாரையும் எல்லாவற்றையும் மீண்டும் ஒரு முறை பார்த்து விட வேண்டும். கடல் நுரை போல் பொங்கி வரும் ஆசைகள்!

வெளியே மோன நிசப்தம்!

மல்லிகை மணம் முழுவதையும் விழுங்கிவிட்டுத் திடீரெனவெறோரு மணம் 'சதக்' கென்று மூக்கினுள் நுழைந்தது.

“என்ன மச்சான்?”

“ ஆரோ என்றெக்ஸ் அடிக்கினம்! ”

திரும்பி வடக்கே பார்த்தனர்.





கரடிச் சுப்பர் கத்தரிக்கன்றுகளுக்கு மருந்து அடித்துக் கொண்டிருந்தது தெரிந்தது. அவரைக் கண்டவுடன் தான் இவனுக்குத் திடீரென்று பொன்னுக் கிழவியின் நினைவு வந்தது.

கண்ணனையும் அழைத்துக் கொண்டு கிழவியின் வீட்டை நோக்கி விரைந்தான். வழியில் கேட்டான்.

“எப்பிடிக் கண்ணன்? ஊரிலை சனம் என்ன கதைக்குது?”

“பொதுவா எங்களைப்பற்றி ஒரு நல்லெண்ணம் இருக்குது. பல விஷயங்களை. முக்கியமா ஆமி வெளிக்கிட முடியாமல் இருக்கிற நிலையை எல்லாரும் பாராட்டினம்......”

“யாரும் செய்தாப் பாராட்ட அவை ஆயத்தம். ஆனால், தங்கடை பிள்ளையள் டொக்டராய் வந்திட வேணும்.....”

இவனது குரலில் எரிச்சல் மிகுந்து காணப்பட்டது. பொன்னுக் கிழவி வழக்கம் போலவே மூக்கைத் தோண்டிக் கொண்டிருந்தாள். கிழவிக்கு மூக்கில் எப்போதும் சளி வரண்டு போய் இருக்கும். அதைத் தோண்டிக் கொண்டெயிருப்பாள். இந்தப் பழக்கம் கிழவிக்கு எப்போது முதல் வந்தது என்று சொல்ல முடியாது. ஒளி மிகுந்த பெரிய கண்கள் கிழவிக்கு! அவளின் எண்பது வயது முழுவதையும் அந்தக் கண்களில் வாங்கிப் பத்திரப்படுத்தி வைத்திருப்பது போல் இருக்கும். ஆசை மிகுந்த கண்களும் கூட!

இவனது நிழல் தெரிந்ததும்,

“ஆர்? உதார்? ஓ....... எங்கடை செந்திலே....? எப்ப தம்பி வந்தனி? இனிப் போக மாட்டியோ?” என்று விசாரித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழை பெரிதாகப் பெய்து கொண்டிருந்தது. இவன் போவதற்கு முதல் நாளும் இப்படித்தான் கடும் மழை பெய்தது. அதுவும் ஒரு மாரிகாலந்தான்!

தன்னிடம் தன் வீட்டார் காட்டி வந்த அன்புப்பூவின் பல இதழ்கள் உதிர்ந்து போய் விட்டதாய் உணர்ந்த நிலையில் இருந்தவனுக்குக் கிழவியின் அன்பு அதிசயமாயும் ஆறுதலாயு மிருந்தது. அம்மா இருந்திருந்தால்..... இப்படித்தான் அன்புடன் விசாரித்திருப்பாள். தான் எல்லாரையும் நினைவில் கொண்டு பார்க்கவந்த பலன்கிடைத்து விட்டதான ஓர் உணர்வைக் கிழவி இவனிடம் ஏற்படுத்தினாள்.

இவன் கிழவிக்குப் பக்கத்தில் சென்று அமர்ந்து கொண்டான். கிழவியின் உடலில் இருந்து எழுந்து வந்த பழஞ்சேலை மணமும், வியர்வை மணமும் கலந்த ஒரு வாடை கூட இவனுக்கு மிகவும் பிடித்திருந்தது.

"அப்ப தம்பி அங்கை உனக்கு என்னென்ன பழக்கின வங்கள்? பிளேனைச் சுடவும் பழக்கின வங்களே?"

இவன் சிரித்தான். அந்தச் சிரிப்புக்கு எப்படி வேண்டு மானாலும் அர்த்தம் செய்து கொள்ளலாம். அவனைச் சுற்றிப் பரிகசிப்பது போலிருந்த மிருதுவற்ற சூழ்நிலை கூட இப்போது மிருதுவாகிவிட்டது போல ஒரு நினைவு!

"எல்லாம் பழக்கினவங்கள் ஆச்சி!"

கிழவி எழுந்து அருகில் வந்து இவனைத் தடவிப் பார்த்தாள். வயிற்றடியில் சாரத்துக்குக் கீழே மிதப்பாக இருந்தது.



"இதென்ன மோனை மடிக்கை?"

"கொட்டப் பெட்டி ஆச்சி!"

பெரிதான சிரிப்பு!

பின்னர் அவன் அதை எடுத்து வெளியில் காட்டினான். "இது சின்னத் துவக்கு ஆச்சி. பிஸ்டல் எண்டு சொல்லிறது...... தற்பாதுகாப்புக்கு....." ஆச்சி அதை வாங்கிக் கவனமாய்ப் பார்த்தாள்.

கிழவியின் மகன் சுப்பர் சாக்கு நிறையக் கத்தரிக்காய் கொண்டு வந்தார்.

"அண்ணை ஏன் கத்தரிக்காய் கனக்க ஆய்ஞ்சு கொண்டு வாறியள்?"

"சந்தைக்குக் கொண்டு போப் போறன்......."

இவன் திகைத்தான்.

"இப்பதானே மருந்தடிச்சீங்கள்?"

"மருந்தடிச்ச கையோடை பிடுங்கினால் வாடாது. தரகர்மார் விரும்பி எடுப்பினம். நல்ல விலை போகும்....."

"இல்லை அண்ணை. இது பிழையான வேலை. எத்தினையோ மனுசரின்ரை சாப்பாட்டுப் பிரச்சினை. இதை இப்பிடியே நீங்கள் கொண்டு போய் விக்கப்பிடாது......"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன செந்தில்? எங்கையோ இருந்து வந்து எங்கடை வீட்டு அலுவலிலை தலையிடப் பாக்கிறாய்?"

கிழவியின் குரல் இப்போது சற்று உயர்ந்திருந்தது.

"இந்த மருந்து உடம்புக்கை போயும் பிரிந்து அழியாது. பொல்லாத நஞ்சு........ எத்தினையோ புது வருத்தங்களை வரப் பண்ணும். இந்திரன் மாஸ்டரைக் கேட்டுப் பாருங்கோ.........."

அவர்களுக்குப் புரியச் செய்ய அவன் கூடியவரை முயன்று பார்த்துத் தோல்வியுற்றான்.

"உனக்கு அங்கை ஆமியைச் சுடப் பழக்கினவையோ? எங்கடை வரும்படியிலை கை வைக்கப் பழக்கினவையோ?"

சுப்பர் மிக்க கோபமாகக் கேட்டார்

"தமிழீழம் எடுக்கிறது பெரிய பிரச்சினை இல்லை. அதுக்குப் பிறகும் பல பிரச்சினையள் இருக்கு. அதிலை முக்கியமானது இந்தச் சூழல் மாசடையிற பிரச்சினை. இந்தக் கத்தரிக்காயை நீங்கள் சந்தைக்குக் கொண்டு போக நான் கடைசி வரைவிட மாட்டன்....."

இவன் திடமாகக் கூறிவிட்டுச் சாக்குடன் கத்தரிக்காயைத் தூக்கிக் கொண்டான். கிழவி திடீரெனக் கடும் முகமாற்றம் பெற்றாள்.

"அறுவான், நீ நல்லாயிருக்க மாட்டாய்! எங்கடை பிழைப்பிலை மண் விழுத்திறாய்.... நீ ஆமி சுட்டு அழியப் போறாய்.......!"



கொடுமையான வெறுப்புடன் வரும் வார்த்தைகள் அவன் நடந்து கொண்டிருக்கும்போது பின்னாலிருந்து கேட்கின்றன. அபூர்வமான மனித மனங்கள்!

"நாளைக்கு ஒரு தாக்குதலிலை நான் செத்துப் போயிட்டால்.... எனக்கு மாலை மரியாதை செய்து துக்கம் கொண்டாடி, சிலை வைக்கப் போற ஆக்கள்..... எல்லாரையும் கண்டு கதைச்சிட்டன். இனி நான் வெளிக்கிடப் போறன். இண்டைக்குப் பின்னேரம் நான் அங்கை நிக்க வேணும்......"

என்று கண்ணனிடம் கூறிக் கொண்டே வேகமாய் நடக்கிறான் இவன். இவனது உதட்டோரத்தில..... ஒரு புன்னகை தெரிந்து மறைகிறது.. கண்களில் பரிதாபத்துக்குரிய சோர்வு தென்படுகிறது.

நீங்கள் யார் அவனுக்கு? அந்தரங்க சிநேகிதனா? அப்படியானால் கூட அவனால் தன் மன உணர்வுகளை உங்களுக்குச் சொல்ல முடியாமலே இருக்கும்.

✦ ✦ ✦

(நோர்வேத் தமிழ்ச் சங்கம் நடத்திய சிறு கதைப் போட்டியில் முதற் பரிசு பெற்ற கதை - 1989)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

# விஷம்

பூவிதழ் உதிரச் சிரித்தது காடு!



கரடி, நரி, ஓநாய், பல்லி, பாம்பு என்ற பெரும்பான்மையான ஊனுண்ணி விலங்குகளெல்லாம் போட்ட 'ஓ' என்ற கும்மாளக் கூச்சலில் தாவர உண்ணிகளின் மனங்கள் வெந்து, நொந்து போயின. ஆனால் அவை கைதட்டாமல் இருக்க முடியாது. ஏனெனில் சிங்கராஜாவுக்குக் காடெல்லாம் செவி! காட்டுத் தாவரமெல்லாம் கண்!





தொட்டாற்சுருங்கி இலைகளைத் தொடுவதும், விடுவதுமாய் இருந்த பூனைகள், உன்னிப்பாய்க் கவனித்துக் கொண்டன- சிறு பான்மைத் தாவர உண்ணிகள் சத்தம் கேட்டும் கேளாமலும் மெதுவாகக் கைதட்டுவதை!

ஆடு, மாடு, முயல், வெட்டுக்கிளி, எலி, கங்காரு, கிளி எல்லாம் 'பாவத்தாரான' விலங்குகள்! மூர்க்கத்துடன் தாக்கவோ, யுத்தம் செய்யவோ பழகிக்கொள்ள முடியாத பாவி விலங்குகள். அவற்றினால் இந்த நீண்டகாலக் கெடுபிடி, இடிகளைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

பூனைகள் இடையிடையே சிங்கராஜாவின் குகைக்குக் கல்லெறியத் தொடங்கின. ஆடுகளும் கல்லுப் பொறுக்கித்தர வேண்டும் என அழுத்தின. அதன் பின்னர் ராஜாவின் அட்டகாசம் அதிகமாயிற்று.

இப்போது காட்டில் வறுமை!

உணவு வறுமை இல்லை, உணர்வு வெறுமை!

இந்தத் தாவர பட்சணிகளால் செய்யக் கூடிய ஆகக்கூடிய போராட்டம் ஊர்வலம் போதல்!

இன்று காலையில், காட்டின் பனி விலகமுன்னரே, அவை புறப்பட்டிருக்கின்றன. எல்லோரும் வரிசையாய், ஒருவர் பின் ஒருவராய்.......!

"யுத்த மென்ற சத்தமிங்கு ஓய்ந்து விட வேண்டும்"

"யுகங்களிலே அமைதி நிலை தொடர்ந்து வரவேண்டும்"

"விலங்குகளைப் பிடித்துச் செல்லல் தவிர்க்கப்பட வேண்டும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



''வேலியே பயிரை மேய்தல் விலக்கப்பட வேண்டும்''

கோஷங்கள் காதில் விழுகையில் மனங்கள் தவித்துக் கனக்கின்றன.

அவற்றின் கோஷங்களில் உற்சாகத்தை விடப் பரிதாபமே அதிகமாக வெளிப்பட்டது.

'தேறுதல்' என்ற பனித்துளிக்கு இந்த விலங்குகள் தாகமாய்த் தவிப்பது துல்லியமாய்த் தெரிந்தது.

அவற்றின் காட்டு ராஜாவான சிங்கத்தினால் அவை திட்டமிட்டுக் கொல்லப்படும் நிலையில், அவற்றுக்குத் தேறுதல் சொல்பவர் யார்?

அவற்றின் பார்வைகள் இருள்வெளியை ஊடுருவுகின்றன. யாராவது........ எந்தக் காட்டில் இருந்தாவது..... எந்த நாட்டில் இருந்தாவது........ எந்தக் கோளில் இருந்தாவது............ எந்த நட்சத்திரத்தில் இருந்தாவது........ எந்த நெபுலாவில் இருந்தாவது...... யாராவது உடனே உதவி செய்ய மாட்டார்களா?

இன்று காலை விடிவதற்கு முன் வந்த பயங்கர இரவில்...... சிங்கராஜாவின் ஏவலர்கள் நூற்றுக்கணக்கில் குரங்குகளையும், மான்களையும், அணில்களையும் பிடித்துச் சென்றனர். அவற்றின் சடலங்கள் எந்தக் குளத்திலும் மிதக்கலாம். எந்த மரத்திலும் தொங்கலாம். மரணத்தின் பறை ஒலிகள் சில்லென்று நெஞ்சைத் தாக்கும் சம்பவங்களைச் சகித்துக் கொள்ள முடியாமல் தான்......

நாள்தோறும் நடை பெறும் இந்த நிகழ்வுகள் அந்தக் காட்டில் நிலவிய அமைதியின்மையின் வயதைக் கூட்ட உதவின.





சுனை ஒன்றின் அருகே வந்த ஊர்வல விலங்குகள் உடலைப் புற்றரையில் எறிந்து படுத்தன. மனதின் சஞ்சலங்களை அப்படி எறிந்துவிட முடியவில்லை.

பறந்து வந்த செவ்வுடற் பூங்குயில் ஒன்று தான் பக்கத்துக் காட்டில் இருந்து வருகிறேன் என்றது.

''உங்களுக்கு ஆர் ராசா?'' கேட்டது பூனை

''........பாம்பு........''

''அங்கை ராச்சியம் எப்பிடி?''

''இப்பிடித்தான் கன பிரச்சினையள்.....''

''எங்கடை பிரச்சினையைப் பற்றி அவருக்குத் தெரியுமோ?''.

ஆவல் நிறைந்து கேட்டது பூனை.

''தெரியும்''.

''சிங்கராஜா செய்யிறது அக்கிரமம் எண்டு சொல்லுறார்''.

பூனைக்கு அடுப்பிலே பாலைக் கண்ட புளுகம், மற்ற விலங்களுக்கும் அதே நிலை!

''உனது சொந்த வீட்டின் வாசற்படி துப்புரவின்றி இருக்கும்போது, உனது அயல் வீட்டுக்காரனின் வீட்டுக்கூரை மேல் பனி படர்ந்திருக்கிறது என்று நீ முறைப்பாடு செய்யாதே'' என்று கூறப்படுவது பற்றிப் பாம்பு படித்திருக்குமோ? இல்லையோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரவெல்லாம் வாடை மழை உலுக்கிற்று. நித்திரையு மின்றி, விழிப்புமின்றி மோன நிலையில் இரவு நகர்ந்தது.

காலை விடிந்தது!

சுனையின் அல்கா படர்ந்த பச்சை நிற நீருக்குக் கவலைகள் இல்லை. ஆனால் சுருக்கங்களை அதற்குக் கொடுத்துப்பார்த்து மகிழ்ந்தது காற்று. ஊர்வலம் தொடர்ந்தது.

திடீரென்று மேலே படபடவென்று சத்தங்கள்! அச்சமடைந்த விலங்குகள் தலையை நிமிர்த்திப் பார்த்தன.

கீழை அடிவானைக் கீறியபடி கிளைவிட்டு மின்னல் பொறி ஒன்று தோன்றி மறைந்தது.

காகங்கள் சில வானில் தென்பட்டன, அவற்றின் சொண்டுகளில் காணப்பட்ட இறைச்சித் துண்டுகள் பொலு பொலு வென்று கீழே விழுந்தன.

''பாம்பு ராஜா உங்களுக்கெண்டு குடுத்தனுப்பினது பணியாரம் ....... சாப்பிடுங்கோ..... பாவம்.... பட்டினியா ஊர்வலம் போறியள்.....''

''நாங்கள் ஒருத்தரும் மச்சம் சாப்பிடுறேல்ல என்பதைச் சொல்ல யாரும் விரும்பவில்லை. 'பணியாரம்' என்றுதானே சொல்லப்பட்டது! இறைச்சித் துண்டுகளை யாரும் தொட்டுப் பார்க்காத போதும் மனதிலே ஒரு உற்சாகம்.......''

அட..... எங்களைப் பாவம் எண்டு சொல்ல.... ஆரோ இருக்கினம்........





ஒரு பிரபல ரஷ்ய எழுத்தாளர்...... நாகரிக உலகின் மேதை எனக் கணிக்கப்பட்டவர். ''நான் வீட்டில் இரவுச் சாப்பாட்டிற்குக் காலந்தாழ்த்தி வருகிறேனா இல்லையா என்பது பற்றிக் கவலைப்பட ஒரு பெண் எங்காவது இருப்பாளாயின்...... நான் எனது நூல்கள்.... எனது மேதைத்துவம் எல்லாவற்றையும் இழந்துவிட ஆயத்தமாய் உள்ளேன்'' என்றார்.

ஆம், யாரோ எங்களைப் பற்றிக் கவலைப்படுகிறார்கள் என்ற உணர்வு தரும் ஆறுதல் விபரிக்க முடியாத ஒன்று!

கொட்டாவி ஒன்று உருவாகி வாயைப்பிளக்க வைத்த பெருமையுடன், ஆட்டின் வாயில் இருந்து விடை பெறுகிறது.

''ஏன் கொட்டாவி விடுறாய்? எத்தினை தாவரம் நிக்குது காட்டில? இறைச்சி தின்னப் போறியே?''

கங்காரு தன் வயிற்றுப் பையில் மூன்றங்குலக் குட்டியைக் காவியபடி ஆட்டை உலுப்பியது.

பக்கத்துக் காட்டின் பாம்பு ராஜா உதவி செய்ய ஆயத்தமாகிறார் என்றவுடன், விலங்குகள் ஊர்வலத்தைக் கைவிட்டுப்பக்கத்துக் காட்டின் எல்லையைப் பேராவலுடன் பார்க்கத் தொடங்கின.

''பாம்புப் படை வருகுதாம்''.

''பாம்புகள் சிங்கப் படையைக் கடிச்சுப்போடுமாம்''.

''இனிமேல் எங்களுக்குப் பயமில்லையாம்''

வதந்திகள் வாயு வேகத்தில் பரவின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"உங்களுக்கு உங்கடை காட்டில பாதுகாப்பில்லையோ?"

"ஓம்"

"சரியாய்க் கஷ்டப்படுறியளோ ?"

"ஓமோம்......."

"ஆரும் கட்டாயம் உதவி செய்யத்தான் வேணுமோ?"

"கட்டாயம்!"

"சரி நாங்கள் வாறம்! "

விடைகள் யாவும் ஓமென்று வரக்கூடிய முறையில் கேள்விகளை அமைக்கும் சோக்கிரட்டீஸின் முறை இங்கு பெருவெற்றி பெற்றது.

பாம்பு சிங்கத்திடம் போயிற்று.

"உன்ரை காட்டில அமைதி இல்லை?"

"ஓம்...."

"உனக்குப் பூனையள் கரைச்சல் தருதுகள்"

"ஓமோம்"

"உன்னால சமாளிக்க முடியேல்ல.......?"

"நிச்சயமாய்!"

"எந்த நாளும் ஊர்வலமும், ஆர்ப்பாட்டமும்"





"உண்மைதான்!"

"சரி, நான் வந்து சமாளிச்சுத் தாறன்"

ஒத்துணர்வுச் சீர்மிய முறை அங்கும் வெற்றி பெற்றது.

உயிர்ப்பூ எடுத்து, ஒரு மாலை தொடுத்து, விழி நீர் தெளித்து, ஒரு கோலம் போட்டுப் பாம்புகளை வரவேற்றன, இந்தச் சாது விலங்குகள்.

பாற்கடலில் இருந்து அமுதம் மட்டுமே வரும் என்ற அங்கலாய்ப்புடன் கூடிய எதிர்பார்ப்பு.

பாம்புகள் வந்தன.

பெரும் எண்ணிக்கையில் வந்தன. பெட்டி படுக்கையோடு நீண்ட நாள் நிற்க ஆயத்தமாய் வந்தன.

ஆயிரக்கணக்கில் அவை வந்து இறங்கும் அழகைப் பார்த்து அதிசயித்து நின்றது காடு.

"இனிமேல் நாங்கள் நிம்மதியாய் மூச்சு விடுவம்..."

என்ற நினைப்புடன் உடல் மயிர்கள், செதில்கள் அல்லது இறகுகள் பறக்கச் சுகமான கனவுகளில் மூழ்கியபடி தூங்கிப் போயின தாவர உண்ணிகள்.

ஈக்களைப் பிடிக்கத் தேன்துளி போடப்படுகிறதென்று யார் நினைத்தார்கள்?

நாசப்புற்றில் இருந்து வேஷச் சர்ப்பங்களும் தலைநீட்டும் என்று யார் எதிர்பார்த்தார்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கள்ளியும் முள்ளியும் காதல் வளர்த்த காட்டிலே கிள்ளிப் பிடிக்க இடமின்றி நிறைந்தன பாம்புகள்.

திரும்பிய இடமெல்லாம் பாம்புகள்.

கால் மிதிக்கும் இடமெல்லாம் பாம்புகள்.

"உங்களைப் பாதுகாக்கப் போறோம்" என்று கூறிவந்த பாம்புகள், சிங்கராஜாவின் குகையில் கையெழுத்துப் போட்டன.

அப்போதுதான்.......

நெஞ்சில் ஒரு வலி! புத்தியில் ஒரு வேதனை!

நன்மையும் தீமையும் எண்ணங்களைப் பொறுத்ததா?

" நாப்பத்தெட்டு மணித்தியாலத்தில் எல்லாம் முடியும்"

என்று விஷம் கக்கிப் புறப்பட்டன பாம்புகள்.

தணல் ஊதப்பட்டது. சருகுகள் பற்றத் தொடங்கின. அகப்பட்ட விலங்குகளை அடிபோட்டு வீசின. அடியோடும் அழித்தன. கோட்டில் விட்டன. கீறியும் கிழித்தன.

பூனைகளைத் துரத்தின. பூனைகள் உறப்பில் ஏறிவிட்ட போது, புள்ளிமான்களை விழுங்கி ஏப்பம் விட்டன. எலிகளைக் கொண்டு போனால் பூனைகள் வரும் என்றன. பெண் விலங்குகளை விஷப் பற்களால் பிறாண்டி வீசின.

இலைகூட அசையாத புழுக்கம் மனதில் நிரம்பிற்று. "ஏன் இந்த அநியாயம்? யார் இந்தப் பசுக்கன்றை இப்படிக் கொன்று போட்டது? மனுநீதி கண்ட சோழனின் கதையை இவர்கள் கேள்விப்பட்டது கூட இல்லையா?" என்று கேட்டவர்க்கெல்லாம்





"பசுக்கன்றையா? கொன்றதா? அதூ....... உங்கள் வீட்டுப் பூனையல்லவா கொன்று போட்டது? நீங்கள் ஏன் பூனைக்குச் சாப்பாடு போட்டனீங்கள்?" என்று கூறின.

மார்பின் நடுக்குழியில் வலி "விண் விண்" என்று தெறித்தது.

"இந்தக் காட்டின் விலங்குகளுக்கு நாங்கள் நல்ல தண்ணீர் விநியோகம் செய்கிறோம்" என்று கூறிக்கொண்டு காட்டைச் சுற்றிச்சுற்றி வந்தன.

நியாயத்துக்கு விலை அதிகம்! ஏழைகளால் வாங்க முடியாது. சட்டம் என்பது வசதி படைத்தோருக்கு மட்டும் வழங்கப்பட்ட சௌகரியம். யாரிடம் நீதி கேட்பது?

நீதிமன்ற நிழலிலேயே குற்றுயிராய்ச் செத்துக் கிடந்தது நீதி. வழக்கமாய் இந்தக் காட்டிலே பட்டொளி வீசிப் பவனிவரும் பௌர்ணமி நிலவு கூடச் சின்ன மேக இடைவெளி யன்னலிலே சிறைபட்டுக் கிடந்தது.

அழமுடியவில்லை.

ஆத்திரமும் வரவில்லை.

"கடவுளே" என்று துவளத்தான் முடிந்தது.

"கண்டு பிடி.... உனக்குள்ளிருந்து ஒரே ஓட்டமாய் முடிப்போய்விட்ட மனச்சாட்சியை......" என்று பாம்பிடம் சொல்லவும் துணிவு யாருக்கும் இல்லை.

வெள்ளத்தில் விழுந்தவன் முள்ளுவேலியை எட்டிப்பிடித்த கதையாகிப்போன பின்னர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனதின் வேதனைக் குழம்பில் அழுந்தி அழுந்தி, ஆற்றாமையுடன் வெளிவந்தன பெரு மூச்சுக்கள் பல. மீண்டும் ஊர்வலம் போயின விலங்குகள். சிங்கராஜாவின் குகைக்கு நேரே சென்றன.

படீர் படீர் என்று தடித்த மழைத்துளிகள் அங்கும் இங்கும் சொட்டுச் சொட்டாய் விழுந்து தெறித்த ஒரு காலைப்பொழுதில்,

"எத்தனையோ நாளாய்த் தூக்கம் இல்லை, வந்தாலும் திடும் திடும் என்று முழிப்போடு வரும் தூக்கமாய் இருக்கிறது. இந்தப் பாம்புகள் இருக்கும் வரை இங்கு நிம்மதி இல்லை...." என்றன.

என்ன நினைத்ததோ? சிங்கம் திடீரென்று,

"பாம்புகள் எல்லாம் உங்கடை காட்டுக்குத் திரும்பிப் போங்கோ..." என்று உத்தரவு போட்டது. "என்ரை காட்டு விலங்குகளை நான் பார்த்துக் கொள்ளுறன், நீ போ" என்றது.

"நல்ல கதை இது, நீளமில்லை எண்டானாம். நான் போனால் உன்ரை காட்டில் இருக்கிற அப்பாவி விலங்குகளிற்கு ஆர் காவல்?" என்று கேட்டது பாம்பு

"நீயும் நானும் ஏன் பாம்பாய்ப் பிறக்கேல்ல?" என்று கேட்டது ஆடு.

"உன்ரை தாயும் என்ரை தாயும் பாம்பாய் இல்லாத படியால் ......." என்றது புள்ளிமான்.

பாம்பு விஷந்தான்.... விஷம் தொண்டையில்.... வாந்தி எடுக்க..........?

✦ ✦ ✦ ***(உள்ளம் - 2001 ஐப்பசி)***



# 3

# முகாமுக்குப் போகாத அகதி



ஒவ்வொரு நாளும் அவளுடைய மனம் கொஞ்சம் கவிதை, கொஞ்சம் நற்சிந்தனை கேட்டு வாங்கிக் கொள்ளும்.

அன்று காலையில் சுமார் ஐந்து மணிக்கு விழிப்பு வந்தபோது, திறந்திருந்த சாளரத்தினூடே, பனி மூடும் புகையிருளில் முகம் நனைத்த மரங்கள் மௌனமாய் நிற்பதைப் பார்த்தாள்.

இன்றும் வழக்கம் போல ஏ.எல் பரீட்சை மேற்பார்வைக்குப் போக வேண்டும் என்பதே முதலில் நினைவு வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



''அக்கா.... உந்த சுப்பவிசன் காசு வந்தோண்ணை எனக்குச் சப்பாத்து வாங்கித் தந்திடுங்கோ.....''

ஆரவாரம் அணைக்காத பஞ்சு மேனித் தங்கையின் வேண்டுகோள்.

''ஓமோம்....... அதுக்கேன் இப்ப விடியப்புறம் எழும்பி நிக்கிறாய்?''

''இல்லையக்கா, பொம்பர் வருது... அம்மா எழும்புங்கோ.... சின்னண்ணா எழும்பு... எடியே ரூபி எழும்படி.....'' அந்த வீட்டின் ஆறு ஜீவன்களையும் எழுப்புகிற தங்கையின் கண்ணில் தெரியும் பயம் கூடக் கலாபூர்வமாய் இருப்பதை ரசித்தபடி எழுந்து நற்சிந்தனைக் கொப்பியைப் புரட்டி அன்றைய சிந்தனையைப் படித்தாள்.

''வழி தவறிய குருடனுக்கு இருளும் ஒன்றுதான். ஒளியும் ஒன்று தான்'' என்பதை வாசித்தபடி, முகம் கழுவக் கிணற்றடிக்குப் போனபோது, சுற்றிக் கொண்டிருந்த பொம்பரின் முதலாவது குண்டு வெடிப்புக் கேட்டது.

''அப்பப்...பா...'' அன்றைய காலை அமைதியைக் கபளீகரம் செய்துவிட்டு ஒலி அண்மையில்தான் கேட்டது.

சரக்கென்று மனதில் ஒரு குலுக்கல்.

''என்ன நடந்தாலும் பரீட்சை நடக்கும். நான் நிண்டு மினக்கிட ஏலாது'' சிந்தனை மயிர்கள் ஒவ்வொன்றும் சிலுப்பி நிற்கையில் பொம்பர் குண்டுகளைப் பொழிந்து தள்ளிவிட்டு மறைந்து போனது.





''இது வழக்கந்தானே....?'' என்று அந்த நினைவை அகற்றிவிட்டு, வேலைகளைத் தொடர ஆயத்தமான போது -

நின்று நின்று, நேராகவும், முன்னும் பின்னும், தலைக்கு மேலும், காலுக்குக்கீழும் என்று அடுக்கெடுத்தன அவை. அவை என்ன எறும்புகளா? இல்லை - றவுண்டுகள்!

மூளையின் இருட்குகையில் ஒருசில விளக்குகள் பற்றிக் கொண்டன. மனதில் சிறகடித்த பாடல்கள் ஈசல் இறகுகளாய் உதிர்ந்து போயின. எப்படி இந்த இடத்திற்கு றவுண்ட்ஸ்வரும்? இந்த அதிகாலை நேரத்தில்?

''ஆமி மூவ் பண்ணிட்டான். ஐயோ பிள்ளையார் கோயிலடிக்கு வந்திட்டான்....?''

திடுதிப்பென்று தெருவில் அல்லோல கல்லோலம்! திடீரென வெட்டிச் சரித்த மரம் போல வாழ்விழக்கத் தொடங்கியது ஊர்.

கொளுத்தல்கள், கைது செய்யப்பட்டோர்கள் மீது கொடூரமாய் நிகழும் ஆக்கினைகள் பற்றிய செய்திகளைக் கேட்டபடியே, ஊர்மக்களில் அநேகமானோரைப் போல, உடுத்த உடுப்புடனும், தன்னையே நம்பியிருந்த குடும்பத்துடனும் வெறிச்சோடிப் போன மனத்துடனும் அகதியானாள் அவள்.

ஊரின் எல்லைக்கு இப்பால் இருந்த வைரவர் கோயிலுக்கு வந்தாயிற்று. வெளியே இரவு மனம் மாதிரி அமைதியற்றிருந்த போது அம்மா சொன்னாள்

''இனி மேல் எங்கடை வீட்டின்ரை பனங்காயையும், எங்கடை பனையின்ரை கிழங்கையும் நாங்கள் பாக்க மாட்டம்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அக்கா, பப்பியை விட்டிட்டு வந்திட்டம்....... பாவம் றவுண்ட்ஸ் பட்டுச் செத்துப்போச்சுதோ என்னவோ?'' தங்கையின் சோகம்.

''ஐடென்டிக் காட்டையும் விட்டிட்டு வந்திட்டன். ஆமி தற்செயலாய்ப் பிடிச்சானோ... அழிஞ்சன்...'' தம்பியின் சோகம்.

''படிப்பிக்கிறதுக்குத் தேவையான புத்தகங்களைக் கூட அடச்சீ...'' அடி நெஞ்சில் நெளியும் அலறலுக்கு இடையிலும், ''அடுத்தது என்ன?'' என்ற கேள்வி.

ஆசிரியர் என்ற அந்தஸ்து அகதி முகாமுக்குப் போவதைத் தடுத்தது. போனாலும் கூட நிவாரணம் இல்லைத்தானே?

மத்தியதர வர்க்கத்தினர் எல்லோருடனும் போட்டி போட்டுக் கொண்டு அவளும் வீடு தேடும் படலத்தில் கால் வைத்தாள்.

கீழ்த்திசை வெயிலின் கிரணங்களால் நீண்டு விழுந்த அவளது நிழல் குறுகி மீண்டும் மேற்திசை வெயிலின் கிரணங்களால் நீண்டு, குறுகி நீண்டு, நீண்டு குறுகி யாழ்ப்பாணக் கிடுகு வேலிகள் அனைத்தையும் தடவி ஓய்ந்த போதுதான்.....

நல்லூரில் இருக்கும் ''கொழும்புமாமி'' வீட்டில் கொஞ்சக்காலம் தங்க இடம் கேட்கலாம் என்ற எண்ணம் வந்தது.

''ஒழுங்காக உலைவைத்து நாலு நாளாயிற்று; சரியாக உறங்காமல் நூறு மணித்தியாலங்கள் போயிற்று. அடக்கவென்று அமர்த்தினால் மீறும் கண்கள் பலமுறை வழிந்தோடிற்று'' என்ற நிலையில் மிஞ்சியிருந்த ஒரே ஒரு தகரப்பெட்டியுடன் மாமி வீட்டில் இறங்கினாள். அவள் அம்மாவும் தம்பி தங்கையருமாய் ஐந்து ஜீவன்கள் அவளுக்குப் பின்னால்.......



மாமி ''வாருங்கோ'' என்று வாய் நிறையச் சொல்லா விட்டாலும், ''வரவேண்டாம்'' என்று சொல்லவில்லை என்ற அளவில் நிம்மதி.

ஒழுங்காகக் குளித்து நாலு நாள் ஆயிற்று அல்லவா? இன்று நல்ல முறையில் குளிக்கலாம் என்ற நினைவு போதை ஊட்டக் கிணற்றடிக்கு ஓடினாள். விறு விறென்று இரண்டு வாளி அள்ளி ஊற்றிக் கொண்டாள். மெல்லிய குளிர் ஒரு சந்தோஷமாய் உடலெல்லாம் சுற்றி வருகிறது என்று நினைக்க முதல், மாமி ''விண்டோ'' வுக்குள்ளால் பார்த்திருக்க வேண்டும்!

''மாலா..... வட் இஸ் திஸ்? பட்டிக்காட்டுப் பழக்கம்?'' குரலின் இறுக்கத்தில் அதிர்ந்து போனவள், ''ஏன் ஏன் என்ன மாமி?'' என்றாள்.

''நாங்கள் கிணற்று வாளியை நிலத்திலை வைக்கிறேல்லை... அது மண். டேற் (Dirt) கிணத்துக்குள்ளை போயிடும் சிச்சிச்சீ''

அப்போது தான் ஏதோ புரிந்து அவள் கீழே பார்த்தாள். நல்ல பளிங்கு போல் சுத்தமாக இருந்த கிணற்றின் சீமெந்துக் கட்டில் அவள் வாளியை வைத்துத்தான் இருந்தாள்.

''சொறி.... மாமி'' பதற்றத்துடன் வாளியை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டாள். அந்த நேரத்தில் அவள் முகத்தை ஒரு கவிஞன் பார்த்திருக்க வேண்டும். ''மூன்றாம் பிறை நிலவைக் கிள்ளித் தரையில் போட்டது போல'' என்று பாடியிருப்பானோ என்னவோ, அது அவனைத்தான் கேட்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சீமெந்து நிலத்தில் ஒருவேளை இரண்டு துணிக்கை மண் இருக்கலாம். அது ஒட்டிக் கொண்டு கிணற்றுக்குள் போய்விடும் என்பதா மாமியின் பயம்? அல்லது ........? கிணற்றுக்குள்ளே நீரின் அடியில் படை படையாய் இருக்கும் மண்ணை மாமி என்ன செய்யப்போகிறா?

பகல் முடிந்து இரவு வந்த போதும் நெஞ்சை ஏதோ குடைந்து கொண்டே இருந்தது. அந்தியில் மின்னல் வானத்தை வெட்டும் போதெல்லாம் வானம் அடிபட்ட விலங்கு போல அலறியது. மழை பெய்யவில்லை.

இரவு சாப்பிடாமலே நித்திரையாகிப் போன கடைசித் தம்பி எழுந்தான். ''அக்கா.... பாத்றூம் போகப் போறன்...''

காலைப் பூவின் அழகான பார்வை அவனுக்கு!

''மேசையிலை விளக்கு இருக்கு ராசா.... எடுத்துக் கொண்டு போயிட்டு வாங்கோ. மறந்திடாமல் நிறையத் தண்ணி ஊத்திட்டு வாங்கோ...''

அவன் மேசையில் இருந்த மாமியின் லாம்பை எடுத்துக் கொண்டு நகர்ந்தான். விளக்குடன் அவன் திரும்பி வரும்போது தான் மாமி கண்டிருக்க வேண்டும்.

''மை... கோட்... என்ன மாலா? யார் இந்த விளக்கைக் குடுத்தது? நாங்கள் விளக்கு பாத்றூமுக்குக் கொண்டு போறதில்லை. பிறகு அந்த அழுக்கெல்லாம் விளக்கிலை வந்திடும்!''



''அகதி என்ற அழுக்கு நிரந்தரமாய், வீடு வாசலிலை இருக்கிறவையிலை படிஞ்சிடும். ஒரே நாளில் திடீரென்று ஏழையாகிப் போனவைன்ரை அழுக்கு நிரந்தரப் பணக்காரரிலை படிஞ்சிடும்... உண்மைதான். ஓராயிரம் சொற்கள் ஒரேயடியாய் அவள் மனதில் எழுந்தன. வாயிலும் அவை எல்லாம்...... வாய்க்குள்ளேயே புகையாய்ப் பிசு பிசுத்துப் போயின.

''சிச்சிச்சீ.... நிலம் பழுதாயிடும்.....''

''சிச்சிச்சீ .... சுவரில ஒட்டக் குடாது. சுவர் அழுக்காயிடும்....''

''சிச்சிச்சீ...... விசிற்றேர்ஸ் வாற இடத்திலை......'' அவளது இதயத்தின் உட்சுவரில் இருந்து பல கற்கள் இடிந்து விழுந்தன.

குருஷேத்திரத்திப் பார்த்தனாய்ச் சோர்ந்து நின்ற மூத்த தம்பி, ஓரிரு நாள்களிலேயே வேறு வீடு தேடப் புறப்பட்டு விட்டான். அவனுடன் வெளியே வந்த போது அவள் ஒன்றை வலியுறுத்தினாள்.

''எடே...... நாங்கள் அகதியாய் வெளிக்கிட்டம்... எங்களை விடக் குறைஞ்ச அந்தஸ்து உள்ளவையோடை சேர்ந்து இருக்கலாம். 'சினமன் காடின்ஸ்லெவல்' ஆக்களோடை இருக்கேலாது..... நீ எங்கையாவது வறுமைப்பட்ட, படிக்காத சனங்கள் இருக்கிற வீட்டில ஒரு அறை பாத்துக் கொண்டு வா.....''

அவன் தலையசைத்துவிட்டுச் சென்றான்.

நிஜம் என்பது கதையைவிட வியப்புக்குரியது தான் . அல்லாவிடில் அவ்வளவு விரைவில் அந்த வீடு கிடைத்திருக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் மீது மாமி செலுத்திய இரக்கம் நிறைந்த, அதே சமயம் ஏளனம் நிறைந்த பார்வைகளை விலக்கிக் கொண்டு அவள் இந்த வீட்டிற்கு இடம் பெயர்ந்தாள்.

அழகில் சீதேவியை நெட்டித் தள்ளிவிட்ட பெண் இந்த வீட்டின் நாயகி. இளம் கறுப்பில் கொஞ்சம் தூக்கலான நிறம். நிவாரணத்தை மட்டும் நம்பி வாழும் ஏழ்மை வாழ்வு.

ஓர் இரவும் அதன் குளிர் காற்றும், ஒரு பகலும் அதன் இள வெப்பமும் இன்பமாய்க் கழிந்தன.

காய்ந்த அறுகம்புல் தரைபோலச் சவரம் செய்யாத முகத்துடன் இருந்த அந்த வீட்டு ஆண் சொன்னார்: "கமலம், முருங்கைக்காய்க் கறியிலை கொஞ்சம் அவைக்கும் குடு.... நாங்கள் இனி ஒரே வீட்டிலை இருக்கப் போற ஆக்கள். குடுத்து வாங்கிச் சாப்பிட வேணும்...."

மேகக் கோட்டைகள் தகர்ந்து ஒரு நள்ளிரவில் அவள் உள்ளம் நிரம்ப மழை பெய்தது. ஏழை மக்கள் என்றாலும் உள்ளம் பெரியது. இவர்களோடு இருப்பது எளிது. இது ஒரு மகிழ்வு! கோழிகளும் நாயும் கூட வீட்டின் தரையை மிகச் சுதந்திரமாகப் பாவிப்பதைப் பார்த்துப் பூரித்துப் போனாள். நன்றியுடன் கறியைப் பெற்றுக் கொண்டு, தாங்கள் செய்திருந்த பூசனிக்காய்க் கறியில் பாதியை வாழைஇலையில் போட்டு அவர்களிடம் கொடுத்தாள்.

உடனேயே அதில் கொஞ்சம் கிள்ளி வாயில் போட்டுக் கொண்ட கமலம், சொன்னாள்: "சிச்சிச்சீ..... இப்பிடியே பூசனிக் காய்க்கறிவைக்கிறது? இதென்ன உங்களுக்கு ஒண்டும் தெரியேல்லை"



குத்திவிடுமோ என நினைக்கத் தோன்றும் கூரான மூக்கு, கமலத்துக்கு. அதிலே ஒரு மூக்குத்தி வேறு.

"சிச்சிச்சீ... இதென்ன பாருங்கோ...... வெள்ளிக்கிழமை எண்டால் விரதம் பிடிக்கிறேல்லையே நீங்கள்?"

"ஐயோ, இதென்ன வீட்டுத்தூரம் எண்டாலும் பள்ளிகூடம் போறதோ?"

"சிச்சிச்சீ. இதென்ன ரீச்சர்...... இரவிலும் ஆரும் தலை இழுக்கிறதே?"

"ஐயோ இரவிலை வீடு கூட்டப்படாது பாருங்கோ"

இருட்டும் புழுக்கமும் துணையாக இருந்த ஓர் இரவில், இதுவரை காலமும் வாசிக்காமல் நிறுத்தியிருந்த, தகரப் பெட்டியோடு வந்துவிட்ட நற்சிந்தனைக் கொப்பியை அவள் புரட்டினாள்.

மலைவேம்பு மர நிழலும் காற்று வீசும் நீட்டு முற்றமுமாய் இருந்த வீட்டில் இருந்து புறப்பட்ட போது கடைசியாக வாசித்த பக்கம்.....

" வழி தவறிய குருடனுக்கு இருளும் ஒன்றுதான் ஒளியும் ஒன்றுதான்" அதன் கீழே அவள் எழுதத் தொடங்கினாள்.

"அகதியாகப் புறப்பட்டவளுக்கு" வசனம் முடிய முன்னரே தொண்டையைச் செருமி, அங்கு சிக்கிப் போயிருந்த சோகத்தை வெளிக் கொணர முயன்றாள்.

முற்றத்தில் கோழி எச்சத்தின் கார நெடி மூக்கைத் துளைத்தது.

✦ ✦ ✦ *(மல்லிகை - ..... )*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4

# தொண்டர்



படீர், படீர் என்று தடித்த மழைத்துளிகள் அங்கும் இங்கும் பொட்டுப் பொட்டாய் விழுந்து தெறித்தன.

சிவசிதம்பர உபாத்தியாயர் தனது பொத்தல் விழுந்த பழைய குடையை விரித்துப் பிடித்துக் கொண்டார். வேட்டியைப் பத்திரமாகத் தூக்கி முழங்காலளவில் மடித்துக்கட்டிக் கொண்டு நடக்கத் தொடங்கினார்.

"ரனீஸ் தேனீர்ச்சாலை" என்ற எழுத்துக்கள் வீதியின் வலது புறத்தில் தெரிந்தன. அந்தக் கடை





முடிந்து வரும் ஒழுங்கையில் இறங்கினார். ஒரு நூறு மீற்றர் நடக்கக் கோயில் வரும். உபாத்தியாயர் இந்தக் கடையில் தென்பட்ட புதிய பெயர்ப் பலகைக்கு முன் ஒரு கணம் நின்றார்.

"தம்பீ!" என்று அழைத்தார். பன்னிரண்டு வயது மதிக்கத்தக்க சிறு பையன் வெளியே வந்தான். "என்ன வேணும்?" என்று கேட்டான். "தேனீருக்குத் தன்னகரம் வரவேண்டும்" என்றார் உபாத்தியாயர். தங்க முகில் ஒன்று கம்பீரமாய் பெரிய பட்சி போல ஆகாயத்தில் பறந்து சென்றது.

"அது பிறகு வரட்டும். இப்ப உங்களுக்குத் தேத்தண்ணி வேணுமா?" என்று அவசரப்பட்டான் பையன். உபாத்தியாயர் பெருமூச்செறிந்து "இல்லை" என்றார்.

மொழிக்கு முதலில் "ரகரம்" வராது என்று நினைத்ததைச் சொல்லி வேலையில்லை. கோயிலுக்குச் செல்லும் வெறும் பாதத்தில் பட்ட குறுணி மண் வேதனையைக் கிளறுகிறது.

பண்டிதமணியிடம் தான் தமிழ் படித்த போது, பெயர்ப் பலகைகள் துண்டுப் பிரசுரங்கள், பத்திரிகைகள் ஆகியவற்றில் காணப்படும் தமிழ்ப் பிழைகள் பற்றி அவர் தனியாகவே கரிசனை எடுத்து, அவற்றைத் தொகுத்து வகுப்பிற்குக் கொண்டு வந்து மாணவர்களைக் கொண்டே திருத்தம் செய்விப்பது நினைவுக்கு வந்தது. இப்போதெல்லாம் யார் இதைப் பற்றிக் கவலைப்படு கிறார்கள்?

விழி எறியும் திசை எங்கும் நிழலற்று அலையும் மனிதர், பொருள் தேடுதலை மட்டுமே குறிக்கோள் எனக் கொண்டு ஓடித்திரிவது உபாத்தியாருக்குப் பெரிய சிரிப்பாயும் கவலையாயும் இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்கையில் ஆசிரியர் திரும்புகிறார். அங்கு அந்த வழக்கமான பெரும் இரைச்சலுடன் கூடிய தனியார் கல்வி நிலையம். அந்த மழையிலும் நூற்றுக்கணக்கான சைக்கிள்கள் அடுக்கப்பட்டுள்ளன. ஒழுங்கைக்கு அருகில் உள்ள வகுப்பில் நின்று "கரடிபோலக் கத்தும்" மாஸ்டரை இவருக்குத் தெளிவாகத் தெரிகிறது. இவர் ஒரு கணம் அந்த இடத்தில் நின்று கவனிக்கிறார். "ரியூசன் மாஸ்டரின்" கண்கள் இந்தக் காலை வேளையிலும் கொவ்வைப் பழம் போலச் சிவந்திருக்கின்றன. "மாணவர்களின் நடத்தை மாற்றத்திற்குக் காரணமாவது ஆசிரியரின் முன் மாதிரியான நடத்தை" என்ற வசனம் அவரது மூளையில் ஓடி மறைகிறது.

"ரியூசன் மாஸ்டர்" சொன்ன ஏதோ ஒரு பகிடிக்காக, மாணவர்கள் அனைவரும் விழுந்து விழுந்து சிரிக்கிறார்கள். பகிடி என்னவென்பது எண்பது வயது தாண்டிவிட்ட உபாத்தியாயரின் செவியில் விழவில்லை. சிறிது நேரத்தில் ஓரிரு கடதாசி அம்புகள் மாஸ்டரின் மேசையில் குத்தி விழுகின்றன.

மாஸ்டர் அது பற்றி எந்த அக்கறையும் காட்டவில்லை. ஏதோ எழுதப்பட்ட துண்டுக்காகிதம் ஒன்று மாணவர் ஊடாக முன்னேறி ஆசிரியரின் கைக்கு வருகிறது. மாஸ்டர் பிரித்துப் பார்க்கிறார். சிரிக்கிறார்.

"இப்பிடிக் கேள்வியளுக்குப் பதில் சொல்ல ஏலாது" என்கிறார். திரும்பவும் மாணவர்கள் விழுந்து விழுந்து சிரிக்கிறார்கள்.

உபாத்தியாயரின் வெள்ளை உடம்பில் சுருக்கம் விழுந்து விட்டாலும் அவரது உயிர்க்கலங்கள் ஒவ்வொன்றிலும் இன்னும் சமயமும் தமிழும் "நான் இருக்கிறேன்" என்றது. அவரது



உணர்வுகள் இன்னும் பச்சையாகவே உள்ளன. பண்டிதமணி போன்ற ஆசிரியர்களின் வகுப்பின் காத்திரத்தன்மை மனதில் நிழல் விரிக்கிறது. "நன்னூலார்" வகுத்த ஆசிரியருக்குரிய வரைவிலக்கணத்தில் வரும் "மேன்மை" என்ற சொல்லின் கருத்து மனதில் பெரிதாய் விரிகிறது.

இடப்பெயர்வுக்கு முன்னர் தனது சொந்தக் கிராமத்தில் வாழ்ந்த போது, குடும்பத்தகராறுகள் பலவற்றை அன்போடு அணுகித் தீர்த்து வைத்தவர் இந்த உபாத்தியாயர். பிறன்மனை நயக்கும் சிற்றாண்மை படைத்த ஆடவர் பலரைப் பக்குவமான முறையில் திருத்தி அவர் தம் இல்லத்தரசிகளின் கண்ணீரைத் துடைத்தவர்.

"பெருங்குடி" மக்கள் பலரை இந்த விரதாதிகளால் மெலிந்து சிறுத்த தேகம் திருத்தியிருக்கிறது. சண்டியன் சரவணை இறந்த பிறகு ஊர் மக்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருந்தவன் யமன் இராசதுரை. நாடகத்தில் "யமன்" பாத்திரம் ஏற்பது மட்டுமல்ல, பின் கதவு வேலைகள் பலவற்றையும் கூடப் பிழைவிடாமல் செய்யக்கூடியவன். "என்னோடை மிண்டினால் செய்வினைதான்" என்று ஊர் மக்களை வெருட்டக் கூடியவன். அவனும் உபாத்தியாயருக்குப் பணிந்து மரியாதை கொடுப்பான். கிராம வளர்ச்சிச் சங்கத்தில் உபாத்தியாயர் சொல்வதை இராசதுரை மீறமாட்டான்.

இப்போது இடம்பெயர்ந்து கிராமம் சிதறிய பின் எல்லாம் "பழைய கதை" ஆகிவிட்டது.

உபாத்தியாயர் கோயிலை அண்மித்துவிட்டார். சாலையின் இருபுறமும் செம்பருத்திப் பூக்கள் சிவப்புச் சிவப்பாய்ப் பூத்துக்கொட்ட அமைதியைப் பூசிக்கொண்டு நின்றது அந்த இடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீறு துலங்கும் நெற்றியுடன் கோபுர தரிசனம் செய்து அவர் கோயிலுக்குள் போக ஆயத்தமாகிற போது அந்தக்காட்சி தரிசனமாகிறது.

அந்தப் பெண் குழந்தைக்குப் பத்து வயது இருக்கலாம். அழுது கொண்டே இருக்கும் பிள்ளையைத் தாயார் தான் தூக்கி வருகிறார். அப்போது வெளியே வந்த குருக்களிடம் தாயார் சொல்லுகிறார்.

''பயந்திட்டாள் போலை கிடக்கு. ஒருக்காத் திருநீறு போட்டு விடுங்கோ ஐயா''

இப்போது குழந்தையின் அழுகை முனகலாகியிருக்கிறது. குருக்கள் திருநீறு எடுக்க உள்ளே போகிறார். குழந்தை திடீரென்று வீரிட்டு அலறுகிறது.

''அம்மா பாமதி ரீச்சர் வாறா..... பிரம்போடை வாறா... அடிக்கப்போறா..... அடிக்கிறா ..... ஐயோ....''

உண்மையாக ஒருவர் அடித்தால் எப்படி இருக்குமோ..... அப்படி இருக்கிறது அலறல்.

உபாத்தியாயருக்குத் தன்னைச் சுற்றியும் பெரு நெருப்பு எரிவது போல இருக்கிறது. குருகுலக்கல்வி முறையில் ஒருபோதும் காணப்படாத தண்டனை முறைகள் ஐரோப்பியரால் இங்கு அறிமுகப்படுத்தப்பட்டு இன்று அதன் எச்சசொச்சங்கள் எமது குழந்தைகளைப் பாதிக்கும் தன்மை அவரின் மனதை நெருடுகிறது.

ரஷ்ய மொழி பெயர்ப்பு நூல் ஒன்றில் தான் வாசித்த ''யானுஷ்கர்ச்சாக்'' என்ற ஆசிரியரின் வாழ்வு இப்போது உபாத்தியாயரின் மனத்திரையில் படமிடுகிறது.





வார்ஸா நகரின் யூதர் பகுதியில் இருந்த அநாதை விடுதியில் ஆசிரியராகப் பணியாற்றியவர் இந்த ''யானுஷ் கர்ச்சாக்''. உலக மகாயுத்த காலத்தில் ஹிட்லர் வாதிகள் கதியற்ற குழந்தைகளை ''திரெப்வீன்கா'' நகரில் நெருப்பில் இட்டுப் பொசுக்க உத்தரவிட்டனர். குழந்தைகளை விட்டு விட்டுத் தப்பிச் செல்லவோ அல்லது குழந்தைகளுடன் சேர்ந்து மடிந்து போகவோ ஏதாவது ஒரு முடிவுக்கு வருமாறு ''கர்ச் சாக்குக்கு'' ஆலோசனை கூறப்பட்ட போது அவர் ஊசலாட்டமோ சந்தேகமோ ஏதுமின்றிச் சாவைத் தழுவிக் கொண்டார். குழந்தைகளை ஆரோக்கிய மரணத்திற்குத் தயாராக்கித் தானும் அவர்களுடன் பயணித்தார் அந்த வீரர். அவரது அரவணைப்பிலே மரண பயம் இன்றி மரணத்தைத் தழுவிக் கொண்டனர் சிறுவர்கள். அப்படியான ஆசிரியர்கள் எமது நாட்டிலுந்தான் இருந்தார்கள். ஆனால் இன்று.....?

கோயில் வழிபாட்டின் போதும் உபாத்தியாயரின் மனம் அமைதி கொள்ள மறுத்தது.

மதுபானம் அருந்தாத, சிகரெட் புகைக்காத, மச்சமாமிசம் உண்ணாத, இறை நம்பிக்கை மிக்க விழுமியங்கள் நிறைந்த ஆசிரியர் ஒருவர் பாடசாலைச் சூழலில் வாழ்ந்து வந்தாலே மாணவருக்கு அது பெரும் வரப்பிரசாதமாக அமையும். அப்படிப்பட்ட ஆசிரியர் ஒருவர் ஒவ்வொரு பாடசாலை வளவிலும் கட்டாயம் உலாவர வேண்டும்.

கோயில் பூஜை முடிந்து திரும்பும்போது அந்த மகாவித்தியாலயத்தின் அதிபர் அறைக்குள் திடீரென நுழைந்தார் உபாத்தியாயர்.

விநாடிக்கு விநாடி முகத்தில் வியப்புமானி உயர அதிபர் கேட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"வாத்தியார் வாங்கோ என்ன விசேஷம்.?"

"நீங்கள் விரும்பினா நான் நாளைக்குத் தொடக்கம் உங்கடை பள்ளிகூடத்திலே தொண்டர் ஆசிரியரா வேலை செய்யிறன்!!

இதயம் லேசாய் ஒருமுறை உதறிக்கொள்ள அதிபர் திகைத்துத் தான் போனார்.

" நான் ஒழுங்கா ஜீ.சீ.ஈ. ஓ.எல் சித்தியடையாத ஒண்டிரண்டு பேரைத்தான் தொண்டரா வைச்சிருக்கிறன். நீங்கள் வந்தால் தெய்வம் வந்த மாதிரி... உங்களுக்கு உடம்பு ஏலுமோ.....?"

அதிபர் குழைந்தார்.

"வரத்தான் போறன். ஒரு பாடவேளை படிப்பிச்சாலும் காரியமில்லை. இந்த வளவுக்கை உலாவப் போறன்"


சால்வையை உதறிக்கொண்டு எழுந்தார் உபாத்தியாயர். புது இரத்தம் குருதி மயிர்க்குழாய்களில் பரவி முகத்திற்குச் சிவப்பூட்டியது.

✦ ✦ ✦ *(அருள் ஒளி - தை 2003)*



# 5

# வாழ்வுந்தலும். . .



வானத்தில் சோளப் பொரியை இறைத்தாற் போல நட்சத்திரங்கள் மினுக்கிட்டன.

அந்த ஆய்வுகூடத்தில கொரில்லாக் குரங்குத் தாய் ஒன்று அதன் அன்புக் குட்டியுடன் நிறுத்தப்பட்டுள்ளது. நிறுத்தப் பட்டிருக்கும் தொட்டியின் அடியில் இருந்து நீர் மெதுவாக உள்ளே ஏற அனுமதிக்கப்படுகிறது. இரவும் அதன் குளிர் காற்றும் உடலில் சில்லிட, சுற்று முற்றும் பார்த்து, நிலைமையை அனுமானித்துக் கொண்டது கொரில்லா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களில் கவிந்து கிடக்கும் ஒரு வெற்றுப் பார்வையோடு தன் குட்டியைத் தூக்கி அணைத்துக் கொண்டது. மரங்களின் மீது ஆலிங்கனம் செய்யும் மின்னல் ஒளி ஒன்று தோன்றி மறைகிறது.

அமைதியான சூழ்நிலையில் திடீரென்று தோன்றிய மனவெடிப்புப் பெருத்துப் பெருத்துக் கொண்டே போகிறது. நீர்மட்டம் உயர, உயரத் தாயும் குட்டியை உயரத்தூக்கிக் கொண்டே வருகிறது. நீர்மட்டம் கழுத்தளவுக்கு வந்தபோது, குட்டியைத் தூக்கித்தன் தலைக்கு மேல் வைத்துக்கொண்டு நின்ற காட்சி... கல்லையும் உருக்கும் வல்லமை கொண்டது.

ஆயிற்று! நீர் மட்டம் தாய்க் கொரில்லாவின் மூக்கை முட்டும் அளவுக்கு வந்துவிட்டது. தாயின் முகம் திடீரென உணர்வலையின் தாக்குதலுக்குள்ளாகிச் சிலிர்த்து நடுங்கியது. கண் இமைகள் மாறி மாறித் தழுவித் திறந்தன. படார் என்று அது ஒரு முடிவுக்கு வந்தது.

குட்டியைத் தூக்கித் தன் காலுக்குக் கீழே போட்டுத் தான் அதற்கு மேல் ஏறி நின்று கொண்டது.

✦ ✦ ✦

பின்னாளில் உலகப்புகழ் பெற்ற கவிஞனாக வரப்போகிற அந்த மனிதன் அப்போது பதினெட்டு வயதுள்ள துடிப்பான இளைஞன். இலேசான மழை பெய்த புழுதி நிலத்தைப் போல மதமதத்து நிற்கும் பூரிப்பான உடற்கட்டு. கடற் கப்பலில் பயணம் செய்து கொண்டிருக்கிறான். கர்ப்பமுற்ற மேகங்களைக் கொண்டிருந்த வானம் திடீரென்று கண்ணீர் சிந்தத் தொடங்கியது. புயல் படு வேகமாய் வீசிற்று 'வெதரும்' எங்களைப் போலத்தான் - திடீர் அழுகையும திடீர்க் கோபமும்!

கப்பல் சரிந்தே விட்டது!



அந்த இளம் கவிஞனுக்கு ஒரு நப்பாசை. உயிர் காக்கும் பெல்ட்டுகள் வழங்கப்படும் என்று! அவை வழங்கப்பட்டன. ஆனால்....

இந்த இளைஞனை ஏமாற்றி விட்டார்கள். முதியவர் களுக்கும் குழந்தைகளுக்கும் அங்கக் குறைபாடு உள்ளவர்களுக்கும் மட்டுமே அவை வழங்கப்பட்டன. அப்படியானால்....? அடுத்த சில நிமிடங்களில் அவன் இறந்துவிடப் போகிறானா?

நெஞ்சுக் கூட்டில் கொதிநீர் கொட்டியது போல அவனுக்குப் பகீரென்றது. என்ன செய்வது? கடலில் குதித்தான். தலையை நிமிர்த்திக் கொண்டு நீந்திப் பார்த்தான். உடல் முழுவதும் நீரில் மூழ்கியிருந்த போது, விழிகள் மெதுவாய்த் திறந்து, நிறைந்து, வழிந்து, கன்னங்களில் கண்ணீர் அருவி ஓடியது போல இருந்தது. முடிந்தவரை முயன்று நீந்தினான்.

இறப்பு அருகில்.... மிக அருகில் வந்து கொண்டிருப்பது தெரிகிறது. உயிர்போகும் இறுதி நேரத்தில்... எதை எண்ணிக் கொள்ளலாம் என்பதைப்பற்றி முன்னர் எண்ணிய தாய் எண்ணிக் கொண்ட எண்ணங்களை எண்ணி எண்ணி.... ஒரு சில கணங்கள் தான்! அந்தச் சிந்தனை ஒரு கவிதை போல அவனுக்குள் பளீரென்று வந்தது.

தனக்குப் பக்கத்தில் மிதந்து கொண்டிருந்த - கிழவி ஒருத்தியின் 'பெல்ட்டை' 'டபார்' என்று பறித்துத் தான் அணிந்து கொண்டான். ஏக்கமும், வேண்டுதலும், தவிப்பும், பரிதாபமும், அந்தரமும் நிறைந்த கிழவியின் பார்வையை அவனுடைய கண்கள் சந்திக்கவில்லை.

உயிர் தப்பிவிட்டான் இளங்கவிஞன். "கிழவி இருந்திருந் தாலும் இன்னும் ஒரு வருஷமோ, இரண்டு வருஷமோதான். அதுவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகுக்குப் பயனில்லாத வாழ்க்கை. நான் வாழ்ந்து மனித குலத்துக்கு எத்தனை பயனுள்ள கவிதைகளைத்தரப் போகிறேன்''

பாதுகாப்புக் கவசம் ஒன்றைத் தன் உள்ளத்தை மூடிப் போர்த்துக் கொண்டான் இளங்கவிஞன்.

✦ ✦ ✦

உலகப் புகழ்பெற்ற ஜேர்மன் நாடக ஆசிரியர் எழுதிய அந்த நாடகத்தின் முதல் காட்சி... இதோ ஆரம்பமாகிறது.

அந்த நகருக்குள் எதிரிகளின் படை நுழைந்து விட்டது. நகரத்தின் 'கவர்னர்' எதிரிகளால் கொல்லப்பட்டு விடுகிறார். தன்னுடைய விலை உயர்ந்த ஆடைகளுடன் தப்பி விடுகிற 'கவர்னர்' மனைவி! ஆயினும் அவள் ஒரே ஒரு பொருளை எடுக்க மறந்து விட்டாள்.

அது அவளின் குழந்தை!

தாயினால் அநாதரவாக விட்டுச் செல்லப்படும் அக்குழந்தையே நாடகத்தின் உயிர்...

நாடகம் நடந்து கொண்டிருக்கிறது.

✦ ✦ ✦

கட்டைக் காட்டில் ஒரு படை இறங்கி அரை வட்டவடிவில் முன்னேறிக் கொண்டிருக்கிறது.

அவர்களை முன்னேற விடாமல் தடுத்து நிறுத்தும் படையணி 'ப' வடிவில் நிறுத்தப்பட்டிருக்கிறது.



'பங்கர்' அடிக்க மண்வெட்டிகள் கூட இன்னும் வந்து சேரவில்லை. எதிர்பாராத அலை. ஏழு பேருக்கு ஒரு அலவாங்கு மட்டும் கிடைக்கிறது. மேலே... பூமியைப் பொசுக்கி விடுவது போல எரியும் சூரியன். கீழே.... தொட்டவுடன் ஒட்டிக் கொள்கிற களிமண்.

கையாலேயே களிமண்ணைக் கிளறிக்கிளறிச் சிறிய பங்கர்கள் அமைக்கப்படுகின்றன.

"எடே... எண்ணாயிரம் பேரை இறக்கிப் போட்டானாம்..." பக்கத்தில் வந்து கொண்டிருக்கிற சுருளி சொல்லுகிறபோது, இவனுக்கு ஒருகணம் மனம் ''திக்'' கென்றது உண்மைதான்.

"எங்களிட்டை இருக்கிற ஒவ்வொரு றவுண்சையும் பாத்துப் பாத்துத்தான் அடிக்க வேணும்... அவன் நூறு அடிச்சா நாங்கள் ஒண்டுதான் அடிக்க வேணும்......"

என்று நேற்றுச் சொன்ன ''சூட்டி அண்ணை'' இன்று இல்லை என்பது விழுங்க முடியாத கசப்பாய் அடித் தொண்டையில் கனக்கிறது.

''டே.... நாங்கள் எல்லாம் ஒற்றுமையாய் நிண்டால்... அவன் எங்கடை சவங்களுக்கு மேலாலை ஏறித்தான் ஆனையிறவுக்குப் போகவேணும்..."

என்று சொல்லிக் கொண்டிருந்த சூட்டி அண்ணை "உங்களுக்கெல்லாம் சாப்பாடு வந்ததேடா..."

என்று அன்பொழுகக் கேட்கிற சூட்டி அண்ணை ''யூனிபோம்'' இல்லாதவைக்கு உடனே ''யூனிபோமும்'' ''காமபிளாஸ் தொப்பி'' இல்லாதவைக்குத் தொப்பியும் தந்துவிட்டுத்தான் வேறு அலுவல் பார்க்கும் சூட்டி அண்ணை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருத்தன் காயப்பட்டாலும் உடனே ''லொக்கேஷன் ஐஞ்சிலை ஒரு மில்லர். கெதியாவாங்கோ...'' என்று வாக்கியில் சத்தம் போடுற சூட்டி அண்ணை.....

அலை அலையாய் மேல் எழும் நினைவுகளை அழுத்தித் துடைத்துக் கொண்டு அவன் முன்னேறுகிறான். தென்கிழக்குத் திசையில் இருந்து வீசும் காற்று பனை ஓலைகளில் நுழைந்து நாதம் குலைந்த வீணையைப் போல இசைக்கிறது.

பகலில் ஒரு நட்சத்திரம் பிரகாசமாய் வெளிச்சம் காட்டிவிட்டுத் திடீரெனக் கீழே விழுந்தது போலிருந்தது. அருகில் நின்ற சுருளி 'ஷெல்பீஸ்' பட்டுக் கீழே விழுகிறான். வயிற்றில் இருந்து சோறு பீறிட்டுப் பாய்வது தெரிகிறது.

திடீரென்று வானத்தில் இரண்டு ஹெலிகள், இரண்டு பொம்பர்கள், ஒரு வை - 8 எல்லாம் தோன்றி முழங்குகின்றன. எதிரி தனது அணியைச் சிறிது தூரம் 'வித்ட்றோ' பண்ணி விட்டு... வான் தாக்குதல் செய்யும் உத்தியில் இறங்கியுள்ளான்.

காயப்பட்டு வீழ்ந்து போன வேலனைத் தூக்கிப் பின்னால் வந்த 'மெடிக்ஸ்' இடம் ஒப்படைத்தான். சேட் முழுவதும் ஈரமாகிவிட்ட உணர்வு. என்ன மச்சான் சேட் எல்லாம் இரத்தம்? பக்கத்தில் ஒரு குரல்.

''அது காயப்பட்டவனைத் தூக்கின இரத்தம்'' மிகச் சாதாரணமாய்க் கூறிவிட்டு றைபிளை இயக்குகிறான் இவன். பின்னே போன எதிரி, மீண்டும் முன்னேறி வெகிக்கிளுக்குப் பின்னால் 'கவர்' எடுத்துக் கொண்டு அடிக்கிறான் என்று நினைக்கிறபோது... இவனுக்குத் தலை சுற்றுவது போல இருக்கிறது.



தன்னுடைய 'சேட்' நனைந்து கொண்டிருப்பது தன் சொந்தக் காயங்களில் இருந்துதான் என்ற உண்மை மனதில் இலேசாக உறைக்கிறது. இவன் பின்னால் நிற்கும் கேசவனுக்குக் குரல் கொடுக்கிறான்.

''கேசவன்... கெதியா வா.... எனக்குப் பின்னாலை கவர் எடுத்துக் கொண்டு அடி..''

இவனது கட்டளையை மெல்லவும் முடியாமல், துப்பவும் முடியாமல் தத்தளிக்கும் ஒருவித மனநிலையுடன் இவனை நோக்கி அசைகிறான் கேசவன்.

என்ன இது? அவனுக்கு முன்னால் கறுப்பா ஒரு உருவம்? அம்மா... அம்மா... அம்மாதான்.

கவர் எடுக்க ஒரு நெருஞ்சிப்பற்றை கூட இல்லாத அந்த வெட்டையில்... இந்த மண்ணின் பனைபோல 'அம்மா' நிமிர்ந்து நிற்பது எப்படி?

வெறும் கனவா? அல்லது நினைவா? அல்லது... அ....ல்...ல...து....நி....ஜ....மே...தா...

✦ ✦ ✦


*(வலம்புரி - 31. 01. 2003)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் பனை

வெள்ள நீர் நிரம்பி நின்ற குட்டையில் மாலை வெயில் முகம் பார்த்தது.



வைரவர் கோயில் முன்றிலில் அவர்கள் இருவரும் வந்து, வெள்ளை மணலில் உட்கார்ந்த போது நான் நிமிர்ந்து நின்றேன். காற்றுக்குச் சல சலப்பதை நிறுத்தி விட்டு இவர்கள் உரையாடுவதைக்கேட்கவேண்டும்.

"எப்பிடி அம்மா இண்டைக்குக் கூட்டத்திலை சனம்"





"குறைவு. பரிசு குடுத்த ஆக்களையும் பரிசு வாங்கின ஆக்களையும் பேசின ஆக்களையும் விட்டிட்டு எண்ணிப் பாத்தாச் சரியான குறைவு..."

''பரிசு வாங்கின ஆக்களிலை எத்தினை பேர் பொம்பிளையாள்?"

"..........ம்..........."

"பேசினவையிலை......?"

"நான் மட்டுந்தான்...."

எனக்குக் கோபம் தலைக்கேறியது. ''கோபத்தைக் கையாள்வது எப்படி" என்று எனக்கு உளவியல் நிபுணர்கள் ஒருவரும் கற்றுத்தரவில்லை. என்றாலும் நான் கோபத்தைக் குறைத்துக் கொள்வதற்காக 'ஐஸ்' குடித்தேன். எனது வேர் மயிர்கள் நிலத்தில் இருந்து உறிஞ்சித் தந்த குளிர் நீர்தான் நான் குடித்த 'ஐஸ்'.

பெண்கள் தொடர்பான கருத்துக்கள், கொள்கைகளில் மனிதர்கள் ஒரு நேரம் ஒரு ஒப்பனை போட்டுக் கொள்ளக்கூடும். ஆனால் எனக்கு எப்போதும் ஒரே முகந்தான். அது ஒப்பனைகளை ஒரே அடியாகத் துறந்த முகம்! ஆரோக்கியமான முகம்!

தனிக்கலத்தால் ஆக்கப்பட்ட வேர்மயிர்கள் வேகமாய் மண்ணீரை உறிஞ்சிக் காழ்க் கலங்களினூடாக மேலே அனுப்பிக் கொண்டிருந்தன.

ஆவியுயிர்ப்பு ஈர்ப்பு விசை பிரதான காரணமாய் இருந்தும், வேரமுக்கம், நீர் மூலக் கூறுகளின் பிணைப்பு விசை, மயிர்த்துளை எழுகை ஆகிய விசைகளின் உதவியுடன் நீர் மணிகள் என் இலைகளை அடைந்தபோது, என் கோபத்தின் வேகம் குறைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டது. உள முதலுதவிச் சிகிச்சை செய்யப்பட்டதுபோல உணர்ந்தேன். என்றாலும்... பெண் என்றால் என்ன இவ்வளவு அலட்சியம்?

எங்களுடைய சாம்ராச்சியத்தில் பலர் ஆண், பெண் வேறுபாடு அற்றவர்கள். அவர்கள் மூளைக்கும் மனதுக்கும் இடையில் நடைபெறும் இந்தக் கயிறிழுப்புப் போட்டியில் சிக்குப்படத் தேவையில்லை.

எனக்குப் பக்கத்தில் நிற்கிறாரே இந்தக் கிழட்டு ஆலமரத்தார்! அவருக்கு இந்த ஊரின் கதைகள் எல்லாம் தெரியும். ஆனாலும் பெண்கள் தொடர்பான பிரச்சினைகள் அவரது உணர்வுகளை அதிகம் பாதிப்பதில்லை. அவர் தனது பூக்களில்கூட ஆண், பெண் சமத்துவம் காட்டி, வேறுபாடு தெரியாமல் அர்த்த நாரீஸ்வர வடிவம் எடுத்துக்கொள்வார்.

எனக்குத்தான்...

பெண்கள் எப்படியெல்லாம் வேதனைப்படுகிறார்கள் என்பதை அறிகிற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், கறுத்து இறுகிய எனது உடல் மேலும் கறுத்துப் போகும்.

''ஏன் அம்மா? பொம்பிளையள் ஒருத்தரும் பாராட்டக்கூடிய விஷயங்கள் செய்யேல்லையோ?''

''செய்திருக்கினம்...''

''அப்ப?......''

எனக்குத் தெரியும்!



இப்போது என் ஓலைகளில் குந்திக் கொண்டிருக்கும் இந்த 'ஆம்பிளைக் காகங்கள் பறந்து' பொம்பிளைக் காகங்களுக்கு இடம்தரா என்று!

பக்கத்தில் நின்ற தென்னை மரத்தார் போட்டிருந்த புதுப்பாளையின் அடியில் இருந்த பெண் பூக்களைப் பார்த்துக் கேட்டேன்.

''உங்களுக்கும் ஆண் பூக்களுக்கும் என்ன வித்தியாசம்?''

''எங்களுக்கு முதலிலை இருந்தே கொஞ்சம் வண்டி வீங்கியிருக்கும். அவை சின்னனா இருப்பினம்...''

சற்று இறங்கியிருந்த சினம் என்னுள் மீண்டும் கிளர்ந்தது.

''வண்டி வீங்கிறதுதான் வித்தியாசம். அதுதான் பொம்பிளையளுக்கு வேலையும் எண்டமாதிரித்தான் உங்கடை கதை எல்லாம்.... விசர்க்கதை...''

மாறி மாறிப் படர்வு கொண்ட எனது சினம் இறுதியில் என்மீதே குத்திட்டு நின்றது. நிலைத்தது.

''நாங்கள் இப்படியே பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தால்... இது நெடுக இப்பிடித்தான் இருக்கும்...''

இதை நான் எனக்குக் கீழ் அமர்ந்திருந்த அந்தப் பெண் விரிவுரையாளரிடம் உரக்கச் சொன்னேன். எனது மொழிதான் அவர்களுக்குப் புரிவதில்லையே! அவர்கள் தங்களுடைய கதை!

''அம்மா.... அப்ப பரிசுகள் குடுத்து ஊக்குவிக்கிறதிலை, பொம்பிளையளை வேணும் எண்டு புறக்கணிக்கினமோ?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்கடை பள்ளிக்குடம் கட்டப்பட்டு இப்ப எத்தினை வருஷம்"

"கிட்டத்தட்ட எண்பது வருஷம் ஆகுது..."

''இதுவரைக்கும் எத்தினை அதிபர்மார் இந்தப் பள்ளிக்கூடத்திலை இருந்திருப்பினம்...?"

"பத்துப்பேர் இருந்திருப்பினம்..."

"அவையிலை எத்தினைபேர் பொம்பிளையள்?"

"ஒருத்தருமில்லை..."

"பொம்பிளையள் ஆசிரியர் வேலைக்கு வாறது குறைவு எண்டு நீ நினைக்கிறியோ?"

''இல்லை. இப்பகூட எங்கடை பள்ளிக்கூடத்திலை பொம்பிளையள் தான் கூடப்பேர் ஆசிரியராக இருக்கினம்.."

"அப்ப ஏன் அவை ஒருத்தரும் அதிபராய் வரேல்லை"

''......................"

வெய்யிலின் சாய்வில் விரைவு தெரிந்தது.

தாயும் மகளும் எழுந்து வைரவப் பெருமானை வழிபடப் போயினர்.

கோயிலின் வடகிழக்கு மூலையில் பூஞ்சோலை. அங்கே பூக்கள் பல வண்ணங்களில்!



அதைப்பார்த்து ரசித்தபடி சில நிமிடங்களைப் போக்கினர். வைக்கோல் நிறத்தில் பரவியிருந்த மாலை வெயில் அந்தப் பூக்களின் அழகை அதிகரித்திருந்தது.

மலர்களை நோக்கிய மகள் ராஜியின் விழிகளை நான் உற்றுநோக்கினேன். அதில் கொஞ்சம் கனவு. கொஞ்சம் கவிதை.

விரிவுரையாளரைத் தேடி அவரது இரண்டாவது மகள் ரம்யா வந்தாள்.

"அம்மா... உங்களிட்டை ஆரோ வந்திருக்கினம்...."

"யார்"

"யார் எண்டு தெரியாது"

"கோயிலடிக்கு வரச்சொல்லு... ராஜி... நீயும் வீட்டை போ...." பிள்ளைகளை அனுப்பிவிட்டு அவள் காத்திருந்தாள்.

சீழ்ப் பிடித்த இந்தச் சமூகத்தில் பெண்கள் மிக மோசமாய் அடக்கி ஒடுக்கப்படுவதை எந்தச் சிந்தனை மருந்தின் மூலம் செப்பனிடலாம் என்பது அவள் எண்ணமாய் இருக்கலாம்.

எதிரே காணப்பட்ட சிறிய ஒழுங்கை ஒன்றினூடாகச் செம்மறியாட்டு மந்தைகள் வீடுகளுக்குத் திரும்பிக் கொண்டிருந்தன. அவற்றின் பின்னால் மூக்கில் சளி ஒழுகும் ஒரு சிறுமி.... பத்து வயது மதிக்கலாம்... கையில் சிறிய தடியுடன் மெதுவாகப் போய்க் கொண்டிருந்தாள்.

தனியாக இருந்த விரிவுரையாளரை நான் ஆராய்ந்தேன். அவரின் இதழ்களில் புதிதாகத் தயாரிக்கப்பட்ட சோகத்தின் பூச்சுத் தென்பட்ட போதிலும், புன்னகை கொலுவிருந்த ஒரு பொற்காலத்தின் தடயங்கள் இன்னும் அழியாமல்தான் இருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் மட்டும் கவிஞனாக இருந்திருந்தால்... இந்தப் பெண்ணின் கதையை ஒரு அமர காவியமாகப் பாடித் தள்ளியிருப்பேன். நான்தான் வெறும் பனையாயிற்றே!.

சிறிது நேரத்தில் ஒரு இளைஞன் அவளிடம் வந்தான். தலைமுடி நரை கட்டத் தொடங்கியிருந்தது.

"என்ரை பேர் பாலராஜன்..."

"ஓ.. குட் ஈவினிங்...."

"நீங்கள் சில எழுத்தாளர்களின்ரை நாவல்களுக்கு அருமையான விமர்சனம் செய்யிறதை நான் பாத்திருக்கிறன். அண்டைக்கு ரகுராமனின்ரை 'வெருண்டவானம்' நாவலின்ரை முடிவு யதார்த்தமாய் அமையேல்லை எண்டு சொன்னீங்கள்...

"ஓ...."

"நான் ஒரு கதை சொல்லப் போறன். அதின்ரை முடிவை நீங்கள் எனக்குச் சொல்ல வேணும். உங்கடை அறிவு அநுபவம் சிந்திக்கும் தன்மை இதுகளிலை எனக்கு நம்பிக்கை இருக்கிறதாலை உங்கடை முடிவு சரியா இருக்கும் எண்டு நம்புறன்"

"கேளுங்கோ!"

"ஒரு இளைஞன் ஒரு யுவதியை விரும்பினான். பாடசாலை நாட்களில் அவளை அவனுக்கு ஏனைய மாணவர்கள் கரும்பலகையில் கல்யாணம் செய்து வைத்தார்கள். பாடசாலைக் காலம் முடிந்தபின்... தமிழ் மண்ணில் யுத்தம் வெடித்தது. காணாமல் போனோர் பட்டியலில் அவள்பெயரும் அகப்பட்டுக் கொண்டது. அவள் இன்னும் இருக்கிறாள் என்று சாத்திரக்காரன் திடமாய்ச் சொல்லுகிறான். இளைஞனுக்கு மயிர்கள் நரைகாணத்



தொடங்கிவிட்டன. அவனுக்குப் பல திருமணங்கள் பேசப்படுகின்றன. இந்தநிலையில் அவன் அவளுக்காகக் காத்திருக்க வேண்டுமா?"

வெளியே இருள் வாய்கள் பூமியை விழுங்கக் காத்திருந்தன

வேலியோரத்தில் நின்று தெருவுக்குக் கழுத்தை வளைக்கும் பூவரசு மரங்களும் இந்த அறிவாளியின் பதிலுக்குக் காத்திருந்தன.

"நாவலின்ரை முடிவை எழுத்தாளர் எழுதலாம். வாழ்க்கையிலை அவரவர் தங்கடை முடிவுகளைத் தாங்கள் தான் எடுக்க வேணும்....."

தனது இளமைக் காலத்தில் திருமணமான புதிதில் - தனது வாழ்வில் தீர்க்கமான முடிவுகளைத்தான் எடுக்காது போனதால்... இன்று இரண்டு பெண்பிள்ளைகளுடன்.... ஒரு பெற்றார் குடும்பமாய்ச் சிலுவை சுமப்பதை எண்ணிப்பார்த்துக் கொண்டார் விரிவுரையாளர்.

"எண்டாலும் நான் உங்களுக்கு வழிகாட்டலாம்...."

"சொல்லுங்கோ..."

"அவ.... உயிரோடை இருக்கிறாவா என்பதை முதலிலை நிச்சயமாய் அறிய வேணும்...."

"அவ செத்திருப்பா... எண்டு வீட்டாக்கள் சொல்லினம். இருந்தாலும் களங்கத்தோடைதான் இருப்பா எண்ணினம்... இருக்கிறா எண்டு சாத்திரி சொல்லிறான்..."

"களங்கப்பட்ட நிலையிலை இருந்ததைக் கண்டு பிடிச்சால்... நீங்கள் அவளை ஏற்றுக் கொள்ள ஆயத்தமா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"........................."

"நீங்க காணமல் போய் திரும்ப வந்திருந்தா அவ உங்களை ஏற்றிருப்பாவா?"

"ஏற்றிருப்பா......"

"சொல்லுங்கோ......"

"அவ சிறையிலை இருந்திட்டு இப்ப விடுவிக்கப்பட்டுக் கொழும்பிலை நிக்கிறா எண்டுதான் மற்றாக்கள் கதைக்கினம்..."

"நீங்கள் மனம் திறந்து உண்மையைச் சொல்லத் தொடங்கியிருக்கிறீங்க.... அது உங்கடை ஆரோக்கியமான மனதைக் காட்டுது...."

"எண்டாலும்.... சிறையிலை இருந்த ஆளைக்கட்ட எங்கடை வீட்டாக்கள் சம்மதிக்க மாட்டினம்.."

"முடிவுகளை நீங்கள்தான் எடுக்க வேணும் எண்டு முதலே சொன்னனன்...."

கோயிலுக்குத் தெற்குப் புறத்தில் இருந்த வெங்காயத் தோட்டத்தில விரித்திருந்த பச்சைப் பாயை யாரோ சுருட்டிக்கொண்டு போய்விட்டார்கள். மஞ்சளைப் பூசிக்கொண்டு விழிக்கிறது அது!.

✦ ✦ ✦ *(வலம்புரி - 07. 02. 2003)*




# 7

## நெருஞ்சி

"கோயில் வாசல் றக்கம்...."

"கோயில் வாசல் றங்கிறவை எல்லாம் கெதியண்டு எழும்பி வாங்கோ.... அசைஞ்சு கொண்டு நிக்காதேங்கோ - எல்லாரும் வேலைக்குப்போற ஆக்கள்.... நேரம் போட்டுது... ஆச்சி! பக்கத்திலை இறங்கிறதெண்டு தெரிஞ்சு கொண்டு ஏனெணை பின்னுக்குப் போனனி...? இதிலை எனக்குப் பக்கத்திலை நிண்டிருக்கலாமே.... கெதியா வாணை....! வயது போனா வீட்டிலை இருக்கேலாமை வெளிக்கிட்டிடுவியள்... இடிச்சுக்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வாணை... அண்ணை கொஞ்சம் றங்கிப் போட்டு ஏறுங்கோ...."

"அக்கா ஏறுங்கோ.... இடம் கிடக்கு ஏறுங்கோ.... உதிலை துரை வீதியிலை கனபேர் றங்கப் போயினம்... ஏறுங்கோவன்... மற்றக்கா... நீங்கள் என்ன சீ.ரி.பி வரும் எண்டு வாய் பாக்கிறியளே....?"

"அவன் இப்ப வரான்.... நல்லாக்கால் முறிய நில்லுங்கோ..."

"அக்கா கொஞ்சம் பின்னுக்குப் போங்கோ... என்ன மனச்சாட்சி இல்லாத மனிசரப்பா நீங்கள்? நீங்கள் மட்டும் போனாக்காணும்.... மற்றவை ஒருத்தரும் ஆஸ்பத்திரிக்கு... வேலைக்குப் போறேல்லை... அங்கை அதுக்குள்ளை எந்தளவு இடம் கிடக்கு... அம்மா... பஸ் போற பக்கம் பார்த்துக் கொண்டு பின்னுக்குப் போங்கோ.... இதிலை வாசலிலை எல்லாரும் என்னைக் கட்டிப்பிடிச்சுக் கொண்டு நிண்டு என்னெய்யப் போறியள் - இல்லைக் கேக்கிறன்.."

"பிள்ளை அதிலை டிரைவருக்குப் பின்னாலை ஏறு பிள்ளை ஆ... அண்ணை மேலை ஏறுங்கோ.... புற்போட்டிலை நிண்டா பொலிஸ்காறனோடை பிரச்சினைப் படோணும்... ஒரு மாதிரி ஒரு கால்வைச்சு மேலை ஏறுங்கோ...."

"ஆ....? இல்லை. இல்லை துரைவீதி இறக்கம் இல்லை. றைற்..."

(மெதுவான குரலில்) "அண்ணை கெதியா எடுங்கோ - அவன் துரத்திக் கொண்டு வாறான்.."

"கோண்டாவில் இறங்கிற ஆக்கள் கெதியா வாங்கோ. உள்ளுக்கை ஏறிட்டால்... பிறகு இறங்கிறேல்லை எண்டே இருக்கிறனியள்?"

"அடியிலை போய்க்கிடந்திடுவியள். கெதியா வாங்கோ.. புற்போட்டிலை இறங்கி நில்லுங்கோ... கெதியா, கெதியா...ம்...ம்...



கெதியா... வேலைக்குப் போறதுகள் எவ்வளவு மன அவதியோடை நிக்குதுகள்.... நீங்கள் ஆடி.... ஆடி.... இஞ்சாலை வாணை... நீ விழுந்தா நான் பிடிப்பன்தானே... டக்கெண்டு இறங்கு.... றைற்...."

"ஏறுறவை எல்லாம் ஏறுங்கோ... இடம் தரலாம் ஏறுங்கோ.... அக்கா இந்தக் குழந்தைப் பிள்ளையோடை வாற அக்காவுக்கு ஒராள் இடம் குடுங்கோ... என்னப்பா நீங்கள் பொம்பிளையளே...? ஒரு இரக்கம் இல்லாததுகள் அப்பா... எழும்பி எங்கை நிக்கிறதோ? இஞ்சாலை வாங்கோ.. இதிலை நான் புற்போட்டிலை அரைக்கால் வைச்சுக் கொண்டு நிக்கிறன் தானே... எல்லாம் சமத்துவம் எண்ணுவியள்... என்னோடை இதிலை நில்லுங்கோ பாப்பம்...."

"அக்கா ஒழும்புங்கோ... உந்தச் சீற்றிலை மூண்டு பேர் இருக்கேலாது. ஒழும்புங்கோ சொல்லுறன்... நீங்கள் உப்பிடிக் காலை வைச்சுக் கொண்டு இருந்தா இதிலை என்னெண்டு நிக்கிறது. பத்துப்பேர் நிக்கிற இடத்திலை நீங்கள் ஒராள் காலை வைச்சுக் கொண்டு இருக்கிறியள்... எழும்புங்கோ.. காச்சலோ? காச்சலுக்குத்தானே மருந்தெடுக்கப் போறியள்? அது மாறிவிடும் ஒழும்பி நில்லுங்கோ.."

"அம்மா கதையை விட்டிட்டுப் பின்னுக்குப் போங்கோ... பொம்பிளையளுக்கு எந்த நேரமும் கதைதான். நகைநட்டுக் கதை, சீலைக்கதை, வீட்டுக்கதை காணாதெண்டு இப்ப ஆசுப்பத்திரிக் கதை... பேந்து இறங்கி நிண்டு கதைக்கலாம்.... இப்ப இடங்களைப் பாத்துப் பின்னுக்குப் போங்கோ... உந்தக் கம்பியை ஏன் பிடிச்சுக் கொண்டு நிக்கிறியள்? அது விழாது நீங்கள் விடுங்கோ"

"என்னடாப்பா... உவன் றோட்டு முழுதும் தனக்கெண்ட மாதிரி ஓடுறான்... அருந்தப்பு.... "

"பஸ் எண்டாக் கெதியாத்தானே போகும். ஆறுதலாய்ப் போறதெண்டால் நீங்கள் மாட்டு வண்டில்லை வந்திருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னை என்ன கேக்கிறன்? பிறேக் பிடிச்சா முன்னுக்குப் பின்னுக்கு ஆட்டுந்தானே... இந்தச் சனத்துக்கை நீங்கள் கடைசி வரையும் விழமாட்டியள்.. பயப்பிடாமல் கையை விட்டிட்டு நில்லுங்கோ..."

(இரகசியமாக) "அண்ணை கிட்ட வந்திட்டான்... கெதியா...".

"ஆர்... புறுபுறுக்கிறது...? தங்கச்சி என்ன பிரச்சினை? பஸ் எண்டா ஆக்களின்ரை கைகால் படுந்தானே.... நீங்கள் பெரிய கற்புக்கரசியள் எண்டால் தனிக்கார் பிடிச்சுக் கொண்டு போயிருக்கலாமே... சத்தம் போடாமல் நில் பிள்ளை.... இவ்வளவு பேருக்கும் முன்னாலை உன்னை ஒண்டும் செய்யேலாது... நான் நிக்கிறன்... பயப்பிடாமல் நில் பிள்ளை...."

"இனியென்ன... தாவடி வந்திட்டுது. ....ஒரு மூச்சு விட முந்தி யாழ்ப்பாணம் வந்திடும்.... கொஞ்சம் கொஞ்சம் தள்ளி நில்லுங்கோ... தாவடியாரை நாங்கள் விட்டிட்டுப் போறதே.... அதுகளும் பாவந்தானே.... அம்மா ஏறுங்கோ... நானெல்லோ இடம் தாறது.... கெதியா ஏறுங்கோ... ஏன் உந்தப் பெட்டி படுக்கை எல்லாம் காவிக்கொண்டு வெளிக்கிட்டனீங்கள்.... பெட்டி ஐஞ்சு பேற்றை இடத்தைப் பிடிக்கப் போகுது... முன்னுக்கு இருக்கிற அண்ணை இந்தப் பெட்டியை ஒருக்கா மடியிலை வைச்சிருங்கோ... பெட்டிக்கு இரண்டு ரிக்கற் காசு தரோணும்.... ஆஸ்பத்திரிச் சாமானோ அந்திரட்டிச் சாமானோ பெட்டி பெட்டி தானே..."

"குளப்பிட்டி எல்லாம் ஒழும்பி வாங்கோ.... அம்மா கொஞ்சம் விலத்துங்கோ.... நடுப்பாதைலை நிக்கிறியள்... வாறவையை இஞ்சாலை வர விடுங்கோ... உங்கடை உடம்பும் வலு மெலிசு... அந்தச் சீற்றுக்கு இடையிலை நில்லுங்கோவன்.... மனுசற்றை



கால்தானே மிதிச்சது... அதுக்கேன் கத்திறியள்? மிதிவெடி வெடிச்சுக் கால் போனா என்ன செய்யப் போறியள்? இறங்கிறவை எல்லாம் புற்போட்டுக்கு வாங்கோ.... கெதியா.... கெதியா.. நான் தான் உங்களைக் கையைப் புடிச்சு இழுக்க வேண்டிக் கிடக்கு.... வாய் இல்லையே இறக்கம் எண்டு சொல்லிக் கொண்டு வாங்கோவன் ஏறேக்கை சந்தோசமாக ஏறுவியள்... பிறகு இறங்க மாட்டியள்.... அண்ணை உந்தப் பாட்டை நிப்பாட்டுங்கோ... அதுகள் பாட்டைக் கேட்டுக் கொண்டு நிக்குதுகள்... இறங்காதுகளாம்.... காசுகளை எடுங்கோ.... நான் என்ன பாங்கே நடத்திறன்... எல்லாற்றை காசும் மாத்த..? கொட்டப் பெட்டியளைக் கிளறிப் பாருங்கோ, சில்லறை அம்பிடும்.... அக்கா... மிச்சக் காசு தரச் சில்லறை இல்லை அக்கா.... இருந்தா நான் ஏன் உங்கடை காசைக் கொண்டு போறன்? இறங்குங்கோ இறங்குங்கோ... ஒரு ஐஞ்சு ரூபா மிச்சக் காசுக்கு இப்பிடி நிண்டு அடிபடுறியள்... காசைக் கண்ணிலை காணாத ஆள் மாதிரி... எப்பதான் இதுகள் திருந்தப் போதுகளோ தெரியாது...."

"ஏறுங்கோ... ஏறுங்கோ... இப்போதைக்கு இந்த றோட்டிலை பஸ் ஒண்டும் வராது. உங்களை என்னெண்டு விட்டிட்டுப் போறது? ஒரு மனச்சாட்சி வேண்டாமே? ஏறுங்கோ... அக்கா... உங்களைத்தான்.... என்ன சீ.ரி.பி யைப் பார்த்துக் கொண்டே நிக்கிறியள்..... நாளைக்கு எங்கடை பஸ்ஸை மறிப்பியள் தானே... அப்ப பாப்பம்..."

"அண்ணை றைற்......"

"அக்கா உதிலை இஞ்சின் பெட்டியிலை இராதேங்கோ. சுடும் உங்களுக்காண்டித்தான் சொல்லுறன். ஒழும்பி நில்லுங்கோ... பஸ் போற பக்கம் திரும்புங்கோ..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லை அண்ணை முன் சீற்றுக்கு போகாதேங்கோ அதிலை மூண்டு பேர் இருக்கேலாது. அண்ணை கியர் போடேலாது கொஞ்சத்தூரம் தானே... நில்லுங்கோ... தலை சுத்துதோ... விழமாட்டியள் பயப்பிடாதேங்கோ..."

"இறக்கம் இல்லை....றைற்.."

"அடுத்த ஹோல்ற் இறங்கிறவை எல்லாம் காசுகளைக் கையிலை எடுத்துக் கொண்டு வாங்கோ... இனிமேல்தான் கொட்டப் பெட்டியள் திறப்பியள்... பஸ்சுக்கை ஏறேக்கை காசைக் கையிலை கொண்டு வர ஏலாதே!"

"தங்கச்சி... கண்ணாடியோடை சரியாதை.... கண்ணாடி உடைஞ்சு கையிலை குத்தப் போது...."

"கொக்குவில் பள்ளிக்குடம் இறங்கிறவை கெதியா வாங்கோ. பிள்ளை ஆறு ரூவா பிள்ளை... ஆளைப் பாத்தாக் கலியாணம் செய்யிற வயது மாதிரிக் கிடக்கு... என்ன பிள்ளை அரை ரிக்கற் என்றாய்... எடு பிள்ளை... யூஸ் வாங்க வைச்சிருக்கிற காசை எடுத்து விடு பிள்ளை வெளியாலை..."

"ஆச்சி.... பெட்டி தருவன்... நான் என்ன கொண்டே போப்போறன்? அண்ணை அந்தப் பெட்டியை ஒருக்காத் தாங்கோ... அதில்லை - மற்றப் பெட்டி.. பிடி....பிடி.... கெதியா... பள்ளிக்கூடப் பிள்ளையளுக்கு நேரம் போட்டுது..."

"ஏறுங்கோ... ஏறுங்கோ... தம்பி.. இடிச்சுக் கொண்டு போ பின்னாலை...."

"ஆரது... சத்தி வருதோ? யன்னலுக்குள்ளாலை தலையை வெளியிலை நீட்டு பிள்ளை! அட.... வாகனம் வருதோ எண்டு



பாத்தெல்லோ நீட்டோணும்... அருந்தப்பு... தலை பறந்திருக்கும் இப்ப..."

"ஆ... றக்கம்... ஆச்சி இறங்கணை கெதியா.... ஆ.... ஆ.... என்னெணை ஏன் விழுந்தனி? அது வளர முந்தி மாறிடும் ஒழும்பு... ஒழும்பு... றைற்...."

(உரப்பு மிகவும் குறைந்த குரலில்) தட்டாதெருவோடை முந்தட்டும் விடுங்கோ... பிறகு சனம் நில்லாது...."

"அண்ணை உவன் துர்க்கா எங்கினேக்கை போறான்... ஆ...ஆ... பிழையில்லை...."

"சிவலிங்கப் புளியடி இறக்கம் இருக்கோ? உங்கினை பின்னுக்கு நிண்டு அனுங்காமல் வெளிக்கிட்டு வாங்கோ... இந்த நூறு ரூவாத் தாளுகளைக் கொண்டு ஏன் வெளிக்கிர்றனியள்? நீங்கள் பணக்காறர் எண்டு காட்டவோ? கொண்டாங்கோ... இரண்டு ரூவா சில்லறை இல்லை.. பிடியுங்கோ நூறு ரூவாயைத் தந்திட்டுப் பேந்து ரண்டு ரூவா வேண்டிறதுக்கும் அடிபடினம்..."

"பொம்பிளையளுக்கு வாய் கூடிப்போச்சு...."

"சரி... சரி... பட்டணம் வந்திட்டுது... ஆறுதலா ஒவ்வொருத்தரா காசுகளையும் எடுத்துக் கொண்டு வாங்கோ பாப்பம்... என்ன அவசரமப்பா? பட்டணத்தைக் கண்டோண்ணை ஏனப்பா அவசரப்பர்றியள்? இருங்கோ. இருங்கோ.... இப்பென்ன ஆரோ செத்துப் போட்டினமே... ஒராள் ஒராளா வாருங்கோ... அக்கா கொஞ்சம் அவசரப்படாதேங்கோ... ஒரு நாளைக்கு வேலைக்குக் கொஞ்சம் பிந்திப் போனா என்ன வேலை போடுமோ? ஆஸ்பத்திரிலை பின்னேரம் மட்டும் மருந்து குடுப்பினம்... அம்மா கொஞ்சம் நில்லுங்கோ.. எங்கை ஏறின்னீங்கள்... சுன்னாகமோ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆம்பிளையளை விட்டிட்டு வாறன் பொறுபிள்ளை... பள்ளிக் குடத்திலை போய் இப்ப பி.ரி. தானே செய்யிறது...... நில் வாறன்...."

"அப்பாடா.... இதுகளோடை நான் படுறபாடு.... பெரியபாடு...."

"அண்ணை ஏன் இருக்கிறியள்? பஸ்ஸாலை இறங் கேல்லை?"

"தம்பி.... நான் ஒரு டொக்டர். வெளிநாட்டிலை இருந்து வந்தனான். என்ரை சொந்த இடம் யாழ்ப்பாணம் தான். போர் நெருக்கடியள் இதுகளாலை உள ஆரோக்கியம் பாதிக்கப்பட்ட எங்கடை சனத்துக்கு ஏதும் உதவி செய்திட்டுப் போக வந்தனான்... உளநலம் பாதிக்கப்பட்டவையை வைச்சுப் பராமரிக்க ஒரு இல்லம் கட்டிக் குடுப்பம் எண்டு யோசிச்சுக் கொண்டு வந்தனான்.... இப்ப... இதிலை வந்தாப் பிறகு.... உமக்கு முதல்லை உதவி செய்வம் எண்டு நினைக்கிறன்...."

"எனக்கோ? அப்ப எனக்குச் சொந்தமா ஒரு மினி பஸ் வேண்டித் தாறியளே... ஓடுவம்?"

✦ ✦ ✦ *(வலம்புரி - 14. 02. 2003)*



# 8

# தலையீடு



உலக நாடுகள் எல்லாவற் றிற்கும் பொலிஸ்காரன் அமெரிக்கா. அந்த நாட்டில் உள்ள "அரிசோனா" என்ற இடத்தில் ஒரு மாயக் கடதாசியும் பேனாவும் நீண்டகாலம் நண்பர்களாய் இருந்தனர்.

அவர்கள் வசித்து வந்த வீட்டின் மேசையில், ஒரு வெள்ளித் தட்டில் பலவகையான பலகாரங்கள் வைக்கப்பட்டிருந்தன. அவை மூடப்படவில்லை. எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லாமல் பல வீட்டு இலையான்கள் அந்தத் தட்டுகளில் வந்து அமர்ந்தன, கலைந்தன,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போயின, வந்தன, மீண்டும் வந்தன, அமர்ந்தன, போயின.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த பேனாவுக்குப் பொல்லாத ஆத்திரம் வந்தது.

"எங்களுக்குக் கொலரா நோய் பரப்ப வேண்டுமென்று வந்திருக்கிறார்கள்"

பற்களை அவன் நறநற வென்று கடித்தான். "இல்லை இவை நல்ல இலையான்கள்....."

என்று மறுத்தான் கடதாசி

"எப்படியும் இருக்கட்டும். நோய் என்பது நிம்மதியைக் குலைக்கும் விடயம். அது எங்களை அணுகவிடக் கூடாது மனிதர்களை வேண்டுமானால் பீடிக்கட்டும்" என்று பேனா சொன்னதைத் தலை அசைத்து ஏற்றுக் கொண்டான் கடதாசி.

"இவற்றைக் கொல்ல வேண்டும் வேறு வழி இல்லை" என்று பேனா கூற,

"கொலை செய்வது விழுமியங்களை மீறும் செயல் இல்லையா?"

என்று கேள்வி எழுப்பினான் கடதாசி.

"தீயவர்களைக் கொல்வது அறம். பாவமும் இல்லை" என்று சமாளித்தான் பேனா.

உடனே கடதாசி மேசையில் வந்து அமர, பேனா கடதாசியின் மேல் இலையான்களின் படத்தை வரைந்தான். பிறகு தான் வரைந்த படங்களை வெட்டினான். அவர்கள் மாயச் சக்தி





கொண்ட கடதாசியாகவும் பேனாவாகவும் இருந்தபடியால், உடனேயே இலையான்கள் எல்லாம் இறந்து வீழ்ந்தன.

"சரி இனி எங்களுடைய பலகாரங்கள் எல்லாம் பழுதடையாமல் இருக்கும். நாங்கள் எமது திட்டப்படி இன்று "கைபாப்" காட்டுப் பிரதேசத்தைப் பார்வையிட்டு வருவோம் புறப்படு" என்று எழுந்தான் பேனா.

அவன் தனது முகத்துக்குப் பவுடர் போட்டு, தலை இழுத்து, அழகான பச்சை உடை அணிந்து கொண்டு புறப்பட்டான்.

"உனக்கு உன்னை அழகு செய்வதில் எப்போதும் அதீத விருப்பம். பளபளவென்று கவர்ச்சியாக இருக்கிறாய். நான் எப்போதும் வெள்ளை நிறத்தில் எளிமையாகப் புறப்படுவதைத்தான் விரும்புவேன்... உனக்குத் தெரியுமா? வெள்ளை நிறத்தை விரும்புபவர்கள் மனதில் தூய்மையானவர்கள்"

என்று கடதாசி பெருமைப்பட,

"உன்னை நீயே பாராட்டிக் கொண்டது போதும். பச்சை நிறத்தை விரும்புபவர்களின் மேன்மைபற்றி உளவியல் நூல்களை வாசித்து அறிந்துகொள். இப்போது, காட்டு விலங்குகளைப் படம் பிடிக்கக் கமராவை எடுத்துக் கொள்..."

என்று சொன்னான் பேனா.

ஆகாயத்தையும் மண்ணையும் இணைத்துத் தண்ணீர் சரம் கட்டிக் கொண்டிருந்த ஒரு அழகான காலைப் பொழுதில், இருவரும் தமது சொந்தக் ஹெலிகொப்டரில் "கைபாப்" காட்டை அடைந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குளத்திற்கு அருகில் இருந்த பசுமையான புல்வெளியில் ஹெலியை இறக்கப் பேனா முயன்ற போது எதையோ கண்டு விட்டான் கடதாசி.

"அங்கே பார், அங்கே பார்" என்று பேனாவின் தலையைத் தட்டினான்.

அவன் காட்டிய திசையில் சிங்கம் ஒன்று, மான் ஒன்றைத் துரத்திச் சென்று பாய்ந்து பிடித்துத்தின்று கொண்டிருந்தது.

"பாவம் மான் அநியாயமாக இறந்துவிட்டது" என்று கண்ணீர் வடித்து அழுதான் கடதாசி.

''நாங்கள் புறப்படும்போது ஐம்பது இலையான்கள் இறந்தன. அதற்கு அழவில்லை" என்று கடதாசியைச் சீண்டினான் பேனா.

"கொலை செய்வது விழுமியத்தை மீறும் செயல் என்று நான் உனக்குச் சொன்னேன். நீ தீயவர்கள் என்று ஏதோ சொல்லிச் சமாளித்துவிட்டாய். மானோ யாருக்குமே தீமை செய்யாத விலங்கு. பாவம் அது இறக்கக் கூடாது..."

என்று மீண்டும் விக்கி விக்கி அழுதான் கடதாசி. "சரி அப்படியானால் இந்தக் காட்டின் மான்களைக் காப்பாற்றுவதற்கு ஒரு திட்டம் போடுவோம்" என்று எழுந்தான் பேனா.

"ஆம். இங்கே யாரும் வேட்டையாடக் கூடாதென்று எழுதிக் காட்டின் எல்லைகளில் மாட்டுவோம். சிங்கங்கள், நரிகள், ஓநாய்கள் ஆகியவற்றைக் கொல்வதற்கென்று விசேட வேடர்களை நியமிப்போம். அவர்களுக்கு மிக உயர்ந்த சம்பளம் கொடுப்போம்.



அத்துடன் எமது மாயசக்தியைப் பாவித்து இந்தச் சிங்கங்களை நஞ்சூட்டிக் கொல்வோம்..."

என்று சபதம் செய்தபடி ஹெலிகொப்டரை விட்டு இறங்கினான் கடதாசி.

மேகக் குவியல்கள் மேட்டு நிலங்களைச் சுகம் விசாரித்துக் கொண்டிருந்த ஒரு மாலைப் பொழுதில் மீண்டும் மாயக் கடதாசி, பேனாக்காரர்களின் ஹெலிகொப்டர் 'கைபாப்' காட்டில் வந்திறங்கியது.

காட்டில் இப்போது ஊனுண்ணிகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்து விட்டது. வேட்டைக் காரர்கள் யாரும் காட்டின் பக்கம் தலைவைத்துப் படுக்க முடியாது. விசேட சம்பளம் பெறும் வேடுவர்கள் சிங்கங்களைக் கொன்று தொலைத்து விட்டார்கள். எல்லாமே கடதாசியும் பேனாவும் செய்த ஏற்பாடுகள் தான்.

''மான் கூட்டத்தைப் பாதுகாப்பதற்கான திட்டம் வெற்றிகரமாகச் செயற்படுகிறது"

ஹெலிகொப்டரின் படிகளில் இறங்கிக் கொண்டிருந்த கடதாசியின் முகத்தில் வெற்றிப் பெருமிதம் பசை போல அப்பிக்கிடந்தது.

"நாங்கள் இந்தக் காட்டுக்கு முதல்முறை வந்தபோது, இங்கு இருந்த மான்களின் எண்ணிக்கை உனக்கு நினைவிருக்கிறதா?" பேனா கேட்டான்.

"நினைவிருப்பதென்ன? டயரியில் குறித்து வைத்திருக்கிறேன். இதோபார். நாலாயிரம்..." குறிப்பைக் காட்டினான் கடதாசி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



''இப்போது நிச்சயமாகக் கூடியிருக்கும். எண்ணிப் பார்ப்போம்...'' இதுவும் கடதாசிதான்.

''நூறு மீற்றர் நீளம், நூறு மீற்றர் அகலமான இடம் ஒன்றை அளந்து குறி. அதற்குள் இருக்கும் மான்களை எண்ணிக்கொள். பிறகு காட்டின் மொத்த பரப்புக்குக் கணக்குப் பார்க்கலாம்'' என்று சொல்லிக் கொண்டே ஒரு மர நிழலில் குந்தி விட்டான் பேனா.

''நீ நல்ல சோம்பேறி. என்னைக் கொண்டு நன்றாக வேலை வாங்குவாய்'' என்று புறுபுறுத்துக் கொண்டே அளவு நாடாவை எடுத்துக் கொண்டான் கடதாசி.

''இந்தப் பத்தாயிரம் மீற்றர் வர்க்கப் பரப்பில் பத்து மான்கள் இருக்கின்றன'' மிகுந்த களைப்புடன் அளவு நாடா பின்னுக்கு இழுபட வந்த கடதாசி தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான்.

''ஹெலிகொப்டரில் கோப்பி இருக்கிறது. எடுத்துக் குடி நான் கணக்குப் பார்க்கிறேன்'' என்று கூறிக்கொண்ட பேனா மரத்தடியில் சாய்ந்தான்.

அவன் கணக்குப் பாடத்தில் புலிதான். கைபாப் காட்டின் மொத்தப் பரப்பு முப்பது மில்லியன் மீற்றர் வர்க்கம். பேனா மனக் கணக்காகவே பார்த்து விட்டு,

''இந்தக் காட்டில் இப்போது முப்பத்தாயிரம் மான்கள் இருக்கின்றன.'' என்று ஆர்ப்பரித்தான்.

''இன்னும் இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சில நரிகளும் ஓநாய்களும் இருக்கின்றன. அவற்றையும் கொன்றொழித்து விட வேண்டும்'' என்று கூறிக் கொண்டு கடதாசி பேனாவுக்கு அருகில்





வந்து படுத்தான். பேனா சில நரிகளின் படங்களையும் கடதாசியில் கீறி வெட்டினான்.

''இனிப் பிரச்சினை இல்லை. அடுத்தமுறை நாங்கள் வரும்போது எல்லா மான்களும் மிக மகிழ்வாய் ஓடித் திரிவதை, எம்மோடு வந்து விளையாடுவதை, மிரளுவதை விடுத்து நிமிர்ந்து நிற்பதைப் பார்த்து ரசிக்க முடியும்'' என்று கூறிச் சிரித்துக் கைதட்டிக் கொண்டே ஹெலிக் கொப்டரில் ஏறினர் நண்பர்கள்.

நீண்ட காலமாக அந்தக் காட்டைப்பற்றியே மறந்து போனார்கள் அவர்கள். மான்கள் மகிழ்ச்சியாக வாழ்கின்றன என்ற நம்பிக்கை ஏற்பட்டு விட்டபடியால் காட்டை எட்டியும் பார்க்கவில்லை. வேறுபல வேலைகளுந்தான்.

ஏறத்தாழ எட்டு வருடங்கள் ஓடி மறைந்துவிட்டன. இந்த இடைக்காலத்தில் 'விஞ்ஞானம்' என்ற ஒரு புதிய நண்பனும் இவர்களுடன் சேர்ந்து கொண்டான்.

மான்களின் இராச்சியத்தைப் பார்ப்பதில் ஆசை கொண்ட நண்பர் குழு, பூமியைப் பொசுக்கி விடுவது போலச் சூரியன் எறித்த ஒரு பகல் பொழுதில் மீண்டும் 'கைபாப்' காட்டை அடைந்தது.

மான்களின் மகிழ்வைத் தேடப்போய்.... மான்களையே தேட வேண்டியதாயிற்று. அளவு நாடாவுடன் தேடி....தேடி....தேடி.... தேடி....

''இருபதாயிரம் மீற்றர் வர்க்கப் பரப்பிலும் ஒரு மானையும் காணவில்லை...'' என்ற அதிர்ச்சித் தகவலை வெளியிட்டான் கடதாசி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



“புது நண்பனைக் கலைத்துவிட்டு ‘இயற்கைச் சமநிலை’ என்ற நண்பனை உங்களுடன் சேர்த்துக் கொள்ளுங்கள். எல்லாம் இனிதே நிறைவேறும்.” என்று கடதாசியின் காதில் முணுமுணுத்தது காற்று.

“எங்களுடைய மான்களுக்கு என்ன நடந்தது காற்றண்ணா?” அழுது கொண்டே கேட்டான் கடதாசி

“லட்சக்கணக்கில் பெருகிவிட்ட மான்களுக்கு உணவு வேண்டாமா? கீழே இருந்த தாவரங்கள் எல்லாம் வெயிலுக்கு வாடிப்போக... செடிகளைக் கடித்தன மான்கள். அதற்கு மேல்... பெரிய மரங்கள் எட்டவில்லை. மான்கள் குறைவாக இருந்திருந்தால் செடிகள் உணவுக்குப் போதும். எண்ணிக்கை வேகமாக அதிகரித்த போது உணவுப் பஞ்சம் ஏற்பட.... எல்லா மான்களும் ஒட்டுமொத்தமாய் இறந்து போயின....”


என்று விளக்கம் தந்தது காற்று. ஏக்கமும், தவிப்பும், வேண்டுதலும், கவலையும் நிறைந்த பார்வையைப் புலப்படுத்தின கடதாசியின் கண்கள்.

✦ ✦ ✦ *(வலம்புரி - 28. 02. 2003)*



# 9

# இளம் கனவு



“இதிலை இருங்கோ சிவதாஸ்.....”

கதிரையில் இருந்தார். என்னை நிமிர்ந்து பார்க்க வில்லை. பத்து நிமிடத்திற்கு மேலாகத் தலையைக் குனிந்தபடி கதிரையைக் கையால் சுரண்டிக் கொண்டு அமர்ந்திருந்தார். எதுவும் பேசவில்லை.

“உங்களுக்குக் கதைக்கக் கஷ்டமாய் இருக்குப் போல....”

“...............................”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“என்னோடை ஏதோ கதைக்க எண்டுதான் வந்தனீங்கள். எண்டாலும் எப்பிடித் தொடங்கிறது எங்கை தொடங்கிறது எண்டு தெரியாமல் இருக்கு.....”

மெதுவாகத் தலையை நிமிர்த்தி என்னைப் பார்க்கிறார் “இப்ப எங்கையிருந்து வாறீங்க...?”

“செந்தீ முகாமிலை இருந்து... முந்தி வன்னியிலை இருந்தனாங்கள்....”

“இடம் பெயர்ந்து இருக்கிறீங்கள்.....”

“ஓம்....” மெதுவாகத் தலையாட்டிவிட்டு மீண்டும் அமைதியானார். சிறிது நேரம் பொறுத்திருந்தேன்.

“உங்களுக்கு விருப்பமான விஷயங்களைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கோ.....”

“அம்மாவிலைதான் விருப்பம்......”

“ஆஹா..... சிவதாஸுக்கு அம்மாவிலை சரியான விருப்பம் அதைச் சொல்லேக்கையே உங்களுக்குச் சந்தோஷமாக இருக்கு.... அப்ப அப்பா.....”

“அவர் எங்களோடை இல்லை...”

மீண்டும் தலை குனிந்தார். இரண்டு கைகளையும் எடுத்துத் தனக்குள் பிசைந்து கொண்டார்.

“உங்கடை அப்பா உங்களோடை இல்லை என்றது உங்களுக்குக் கவலையா இருக்கு இல்லையா? அப்பாவைப் பற்றிக் கொஞ்சம் சொல்றீங்களா சிவதாஸ்.....?”



“அவர் வேறை கலியாணம் செய்து போட்டார். எங்கடை வீட்டை வாறது குறைவு. எப்பாலும் இருந்திட்டு வருவார். வந்தாலும் அம்மாவோடை சண்டை பிடிப்பார்”

“அப்பா வீட்டை வராமல் இருக்கிறதும் வந்தாலும் அம்மாவோடை சண்டை பிடிக்கிறதும் உங்களைச் சரியாப் பாதிச்சிருக்கு......”

மீண்டும் ஒருமுறை குனிந்தார். கதிரையைக் கடுமையாகச் சுரண்டினார்.

“சிவதாஸுக்குப் படம் கீற விருப்பமா?”

எனது கண்களுக்குள் பார்த்தார். ஒரு கடதாசியையும் கலர்ப் பெட்டியையும் நீட்டினேன். மௌனமாகப் பெற்றுக் கொண்டார். நிலத்தில் அமர்ந்து கலர்ச் சோக்குகளைப் பரப்பினார். பின்னர் கையால் படத்தை மறைத்து மறைத்துக் கீறி முடித்தார். “கெட்டிக்காறன் நல்லாப்படம் கீறியிருக்கிறீங்க...” சிரித்தபடி படத்தை என்னிடம் தந்தார். நான் படத்தை ஒருமுறை பார்த்தேன். மனதிற்குள் திக்கென்றது. படம் பல விஷயங்களை எனக்கு விளக்குவது போலிருந்தது. என்றாலும் விளங்காதது போலவும் இருந்தது. சிவதாஸைப் பார்த்தேன். கதிரையில் அமர்ந்து நான் படத்தைப் பார்ப்பதையே பார்த்துக் கொண்டிருந்தார்.

“இது சிவதாஸ் கீறின படம்... நல்ல வடிவான படம்.... எண்டாலும் எனக்கு இந்தப் படத்தைப் பற்றிக் கொஞ்சம் விளங்கப்படுத்தினால் நல்லா இருக்கும்....”

எழுந்து எனக்கருகில் வந்தார். தானும் சிறிது நேரம் படத்தைப் பார்த்தபடி இருந்தார்.

“இது உங்கடை வீடா?”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்கடை வீடுதான் கனவிலை இப்பிடித்தான் வந்தது"

"அப்படியா? நீங்க கனவு கண்டிருக்கிறீங்க. அது மனதிலை நல்லாப் பதிஞ்சிட்டுது. அந்தக் காட்சியைத் தான் இப்ப படமாகக் கீறி இருக்கிறீங்க....."

மீண்டும் மயான அமைதி.

"அந்தக் கனவு ஒரு பயங்கரமான கனவு போலை இருக்கிறது. அதைப்பற்றி எனக்கு கொஞ்சம் சொல்லுவீங்களா?"

படத்தில் குறிப்பிட்ட ஓர் இடத்தைச் சுட்டிக்காட்டி "இதுதான் அம்மா" என்றார். சீலை உடுத்த அந்த உருவத்தைச் சுற்றிச் சிவப்பு நிறக் கோடுகள் கூடுபோல வரையப்பட்டிருந்தன. எடுத்த எடுப்பில் பார்த்தால் அந்த உருவம் எரிவது போல இருந்தது படம்.

"இது அம்மாவா? சரி.... அவவுக்குப் பக்கத்திலை நிக்கிறது?"

"நானும் தம்பியும்......."

"அங்காலை தள்ளி நிக்கிறது....?"

"அதுதான் அப்பா...."

"அவர் கையிலை ஏதோ வைச்சிருக்கிறார்....."

"நெருப்பெட்டி......"

"படத்தின்ரை அந்த மூலையிலை வேறை இரண்டு பேரைக் கீறியிருக்கிறீங்க?"

"அது பக்கத்து வீட்டுக்காரர்......"



"விளங்குது. நீங்கள் கண்ட பயங்கரமான கனவைத்தான் இந்தப்படத்திலை கீறி இருக்கிறீங்கள்......"

மெதுவாகத் தலை அசைத்தார்.

"கனவு கண்ட நேரம் உங்களுக்குச் சரியான பயமா இருந்தது......."

"ஓம்... அம்மாவை அப்பா நெருப்பாலை எரிக்கிற மாதிரிக் கனவு நெடுக வரும். நான் திடுக்கிட்டு முழிச்சுப் பாப்பன். எனக்குச் சரியான பயமா இருக்கும். உடம்பெல்லாம் நடுங்கும்....."

"உண்மையிலையும் அம்மாவுக்கு அப்பாவாலை ஏதும் கரைச்சல் வரலாம் எண்டு பயப்பிடுறீங்க......"

"அவர் ஒரு நாள் அம்மாவோடை சண்டை பிடிச்சுக் கொண்டு, வீட்டிலை கிடந்த அம்மாவின்ரை உடுப்புகள், கடதாசியள் எல்லாம் போட்டுக் கொழுத்தினவர்"

"அது உங்களுக்குச் சரியான பயத்தைத் தந்தது"

"அம்மாவும் செத்துப் போடுவாவோ எண்டு எனக்குப் பயம்....."

"அப்பா உங்களை விட்டிட்டுப் போட்டார். சிலவேளை அம்மாவுக்கம் ஏதும் நடந்திடுமோ எண்டு சரியாப் பயப்பிடுறீங்க......"

"பள்ளிக்கூடம் போனாலும் எனக்கு அம்மாவின்ரை நினைவு வந்திடும்....."

"அதனாலை நீங்க பள்ளிக்கூடம் போறதும் குறைஞ்சிட்டுது....."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம்..." என்று மெலிதாகத் தலை அசைத்தார். "பள்ளிக்கூடம் ஒழுங்காப் போகாததாலை..... பாடங்களிலை தேர்ச்சி மட்டத்தை அடைய ஏலாமல் இருக்கு...."

"ஓம்...."

"நாளைக்கு அம்மாவை ஒருக்கா வந்து என்னோடை கதைக்கச் சொல்லுறீங்களா?...."

"ஓம்........"

✦ ✦ ✦

வான் விளிம்பின் ஓரம் ஒரு பட்சி பறந்து செல்கிறது. ஒருவன் திடீரென்று வந்தான்.

"தம்பி ஊர்வலம் இதாலை வரேக்கை கொஞ்சம் பூ எடுத்துத் தூவி விடுங்கோ....." என்று என் மகனிடம் சொன்னான். அப்படியே ஒவ்வொரு வீட்டு வாசலிலும் ஏதோ சொல்லிக் கொண்டு போனான்.

"நடந்து நடந்தே அவனுடைய கால்கள் உயரமாய் வளர்ந்து விட்டன" என்று நினைத்தேன்.

ஊரடங்குச் சட்ட உறைப்பால் வெறிச்சோடிப் போயிருந்த தெருவில் இப்போது காணப்பட்ட சில பையன்கள் தோரணம் கட்டிக் கொண்டிருந்தனர்.

தோரணம் கட்டுவதற்கு அவர்கள் பழைய 'ரேப்' நாடாக்களைப் பயன்படுத்தினர் என்பது, சீனியும், மண்ணெய்யும், தீப்பெட்டியும் மட்டுமல்ல... கயிறும் கூடக் கிடையாமல் போய்விட்ட தொண்ணூறுகளின் அவலத்தைச் சுட்டியது.



"பாண்ட்" வாத்தியம் முழங்க ஆரம்பித்தபோது, உடல் ஒருமுறை உதறி ஓய்ந்தது. இதயம் சில்....ல்....ல்... என்றிருந்தது.

தனது நண்பர்களின் நிலையை விட்டுத் தனித்து முன்னே சென்று, எதிரியை நிலை குலைய வைத்த வேளை, வானத்தில் இருந்து ஹெலியால் சுடப்பட்ட வீரன் ஒருவனின் பூதவுடல் இன்னும் சில நிமிடங்களில் இப்பாதையால் வர இருக்கிறது.

"அம்மா.... என்ன பூ அம்மா போட வேணும்?" மகன் தனக்கிடப்பட்ட பணியில் ஆர்வமானான்.

"சுவாமிக்குப் போடுற பூ எதுகும் போடலாம் ராசா...."
எவர் சில்வர் தட்டைத் தூக்கிக் கொண்டு போய் நித்திய கல்யாணிப் பூக்களை அவன் பிடுங்கத் தயாரான போது,

"குடு.... குடு..... குடு.... குடு.... குடு...." யமனின் வருகையை அறிவிப்பது போலச் சத்தம் எழுப்பிக் கொண்டு வானத்தில் ஒரு ஹெலி.

"தம்பி றோட்டிலை ஆக்களைக் கண்டிட்டுச் சுடப்போறான். பங்கருக்குப் போங்கோ...." வானத்திலிருந்து அமுலுக்கு வரும் ஊரடங்கிற்கு நாங்கள் பயந்தான்.

மார் முட்டி நிற்கும் குருவி ஒன்று மாமரத்தில் உட்கார்ந்து "கிக்கிக்.... கிக்கிக்கீ...." என்று கத்துகிறது.

அது ஹெலிக்குப் பயப்படாமலே வீரனுக்கு அஞ்சலி செலுத்தத் தயாராகும் நிலை என் மனதில் வெட்கத்தை ஏற்படுத்துகிறது. நேரம் மாலை ஐந்து மணி என்பதை உணர்த்தும் வகையில்.... வானத்தின் செம்மைப் பிரதேசம் ஒன்று அப்படியே பூமியில் பூத்திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கருக்குள் இருந்தபோதும் காதுகள் விரிந்தே இருந்தன. ஊர்வலம் அண்மித்து வருவதை 'பாண்ட்' வாத்திய ஒலியின் அதிகரித்த உரப்பு உணர்த்துகிறது.

மாவிலைகளின் நடுவே ''கண்ணாரே கடையாரே'' விளையாடும் மாங்காய்களும் எட்டி ஊர்வலம் பார்க்கின்றன.

முதலில் மெதுவாய் நகர்ந்துவரும் மாட்டுவண்டி! வாகனமாய் வருவதற்கு டீசல் எங்கே உண்டு?

மாட்டு வண்டியில் பூட்டப்பட்ட ஒலி பெருக்கியில் ஒரு கவிதை... உணர்வு நிறைந்த குரலில் உள்ளத்தைச் சுண்டி இழுக்கிறது.

''இரத்தம் சிந்திய மண்ணில் உயிரை உருக்கி வார்த்தவன். இனத்தின் முதுகில் ஏறிய கால்களை எரித்திட நெய்யாய் ஆனவன்....''

அவன் கொடி போர்த்த போர்வையில் மலர்ப்படுக்கையில் படுத்து... மெதுவாய் வந்து கொண்டிருந்தான்.

முள் நிறைந்த பாதையில் துணிந்து சுவடு பதித்தவர்களை நினைத்துத் தொங்கிய முகங்களுடன் சீருடை அணிந்தவர்களின் அணிவகுப்பு.

அவன்து கனவுக் கொடியை உலர விடோம் என்று கங்கணம் கட்டி எழுப்பும் முரசுகளின் ஓசை.

எரிகின்ற அடுப்பொன்றை இதயத்தில் சமந்து திரிந்த வீரன். அவனது உடல் மட்டுந்தான் இன்னம் சில பொழுதுகளில் எரிக்கப்படும். உணர்வுகள்?

அக்கம் பக்கத்து வேலிகளில் எல்லாம் தலைகள் முளைக்கத் தொடங்கின.



ஒவ்வொரு படலையும் போலவே எங்கள் படலையும் பூச் சொரிந்தது.

''ஏன் தம்பி... வண்டிலுக்கு மேலை உயரமா ஏறிஞ்சிருக்கலாமே? வடிவாயிருக்கும்?'' நான் கேட்டேன்.

''அந்த முகத்தைப் பார்க்க... எனக்கு முகத்திலையே பூப்போட்டுக் கும்பிட வேணும் போலை இருந்தது...''

மகன் சொன்னான்.

மீண்டும் மேலே வான ஊர்திகள் ஊர்வலம் போகின்றன. இம்முறை எட்டு 'பொம்மர்கள்' வழிகாட்டும் ஹெலி ஒன்றுடன்! மேல் ஊர்வலம் கீழ் ஊர்வலத்தை எந்தவகையிலும் பாதிக்கவில்லை.

எம்மை எல்லாம் மௌனமாய்ப் பாதித்தவன் போய் மறையச் சூரியனும் மறைந்து போனான்.

நடு இரவில் கண் விழித்தேன்.

குடும்பத்தின் அகச் சூழல் ஊர்வலம், நாட்டின் புறச்சூழல் ஊர்வலத்தைப் பாதித்திருந்தது. காலையில் சீர்மியரிடம் சென்று வந்த மகனைப் படுக்கையில் காணவில்லை.

மகனுக்கு வயது ஏழு!

✦ ✦ ✦ *(வலம்புரி - 08. 02. 2003)*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

## பூக்குளிப்பு

கண்ணுக்குத் தெரியாத சாட்டைகள் தமிழனையே இலக்காகக் கொண்டு வீசப்பட்டன. அவற்றில் ஒன்றுதான் அந்தப் பொருளாதாரத் தடை!

எறும்பு போல இவள் தபாற் கந்தோரில் ஒவ்வொரு ரூபாயாய்ச் சேமித்து வைத்து என்ன பயன்? தபாற்கந்தோர் திறப்பதில்லை. அத்தி பூத்தாற் போலத் திறந்தாலும் ''காசில்லை'' என்று கை விரிக்கிறார்கள். முத்திரையே இல்லாதவர்களிடம் காசு எப்படி இருக்கும்?







இரவு முழுவதும் ஒரே அட்டகாசம்... பதினாறு திக்கிலும் கேட்ட பொம்மர் குண்டு வீச்சுகள்.... ஹெலி தீர்த்துக் கட்டிய கலிபர் தாக்குதல்கள்!

இரவு முடிந்து வருகிற இந்த விடிகாலைப் பொழுதில் கூட ஒரு கண்தூங்க முடியவில்லை. இறக்கை அடித்துச் சேவல் கூவும் சத்தத்திற்குக் கூட இதயம் ஒருமுறை உறைந்து மீளுகிறது. சத்தம் இன்றி இடைவெளியாகும் ஓரிரு நிமிடங்களில் கூட, நிசப்தமே பேரொலியாய் உள்ளத்தை ஊடறுக்கிறது. காற்றின் ஒவ்வொரு அசைவிலும் காலன் வருவதாய்க் கனவு வருகிறது. பயம்.... பயம்... விபரிக்க முடியாத பயம்!

இரவில் விடிவிளக்கு வைத்துக் கொண்டு தூங்குவதே சிறு குழந்தைக்காலம் முதல் இவளுடைய பழக்கம். பயங்கரக்கனவு கண்டு கண் விழிக்கும் போதும், மினுக்கு மினுக்கென்று ஒரு சிறு வெளிச்சம் தெரிந்தால் நிம்மதியாக இருக்கும். கிராமத்திற்கு எழுபதுகளின் பிற்பகுதியில் மின்சாரம் வந்த பிறகு, அவள் அறையில் நீல நிறத்தில் ஒரு ''பெட்றூம் லைற்'' கட்டாயம் எரியும். மின்சாரம் முற்றாகக் கொலை செய்யப்பட்டு, மண்ணெய்யும் இருநூற்று நாற்பது ரூபா விற்கிற இந்த நேரத்தில்.... இரவு முழுவதும் இருள் மயம்! இருளில் பல உருவங்கள் நடமாடுவது போல இருக்கும். இருட்டில் நிறம் தெரியாதாயினும் அவை பச்சை உடை போட்டது போலத் தோன்றும்.

இரவின் தனிமை பயங்கரமாக மனதை அறுக்கும். வாழ்க்கை முழுவதும் அனுபவித்த துக்கங்களும், அவமானங்களும், தோல்விகளும், ஏக்கங்களும் ஒரு சேர இக்கணத்தில் குவிந்துவிட்டது போல மனம் பாரம் சுமக்கும். எதுவுமே செய்ய, எதுவுமே நினைக்கக்கூட மனமில்லாத மனச்சோர்வு இதயமெங்கும் பரவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்து கண்ணாடியில் முகம் பார்த்தாள். ஓ... அவள் எவ்வளவு சோகித்துப் போய்விட்டாள்? கண்கள் வெளிறிப் போய்க்கிடந்தன. அதன் ஒளியை வயதும் துன்பமும் கொண்டு போய் விட்டன. உணவில் இரும்புச்சத்துச் சேர்ந்தும் கன காலம் ஆகி இருக்கலாம்.

நேற்று முழுவதும் தேநீர் அருந்தவில்லை. தேநீர் அருந்துவது ஆங்கிலேயரோடு வந்த பழக்கமாயினும், சீனி அதிகமாய்த் தேவைப்படுகிற அந்தப் பழக்கத்தை விட்டுவிடலாம் என்று முனைகிறபோது, ஏதோ சொல்ல முடியாத களைப்பு ஏற்படுவது போல மனம் உணருகிறது. யுத்தம் தருகிற மன அழுத்தம் காரணமாகச் சலரோகம் வந்து... அதன் பின் சீனியை முற்றாக விட்டு விடும்படி வைத்தியர்கள் சொல்லும் போது, விடவேண்டியது தான்! இப்போது மனம் போராடுகிறது. எல்லாம் மனம்தான். சொர்க்கமும் இந்த மனத்துக்குள்ளே தான் இருக்கிறது. நரகமும் இதற்குள்தான் மறைந்திருக்கிறது.

சிகரெட்டையும், மதுபானங்களையும், போதைப் பொருள்களையும் மட்டுமல்ல. தேயிலையையும் குடாநாட்டுக்குள் வராமல் தடுத்தால் நல்லதென்று ஒரு கணம் நினைத்தாள். அப்போது மனம் பழகும்! மோரை இளநீரை பழஞ்சோற்று நீரை அல்லது கஞ்சியைக் குடித்துப் பழகும்.

திரும்பிக் கதவை அடையு முன்பே வெடித்துப் பொங்கிச் சரிந்தாள்! மனதிற்குள்தான்!

மனதில் ஒரு மரம் வேரொடு சாய்ந்திருந்தது. கண்ணுக்குள்ளே அம்பு மாதிரித் துளைக்கிற அந்தப் பார்வையுடன் இருந்த அவனை அப்போது அடைந்திருந்தால் இந்தத் தனிமை வாழ்வு அமைந்திருக்காது என்ற நினைப்புக் கசப்புடன் தவிர்க்க



முடியாமல் வந்தது. வெளி அழுத்தம் பல உள் அழுத்தங்களைப் பூத்து எழச் செய்திருந்தது. சிந்திப்பதற்கு நேரம் கொடுக்காது, வேலைகளில் மூழ்கிப்போய் விட்டால் மன அரிப்பில் இருந்து தப்பலாம் என்று உணர்ந்தவளாய், இருள் விலகமுதல், பனங்காணிக்குள் நுழைந்து பனங்காய்களைப் பொறுக்கி எடுத்தாள். நடத்தையில் மாற்றத்தை வலிந்து ஏற்படுத்திய போது, உணர்வுகளிலும் சிறிது முன்னேற்றம் தெரிந்தது.

மின்சாரம் இல்லை என்பதனால் மின்தறியில் இவள் வேலை செய்யப் போகவில்லை என்பதற்காய், "இவ்வளவு தானா நீ?" என்று மனச்சாட்சி அரிக்க, மூலையில் அமர்ந்துவிட வேண்டுமா என்று உற்சாகமாய் ஒரு சிறு எண்ணம் தலை தூக்கியது.

மெலிதாய் முளைத்த மனவலிமை மறையான மன உணர்வுகளைத் தூக்கி எறிந்தது. "சுப்பர் ஈகோ" மெது வாய்க் கண்விழித்துப் பார்த்தது. பாணிப்பனாட்டு, பனங்காய்ப் பணியாரம், புழுக்கொடியல் செய்யும் பெருந்திட்டம் ஒன்று மனதில் வந்து போனது.

மந்தை மேயும் புல் வெளிகளினூடே தன் நினைவுகளுடன் அவள் நடந்து வந்தாள். மாலையில் அவளுடைய ஆடுகளை இங்கே கூட்டி வர வேண்டும்.

அவனுடைய முகம் புகைபோல அழுத்தமில்லாமல் நினைவுக்கு வந்தது. அதை அழுத்தித் துடைத்து எறிந்தாள்.

கோலம், கோபுரம், புடவை, சினிமா, கற்பு, கணவன்..... இதைப்போன்ற சொற்களுக்குத் தான் அந்நியமாகிப்போய் விட்டது பற்றி ஏன் இவ்வளவு உணர்ச்சிவசப்படல் என்று ஒரு கணம் வியந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வைரவர் கோயிலைக் கடந்து வந்தபோது கோயில் வாசலில் அழுதபடி நிற்கும் ஒரு நடுத்தர வயதுப் பெண் தெரிந்தாள். இவள் அவளை அணுகி விசாரித்தபோது, அந்தப் பெண்ணின் கணவன் காணாமல் போய்விட்டது தெரிந்தது. ஒரு வருடத்துக்கு மேலாகி விட்டதால் தகவல் ஒன்றுமில்லையாம். சாத்திரக் காரர்கள் ''இருக்கிறார்'' என்று தீர்மானமாய்ச் சொல்லுகிறார்களாம். கணவன் செத்தபிறகும் பூவும் பொட்டுமாய் ''சீவிச்சிங்காரித்துத் திரியிறா'' என்று ஊர் கதைக்கிறதாம்.

வைரவரிடம் சொல்லி அழுது கொண்டிருந்தவள் இவள் கேட்டவுடன் இவளிடம் சொல்லிச் சொல்லி அழுதாள். அவளது உணர்வுகளைப் புரிந்து கொண்டு ஒத்துணர்வுப் பதில்களை வழங்குவது இவளுக்குக் கஷ்டமாக இருக்கவில்லை. ஏனென்றால், இவள் தனது உணர்வுகளைப் புரிந்து கொண்டவளாக இருந்தாள்.

அவளைப் புரிந்துகொள்ள முயன்றபோது தனது கவலையும் மனச்சோர்வும் மேலும் குறைந்து போனதைத் தெளிவாக உணர்ந்தாள். அவளை அணைத்துத் தன்னோடு வீட்டுக்கு அழைத்து வந்தாள்.

பகல் பன்னிரண்டு மணி இருக்கும்!

'பட பட' வென்று எல்லாத் திசைகளிலும் துவக்கு வெடி! சீ..... துவக்கு வெடியாய் இருக்க முடியாது. முந்திரிகைக் காவல் வெடிகளோ? எப்படித் திடீரென்று எல்லாத் திசைகளிலும் முந்திரிகைத் தோட்டங்கள் முளைக்கும்?

''கோட்டையைப் பிடிச்சாச்சா மடா!'' யாரோ ஒருவன் சைக்கிளில் வேகமாய்ப் பறந்தான். அவனுக்கு எதிரே பின்னுக்கு மனைவியும் பாரில் இரண்டு பிள்ளைகளுமாய், குடும்ப





பாரத்தையே சைக்கிளில் ஏற்றி விளக்கிக் கொண்டு வந்தவர் கூட... சிரித்துக் கொண்டு போவது போலத் தெரிந்தது.

இவளையும் ஏதோ ஒன்று தொற்றிக் கொண்டது. ''மனக் கோட்டையைப் பிடித்துவிட வேண்டும்'' என்ற எண்ணம் பலமுறை வந்து போனது. காணாமல் போனவனை அவள் மட்டுமல்ல இவளும் தேடியாக வேண்டும்.

அப்பொழுதுதான் வடித்தெடுத்த பனங்காய்ப் பணியாரங் களை அவசரமாய் இரண்டு பைகளில் போட்டு எடுத்துக் கொண்டாள். முதலாவதை ''வைரவரிடம் சொல்லி அழுதவளிடம்'' கொடுத்தாள்.

''அக்கா இதைக் கொண்டு போய்ச் சாப்பிடுங்கோ'' காய்ந்த பனாட்டுத் துண்டுகளை இன்னொரு பையில் போட்டு எடுத்துக் கொண்டு, பவ்யம், விசுவாசம், மரியாதை எல்லாம் சேர்ந்தொரு வடிவம் எடுத்தாற்போல, இரண்டு பைகளுடன் வீதிக்கு வந்தாள்.

''தம்பி இதைக் கொண்டு போய்ச் சாப்பிடுங்கோ'' சைக்கிளில் போய்க் கொண்டிருந்த போராளி ஒருவரின் கையில் வலுக்கட்டாயமாய்த் திணித்தாள்.

மீண்டும் வீட்டு முற்றத்துக்குத் திரும்பிய போது அவள் முற்றத்தில் குந்தியிருப்பதை அவதானித்தாள்.

''அக்கா எழும்புங்கோ பனங்கிழங்கு அவிப்பம்'' என்று அவளுக்கு உற்சாக மூட்டினாள்.

''அவிச்சுப் போட்டுக் காணாமல் போனோர் சங்கக் கூட்டத்துக்குப் போக வேணும். எங்களைப் போலை ஆக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எல்லாம் அடிக்கடி ஒண்டாச் சந்திச்சமெண்டால், ஒராள் மற்ற ஆளுக்கு நல்ல ஆறுதலாய் இருப்பம். எல்லாரும் சேர்ந்து எல்லாருக்குமாய் உழைப்பம்... எழும்பி வெளிக்கிடுங்கோ"

என்று கூறி அன்புடன் அவள் தோளைத் தொட்டாள்.

அவளது முகத்தில் மெல்லிய முறுவல் தெரிந்தபோது மனம் எல்லாம் சொட்டச் சொட்ட நனைந்து பூவில் குளித்த மாதிரி உணர்ந்தாள்.

அப்போது சொல்லி வைத்தாற் போல அந்தக் கனவு திடீரென நினைவுக்கு வந்தது. கனவிலே அவள் எங்கோ போய்க் கொண்டிருக்கிறாள். போக வேண்டிய கட்டடத்தைச் சுற்றி வெள்ளம் நிற்கிறது. கட்டடத்தை அடைய வேண்டுமாயின் முழங்காலுக்கு மேல் நிற்கும் வெள்ளத்தில் இறங்க வேண்டும். சேலை நனைந்து விடும் என்று பார்க்க முடியாது. சேலையைத் தூக்கிப் பிடித்தால் கால் தெரியும் என்று நினைக்க முடியாது. சேலையை ஒரு கையால் தூக்கிக் கொண்டு அவள் நீரில் இறங்குகிறாள். அப்போது எங்கிருந்தோகாற்றில் பறந்து வரும் பூ இதழ்கள் அவள் மேல் விழுகின்றன. முழுப் பூக்களும் விழுகின்றன. முழுப்பூக்கள் சிலவற்றின் காம்பில் முள் இருக்கிறது. அந்த முள் தன்னைக் குத்திவிடுமோ என்று இவள் பயப்படுகிறாள்.

"அது கனவு தானே" என்ற தெளிவு வர இவள் மெதுவாய்ச் சிரித்துக் கொண்டாள்.

✦ ✦ ✦ *(வலம்புரி - 14. 03. 2003)*




# 11

# ஏ – 9 பாதை

நான் பாதி நித்திரை!

மழையோ கடும் விழிப்பு!!



நினைவுகளில் கடந்து போன இரவின் துயரங்கள் மீண்டும் மீண்டும் வந்து கவலை, கோபம், வெறுப்பு, சலிப்பு, சோர்வு ஆகிய கலவை உணர்வுகளை ஒருங்கே தோற்றுவிக் கின்றன.

கோடை மழையின் இடிகூட இன்னும் பழைய ஷெல் குண்டுகளின் இடிகளாகவே இதயத்தை தாக்கும் போது அது இடையிடை துடிப்பதை மறந்து போகிறது. இடையிடை அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகப் பலமாகத் துடிப்பது என் காதுகளுக்குக் கேட்கிறது. நான் திடீரென இதயநோயாளி ஆகிவிட்டேனா?

ஆகிவிடக் கூடாது. யாழ்ப்பாணம் போய் என் வீட்டைப் பார்த்துக் கொழும்புக்குத் திரும்பி வரும் வரையாவது என் இதயம் தொடர்ந்து துடிக்க மறந்துவிடக் கூடாது.

ஏ-9 பாதை திறந்து பல மாதங்களாகி விட்டன. பல்லாயிரக் கணக்கான மக்கள் இந்தப் பாதையூடு போய் வந்து கொண்டிருக்கிறார்கள். வயது அறுபது ஆகிவிட்டாலும் எனக்கும் ஒரு ஆசை வந்ததை நீங்கள் யாரும் தவறு என்று கூறிவிட மாட்டீர்கள்.

1990ஆம் ஆண்டு யூலை மாதத்தில் வெளிக்கிட்டது தான். கடந்த பன்னிரண்டு வருடங்களாகத் தெல்லிப்பழைச் சந்திக்கு அருகிலே அம்பனை றோட்டில் இருந்த எங்கள் அழகிய வீடு எனக்கு மனக்கண்ணில் மட்டும் தான் காட்சியாகியது. ஒரு முறை போய்ப் பார்த்து வந்துவிட வேண்டும். யூனியன் கல்லூரி தன் சொந்த இடத்திற்குப் போய்விட்டதாம். அந்தக் கல்லூரியில் பிள்ளை ஒன்றை சேர்க்கப் போவதாகச் சொல்லிப் போய்ச் சந்தியில் நின்று பார்த்தாலும் என் வீடு தெரியும். எனது உழைப்பில் சிறுகச் சிறுகச் சேர்த்துக் கட்டிய வீடு.

'யாழ் - கொழும்பு பஸ் சேவை' "உங்கள் ஆசனங்களை இங்கே பதிவு செய்யலாம்" இத்தகைய எழுத்துக்களைக் கொண்ட அட்டைகள் காலி வீதி முழுதும் தொங்கின. "சொகுசு பயணச் சேவை - 1000/= மட்டுமே" என்று காட்டிய அட்டைகளைக் கடந்து, "இலகு பயணச் சேவை - 850/= மட்டுமே" என்று சுட்டிய அட்டை தொங்கிய கடைக்குள் புகுந்தேன். இவன் கொஞ்சம்



நேர்மையானவனாக இருப்பான் போலும். அதனால் தான் மற்றவர்கள் எல்லாம் 1000/= போட இவன் 850/= போட்டிருக்கிறான் என்றது ஒரு மனம்.

நம்பிக்கையே வாழ்வின் அடிப்படை. அட்டை தொங்கிய கடையின் பெயர் சிவப்பு ஒளியில் பளபளத்தது. "சுது டிரவல்ஸ்!"

"தம்பி நான் யாழ்ப்பாணம் போக வேணும்..."

"ஓம் - தாராளமா... எப்ப போகப் போறியள்?"

"திங்கட்கிழமை"

"கடைக்கு வாறியளோ? வீட்டிலை வந்து ஏத்திறதோ"

"வீட்டில வந்து ஏத்துவியளோ?"

"உங்களைக் கொழும்பு வீட்டிலை வந்து ஏத்தி, யாழ்ப்பாண வீட்டிலை இறக்குவம்...

"மிச்சம் நல்லது..."

"இரவு எட்டு மணிக்கு றெடியா நில்லுங்கோ... உங்கடை விலாசத்தை ஒருக்காச் சொல்லுங்கோ... ரெலிபோன் நம்பரையும் சொல்லுங்கோ"

"ஏன் ரெலிபோன் நம்பர்?"

"வர முந்தி ஃபோன் பண்ணிட்டு வருவம்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆ... ஆ... சரி சரி..."

"அட்வான்ஸ் எவ்வளவு தாறியள்?"

"மொத்தம் 850 தானே?"

"இல்லை. இல்லை. அது கடையிலை ஏத்தி பஸ்ராண்டிலை இறக்கிறதெண்டால் தான் எண்ணூற்றைம்பது. வீட்டில ஏத்தி வீட்டில இறக்கிறதெண்டால் ஆயிரத்து ஐம்பது..."

"அப்ப வேறை கடையில ஆயிரம் போட்டிருக்கு"

"அதெல்லாம் பெரிய பஸ். உங்களை வீட்டில விடாது. எங்கடை ஹயேஸ். நாங்கள் படலையிலை விடுவம்..."

"சரி... சரி... அப்ப ஐந்நூறு அட்வான்ஸ் தாறன்..."

"சரி போட்டு வாங்கோ... திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு றெடியா நில்லுங்கோ..."

கீழை அடிவானைக் கிளறியபடி கிளை விடும் மின்னல் கிளை ஒன்று தோன்றி அழிந்தது. வானம் சீறியபடி நீர்க் கொடிகளை நிலத்தில் படர விட்டது. வீதியில் குறுக்கே இருந்த அலங்கார வளைவில் எழுத்துக்கள் தெரியவில்லை. மனதில் மீண்டும் எண்ண வளைவுகள்!

திங்கட்கிழமை 8 மணி எப்போது வரும் என்று பார்த்திருந்தேன். மகள் தந்த இடியப்பப் பார்சலையும் உடுப்புப் பெட்டியில் வைத்துக் கொண்டு ஏழரைக் கெல்லாம் ஆயத்தமாகி விட்டேன். ஏழு நாற்பத்தைந்துக்கு பாக்குடன் (bag) முன்



ஹோலில் வந்து அமர்ந்து விட்டேன். இடையிடை எழுந்து நின்று றோட்டைப் பார்த்துக் கொண்டேன். ஏழு ஐம்பது, ஐம்பத்தைந்து, ஐம்பத்தெட்டு, ஐம்பத்தொன்பது... எட்டு மணி! வான் வரவில்லை.

அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றதால் போலும் எதையும் குறித்த நேரத்தில் விநாடி தவறாமல் எதிர்பார்க்கும் பழக்கம் எனக்கு! இது என்ன போட்டிப் பரீட்சையா, பொதுப் பரீட்சையா நேரம் தவறாமல் ஆரம்பிக்க? என்னை நானே சமாதானப்படுத்திக் கொண்டேன்.

எட்டுப்பத்து, பதினைந்து! பொறுமை இழந்த நான் "சுது டிரவல்ஸுக்கு" கோல் எடுத்தேன். "ஹலோ... சுது டிரவல்ஸா? ஆ... இன்னும் வான் வரேல்லை... அதுதான்..."

"வெளிக்கிட்டுட்டுது வந்து கொண்டிருக்குது..." போனை வைத்தேன். பையைத் தூக்கி வெளியில் வைத்து வீட்டில் எல்லாருக்கும் "பை" சொல்லி றோட்டில் நிற்கிறேன். வந்துவிடும். ஆ... எட்டு இருபத்தைந்து, முப்பது! "ஒருவேளை ஏமாத்தி விடுவானோ? இன்னொரு முறை எடுத்துப்பாப்பம்"

"தம்பி... எட்டு நாப்பது ஆகுது. வான் வரேலை..." "இப்பதான் தெஹிவளையில ஆக்களை ஏத்துது - அடுத்து உங்களிட்டைத் தான் வரும். அவசரப்படாதைங்கோ"

"ஆ... சரி... சரி..."

றோட்டில் நின்று காலும் வலித்தது, கல் ஒன்றில் உட்காரப் போன வேளை அது வந்து சேர்ந்தது. நேரம் ஒன்பது மணி!

"அப்பாடா!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாக்கை எடுத்து டிக்கியில் போட்டு விட்டு உள்ளே ஏறினேன். வேறு பலர் ஏறியிருந்தார்கள். "பின்னே சென்றால் குலுக்கியடிக்கும் என்று மகள் சொல்ல இரண்டாவது சீற்றில் அமர்ந்தேன். ஒன்பது பேர் மட்டும் கொள்ளக்கூடிய சிறிய வான். "இனியென்ன கதை முடிந்தது - யாழ்ப்பாணம் போய் வந்திருப்பீர்கள்" என்கிறீர்களா?

இனித்தான் கதையே தொடங்கப் போகிறது. டிக்கியில் பாக் போட்டேன் என்று சொன்னேனா? டிக்கி திறக்க வந்தபோது டிரைவரைப் பார்த்தேன். இளைஞன் - என்றாலும் ஏனோ அவனது முகத்தைப் பிடிக்கவில்லை எனக்கு. ஏன் அவனைப் பிடிக்க வேண்டும்? நான் அவனைத் திருமணம் செய்யப் போகிறேனா அல்லது எனக்கு மருமகனாக்கிக் கொள்ளப் போகிறேனா? இரண்டுமில்லை.

காலி வீதியில் இறங்கி தெஹிவளைப் பக்கம் திரும்பினான். பொக்கற்றிலிருந்து பேப்பர்களை எடுத்து ஏதோ விலாசங்களைப் பார்த்தான். ஏதோ ஒரு ஒழுங்கையில் நுழைந்தான். திரும்பி வந்தான். யாரையும் ஏற்றவில்லை. ஒரு பெற்றோல் செட்டுக்கு முன் நின்றான். பெற்றோல் அடித்துக் கொண்டான். சுது டிரவல்ஸுக்கு முன் கொண்டு வந்து நிறுத்தினான். அங்கு ஒருவர் ஏறிக் கொண்டார். கடையில் இருந்து வந்த பையன் ஒருவன் எல்லாரிடமும் மீதிப் பணங்களைப் பெற்றுக் கொண்டான். நான் அட்வான்ஸ் கொடுத்தது போக மீதி ஐந்நூற்று ஐம்பதையும் கொடுத்தேன். இப்போது நேரம் ஒன்பதே முக்கால். காலை பத்து மணிக்காவது யாழ்ப்பாணம் போகலாம் என்பது எனது கணக்கு!

வான் ஓடத் தொடங்கியது.





"நான் தான் காலமை யாழ்ப்பாணத்திலை இருந்து ஓடி வந்தனான். பிறகும் என்னைத்தான் போகச் சொல்லினம். நான் நித்திரை தூங்கினால் உங்கடை உயிர் பறக்கும்..."

டிரைவர் பக்கத்தில் இருந்த பயணியிடம் புறுபுறுத்தான். எனக்குக் கொஞ்சம் திக்கென்றது. வானை ஒரு கோயிலுக்கு அருகில் நிறுத்தினான். இறங்கிப் போய் கும்பிடுகிறான். நல்லது தான். கும்பிடட்டும்.

என்ன இது? இவ்வளவு நேரம் கும்பிடுகிறான்? அரைமணி நேரமாகிறது - ஒருவாறு திரும்பி வந்தான். நேரம் பத்தரை. வான் இப்போது கொட்டாஞ்சேனைக்குள் நுழைகிறது. "சில்லுக்குக் காத்துப் போகிறது. யாரோ வேண்டுமென்று குத்தியிருக்கினம்" என்றான்.

ஹான்ட் ஃபோனைச் சுழற்றினான். "மச்சான் சில்லுக்குக் காத்துப் போகுது. ஓட ஏலாது." மறு பக்கம் "சுது டிரவல்ஸ்" ஆக இருக்கலாம். அங்கு சொல்லப்பட்ட பதில் எனக்குக் கேட்காது தானே!

"ஆ... சரி... சரி..." என்று ஃபோனை அடித்தான். பொக்கற்றில் திணித்தான்.

தனியான ஒரு இடத்தில் ஓரமாக நிறுத்திச் சில்லைக் கழற்றி மாற்றினான். "எல்லோரும் இறங்கிக் கீழை நில்லுங்கோ" என்றான். பணிந்தோம். சில்லு மாற்றி முடிய மேலும் ஒரு அரைமணி நேரம். ஏறினோம். அவனுடைய முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்துக் கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"எங்கை வந்த நசல்!" "சனியன் பிடிச்ச வான்" அடுக்கிக் கொண்டே வந்தான். மீண்டும் வான் நின்றது. ஹான்ட் ஃபோனை எடுத்து நம்பரைச் சுழற்றினான்.

"மச்சான் சில்லு மாற்றினனான். பிறகு மற்றச் சில்லும் போகுது. ஓட ஏலாது. வேறை ஒரு வான் அனுப்பு... நான் இங்க கொட்டாஞ் சேனையிலை ஆள் ஏத்த வேண்டிய இடத்துக்குக் கிட்ட வந்திட்டன். இல்லை. இன்னும் ஏத்தேல்லை. வேற ஒரு பஸ் அனுப்பு... என்னட்டைக் காசில்லை. நீதானே எல்லாரிட்டையும் வேண்டினனி..."

மீண்டும் அடித்து மூடிப் பொக்கற்றில் அடைத்தான் "ஆக என்னைப் பேயன் எண்டு நினைக்கினம்" தனக்குள் முணுமுணுத்தான். அவனுடைய ஹான்ட் ஃபோன் அலறியது.

'ஹலோ... ஆர்...ஓ... உங்களைத்தான் ஏத்த வாறன். பக்கத்திலை வந்திட்டன். எட்டு மணிக்கு வாறதெண்டதோ... அதுக்கு நான் என்ன செய்யிறது... நாளைக்குத் தானே யாழ்ப்பாணம் போய்ச் சேருறது... ஏன் அவசரப்படுறியள்... வாறன்... நில்லுங்கோ..."

ஊர்ந்து சென்று ஒரு வீட்டின் முன் நின்றான். மூவர் வந்து ஏறிக் கொண்டனர். ஒருவர் நன்றாகக் குடித்திருந்தார்.

"இப்பானோ எட்டு மணி?" அவர் குரல் உயர்த்த "வாயை மூடிக் கொண்டு ஏறுங்கோ - உங்கள் தரவளியை ஏத்தாமல் போனால் தான் சரி..." இவன் அதைவிட உயர்த்தினான். நான் முதல் முறையாகக் கடவுளைக் கும்பிட்டேன்.





"டயரில் காத்து இப்ப நிக்குது போல" யாருக்கும் கேட்காமலே தனக்குள் சொல்லிக் கொண்டான்.

இப்போது வேறொரு பஸ் ஏற்றப்பட்ட மனிதர்களுடன் அவ்விடம் வந்தது.

"என்ன? பிரச்சினையாம்? அப்ப ஆக்களை இதில விடன்..."

நாங்கள் எல்லோரும் இறங்க ஆயத்தமாக அவன் - எனக்குப் பிடிக்காத முகத்தையுடைய அவன் - சொன்னான்.

"இல்லை. இப்ப பிரச்சினை இல்லை. காத்து அடிச்சனான் நிக்குது. நான் ஓடிக்கொண்டு போறன். நீங்கள் போட்டு வாங்கோ..."

நாங்கள் அனைவரும் ஆச்சரியத்துடன் நிற்க அந்த பஸ் போய் விட்டது. நேரம் இப்போது பன்னிரண்டு மணி

"மத்தியானச் சாப்பாட்டுக்குத்தான் வீட்டை போவம் போல" ஒருவர் பயணிதான் கூறிக்கொண்டார்.

வான் புறப்பட்டது. வத்தளை வரை வந்தது. மீண்டும் நின்றது.

"மூதேசி வான் மீண்டும் காத்துப் போகுது..."

மீண்டும். ஹான்ட் ஃபோன் உரையாடல்.

"மச்சான் ஒண்டும் செய்ய ஏலாது. வேறை பஸ் அனுப்பு..." அவன் இறங்கி நின்று கதைக்கிறான். பயணிகள் தமக்குள் புறுபுறுக்கின்றார்கள். நான் இறங்கி அவனருகில் சென்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தம்பி... இதென்ன நாடகம்... எங்களுக்கு விளங்கேல்ல. உமக்கும் முதலாளிக்கும் ஏதும் பிரச்சினை இருந்தால் நாளைக்கு வந்து பேசித் தீர்க்கலாம். நாங்கள் காசு குடுத்து உங்களை நம்பி வந்த ஆக்கள். வீட்டை போக வேணும்..."

அவனது கண்கள் கோவைப்பழம் போலச் சிவந்தன. "எல்லோரும் பேசாமல் இருக்கினம். இவ ஒரு பொம்பிளை கதைக்க வந்திட்டா - நடுக் காட்டிலை காத்துப் போய் நிண்டா என்ன செய்யிறது?"

"அப்ப முதல் வந்த பஸ்ஸிலை எங்களைப் போக விட்டிருக்கலாமே?"

"அது டிரைவர் நல்ல வெறி. அவனோடை உங்களை விட்டிட்டுப் பிறகார் மறுமொழி சொல்லுறது?"

"எங்களிலை உமக்கு அக்கறை எண்டபடியால் தான் இரவு ஒரு மணியாகியும் வான் கொழும்பை விட்டு நகரேல்லை... இருக்கட்டும்... ஒண்டும் வேண்டாம்... எங்களைக் கொண்டு போய் பஸ் ஸ்ரான்டிலை விடும். விடியப்பறம் மூண்டு மணிக்கு வவுனியா பஸ் இருக்கு. நாங்கள் அதில போறம்.."

இப்போது எனைய பயணிகளும் என்னோடு சேர்ந்து உறுதிபடக் கதைக்கத் தொடங்கினர். மது போதைப் பயணி தனது பிரசங்கத்தை ஆற்றிக் கொண்டிருந்தார்.

"ஒரு அங்குலமும் ஓட ஏலாது. ஏனெண்டால் சில்லில காத்தில்லை"

"அப்ப இந்தச் சாமத்திலை நாங்கள் இதில நிண்டு என்ன செய்யிறது"



மீண்டும் ஹான்ட் ஃபோன் சுழற்றல்.

"மச்சான் இஞ்ச மனுசி ஒண்டு என்னைப் பேசுதடாப்பா. நீ என்ன வான் அனுப்புறியோ?"

நேரம் இரவு இரண்டு மணி.

"தம்பி... நீர் ஒரு முடிவைச் சொல்லும். எங்கடை காசுகளைத் தாரும். நாங்கள் வேறுவழி பாக்கிறம்..."

"என்னட்டை எங்கை இருக்குக் காசு? நீங்கள் என்னட்டையே தந்தனீங்கள்? முதலாளிட்டை எல்லோ கொடுத்தனீங்கள்? அவரிட்டைக் கேளுங்கோ..."

தற்செயலாக அந்தவழியால் வந்த வேறொரு பஸ்ஸைப் பயணிகள் மறித்தனர். புதிதாக ஆயிரம் ரூபா கொடுத்து ஏறி உள்ளே அமர்ந்தனர்.

அந்தப் புதிய பஸ்தான் இப்போது கிளிநொச்சியை அடைந்திருக் கிறது. நேரம் மாலை நாலு மணி. புளியங்குளம் முதல் கிளிநொச்சி வரை வாரி இறைத்த மண்ணைக் கழுவக் கோடை மழை பொழிகிறது.

"சுது டிரவல்ஸ்" என்ற பெயரைச் "சூது டிரவல்ஸ்" என்று மாற்றி எழுதும்படி கோரிக்கை விடுக்கும் கடிதத்தை எப்படி எழுதலாம் என்ற சிந்தனையுடன். நான் பாதி நித்திரையில் மூழ்கிப் போகிறேன். மழை கடும் விழிப்பு.

இரவுச் சாப்பாட்டிற்கு வீடு போனால் போதும்! வீடு இருந்தால் தானே!!

✦ ✦ ✦ *(வலம்புரி - 28. 03. 2003)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12

# மெத்தென்ற மௌனம்

பேரானந்த நிலையம்
சொர்க்கம்
4.4.2003.

அன்புள்ள நிர்மலா,



சூரியன் யாருக்கும் "பை" சொல்லாமல் மறைந்து போய்விட்ட ஒரு நேரத்தில் இக்கடிதத்தை உனக்கு எழுதுவதற்காக அமர்ந்திருக்கிறேன். என்னிடமிருந்து நீ ஒரு போதும் தபால் ஒன்றை எதிர்பார்த்திருக்க மாட்டாய். இது உனக்கு வியப்பு என்ற நேர் உணர்வைத் தரலாம். தந்தால் பரவாயில்லை. ஆனால் கோபம், வெறுப்பு போன்ற மறை உணர்வு





களைத் தந்து விடக்கூடாது என்ற கவனத்துடனேயே எழுதுகிறேன்.

பூவுலகில் மானிடம் பெரும்பாலும் தவறிப்போயிருக்கிறது என்பது உண்மைதான். ஆயினும் உனக்குள் நான் இடையிடையாவது வந்து போகவேண்டும் என்று விரும்பியிருந்தேன். நீ என்னை முற்றாகவே உன் மனதிலிருந்து அகற்றி விட்டதாகத் தோன்றுகிறது. உனக்காகப் பரிதாபப் படுவதை விட வேறு எதுவும் செய்யத் தோன்றவில்லை எனக்கு.

ஒருவருடைய தனிப்பட்ட அகராதியிலே அவரது பெயரே முதல் சொல். அதுவே முதன்மைச் சொல் என்றும் சொல்லுவார்கள். எவ்வளவோ தேடுதலுக்கும் எதிர்பார்ப்புக்கும் மத்தியில் உன் பெற்றோர் உனக்கு நிர்மலா என்று பெயர் வைத்திருப்பார்கள். நிர்மலன் இறைவன். நீ மும்மலங்களாகிய ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றிலிருந்து விடுபட்டவளாக வாழ வேண்டும். ஒரு இறை வாழ்வு உனக்கு அமைய வேண்டும் என்று எதிர்பார்த்திருப்பார்கள். அந்த எதிர்ப்பார்ப்பு நிறைவேறியிருந்தால் நான் உன்னுடன் நிரந்தரமாகத் தங்கியிருப்பேனே! உன் மனமே எனக்குப் பிடித்தமான கோயில் ஆகியிருக்குமே! ஆனால்... அது நடக்கவில்லை.

நல்ல உள ஆரோக்கியமுள்ள ஒருவர் ஏனைய மனிதர்களோடு சிறந்த உறவு நிலைகளைப் பேணிக்கொள்வார். உன்னைச் சற்றுத் திரும்பிப்பார். வீட்டிலும் சரி, வேலைத் தலத்திலும் சரி, கடந்த சில வருடங்களில் நீ எத்தனை மனிதர்களோடு பிரச்சினைப்பட்டுக் கொண்டாய்? எல்லா மனிதர்களும் தவறு செய்கிறார்கள். நான் மட்டும் சரியாக இருக்கிறேன் என்ற மிகப் போலியான கட்டுக்குள் உன்னை நீயே சிறைப்படுத்திக் கொண்டு அல்லற்படுகிறாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக வாழ்வில் உனக்கு நேரே மேலே பணி செய்பவர்களில் ஏதோ சில குற்றங்களைக் கண்டு பிடித்துச் சொல்லித் திரிந்தால் நீ அவர்கள் மீது அதிகாரம் செலுத்தலாம் என்று நம்புகிறாய். எல்லோரிடத்தும் அதிகாரம் செலுத்தும் நிலை மிகத் திருப்தி தரும் நிலை போலத் தோன்றும். ஆனால் உண்மையில் அதிகாரப் பசி (Power hunger) என்பது ஒரு மனிதனின் ஆளுமையை மிகமோசமாகச் சிதைக்கவல்லது. என்னைக் கலைப்பதிலே முதலிடம் பெறுவதும் அதுதான். நேரான வழிகளில் முன்னேறித்தம் சுய கணிப்பை உயர்த்திக் கொள்ள முடியாதவர்கள் தான் அதிகாரம் செலுத்தி அதன் மூலம் பெரியவர்களாகிக் கொள்ள முயலுகிறார்கள். நீயும் அப்படியா?

விளக்கு ஏற்றினால்தான் வெளிச்சம் வரும் என்பதை உனக்குச் சொல்ல வேண்டிய கடமை எனக்கிருக்கிறது நிர்மலா.

உனது கனவுகள் எப்படி இருக்கின்றன என்றுபார். கனவுகளின் நினைப்பின் அடிவாரத்திலேயே மனம் கசக்கிறதல்லவா? உனது உள ஆரோக்கிய நிலை படிப்படியாகச் சரிந்து வருவதற்கான சுட்டிதான் அது. உன்னை நீயே காப்பாற்றிக் கொள்ளாவிட்டால் வேறு யாரும் உனக்கு உதவப் போவதில்லை.

நீ பல பாடசாலைகளில் ஆசிரியராக இருந்தாய். ஒவ்வொரு பாடசாலையிலும் இருந்த அதிபர்களைப் பற்றிப் பல குறைகளைச் சொல்லித்திரிந்தாய். ஒரு அதிபருடைய ஒழுக்கம் தவறானது என்றாய். ஒரு அதிபர் ஒருபோதும் நேரத்திற்கு வருவதில்லை என்றாய். மற்றொருவர் மாணவரிடையே பாகுபாடு காட்டுபவர் என்றாய். இன்னொருவர் பாடசாலை நேரத்தில் மாணவர்களை வேறு வேலைகளுக்கு அனுப்பி உன்னைக் கற்பிக்க விடாமல் தடை செய்கிறார் என்று சொன்னாய். ஒரு கைதட்டி ஒருபோதும் சத்தம் வருவதில்லைச் சகோதரி! மற்றக்கை குறைந்த பட்சம் ஒரு கையின் பாதைக்குக் குறுக்கேயாவது நின்றிருக்க வேண்டும். நீ ஒரு கையா? மற்றக்கையா? அல்லது கையேயில்லையா?



ஒருவர் ஒழுக்கத்தில் தவறியவர் என்பதை நாம் பலருக்குச் சொல்லித் திரிவதன் மூலம் நாம் ஒழுக்க சீலர்கள் ஆகிவிட முடியாது தோழி! நாம் ஒழுக்க சீலர்கள் என்பதை மற்றைய மனிதர்கள் சொல்லும்படி நடந்து காட்டுவதே திறமை. ஒருவர் நேரத்துக்கு வரவில்லை என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காக மட்டும் நாம் நேரத்துக்கு வேலைக்குப் போவது முட்டாள் தனம். எப்போதும் எங்கும் நேரத்திற்கு நிற்கும் பண்பு எமது ஆளுமையில் நிரந்தரமாக வந்துவிட்டால் அது சிறப்புத்தான். நீ நேரம் பிந்திப் போன நாள்கள் அல்லது நேரத்திற்கு முந்திப் பாடசாலையை விட்டுப் போன நாள்கள் இல்லைத் தானா? ஒருவருக்கும் தெரியாமல் இடையில் வங்கிக்குப் போன நாள்களைப் பற்றி என்ன சொல்கிறாய்? மற்றவரது முகத்தின் புண்ணைச் சுட்டிக்காட்டுவதன் மூலம் எமது முதுகின் புண்ணை மறைத்துவிட முடியுமா? அது எமக்குத் தெரியாவிட்டாலும் மற்றவர்களுக்குத் தெரியும் நிர்மலா.

ஆரம்பத்தில் மற்றவர்களிடம் இருக்கும் குறையைப் பெரிதுபடுத்திப் பேசி வந்த நீ இப்போதெல்லாம் முற்றிலும் இல்லாத விடயங்களைப் பேச ஆரம்பித்திருக்கிறாய், நெருப்பில்லாமலே புகையை உருவாக்குகிறது உன் நாக்கு. கடித்த பற்களிடை - சொல்லத்தகாத வார்த்தைகள் உன் நாக்கு நுனியில் எப்போதும் தகித்துக் கொண்டிருக்கிறது. இவ்வளவு துணிச்சலாக வார்த்தைகள் எப்படி உன் பல்லைத் தாண்டுகின்றன? அந்த வார்த்தைகளால் பலர் புண்பட்டுப்போவது உன்னையறியாமலே உனக்குள் ஒரு மகிழ்வை ஏற்படுத்துகிறதா? இன்னொரு மனிதனின் துன்பம் எமக்குள் மகிழ்வை ஏற்படுத்தும் நிலை ஒரு நோய் நிலை என்பது உனக்குத் தெரியுமா? இது மாதிரிக் கடிவாளம் தெறிக்கும் சந்தர்ப்பங்கள் தான் வாழ்க்கையின் திருப்பங்கள். அவை அநேகமாக மோசமான திருப்பங்களாகத்தான் இருக்கும்.

உனது முகமும் வாயும் கடுகடு - சிடுசிடு என்று இருப்பதைப் பார்த்து நான் உன்னிடம் சொல்லாமலே விடை பெற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டேனே ஒழிய எனக்கு உன்னிடம் கோபம் இல்லை. இரக்கமும் ஒத்துணர்வுமே அதிகம் உண்டு.

மயிர் நரைத்துப் போன மத்திய வயதிற்கு வந்தும் வாழ்வின் பச்சையைக் காண முடியாத உன்சோகம் எனக்குப் புரியும். அது உன் நியதியாயிற்று. நியதி எனக்கு உனக்கென்று இரக்கம் பாராமல் தனக்கே இரக்கம் பார்க்க இயலாது தன்னைத்தானே துரத்திக் கொண்டு வருகிறது. உன் விழிகள் அன்பைத் தேடும் பிச்சைப் பாத்திரங்களாய் ஆகி நிற்பது எனக்குத் தெரியும். உனக்கென்று ஒரு வாழ்வு அமையாமல் போனதும், குழந்தை ஒன்றைத் தூக்கிக் கொஞ்ச முடியாத நிலையும் மத்திய வயதின் இருபெரும் நெருக்கடி நிலைகள் என்று உணருகிறேன். ஆனாலும் அதனைத் தீர்க்கும் வழி இதுவல்லவே தோழி!

திருமணமான பெண்கள் அனைவரிலும் ஒரு குறையைத் தேடிப் பிடித்துச் சொல்லி விடுவது உன் நியதிக்கு மருந்தாகி விடாது. குழந்தைகள் உன் வயிற்றில் வரவில்லை என்பதற்காகக் குழந்தைகளை அடித்து நொருக்கி விடுவது புதிருக்கான விடை இல்லை.

மௌனம் என்றொரு அற்புதமான அங்கி இருக்கிறது. என்ன விலை கொடுத்தும் அதை வாங்கிப் போர்த்துக் கொள் நிர்மலா. அதன்பின் என்னை ரெலிபோனிலாவது கூப்பிட முடியும். ஏராளமான மறை உணர்வுகள் உன் மனதில் வந்து முழக்கமிட்டுக் குழப்பும் காட்சி எனக்குத் தெரிகிறது. அவற்றை உன்னதமான கலை வடிவங்களாக வெளிக் கொணர்ந்தால் உனக்கும் ஆறுதல். உலகுக்கும் பயன். செய்வாயா? செய்வாயா என்று கேட்பதென்ன? செய்யத்தான் வேண்டும். இல்லையானால் உளநலமின்மை தொடர்பான உனது பயணம் விரைவுபடுத்தப்படும். அப்படி இல்லை என்று மறுதலிக்க முனையாதே. நீ மிக ஏராளமாகப் பொய் சொல்லத் தொடங்கியிருக்கிறாய் பார் - அதுவே உன் உள



ஆரோக்கியக் குறைவுக்கான சுட்டி. நீ தெல்லிப்பழைக்குப் போக விரும்பமாட்டாய் என்று நம்புகிறேன்.

கலை வடிவங்களை உருவாக்க உன்னால் முடியாவிட்டால் கூடப் பரவாயில்லை. என்னை அழைக்க வேறு பல வழிகளும் உள்ளன. அவற்றையும் நீ முயலலாம். நான் உன்னிடம் இடையிடையாவது வந்து போனால் உன் மனதில் நட்சத்திரங்களும் பிறைத் துண்டுகளும் பூக்கும்.

உனது நுரையீரலில் எத்தனை சிற்றறைகளைச் சும்மா வைத்திருக்கிறாய்? அவற்றைக் கொஞ்சம் ஒட்சிசனால் நிரப்பினால் என்ன குறைந்து போகும்? நல்ல காற்றுள்ள ஒரு பூந்தோட்டத்தில் நின்று ஆழ மூச்செடுத்து விட்டுப்பார். நான் உனக்கருகில் எட்டிப் பார்ப்பேன். உன் மனதிற்குக் கொஞ்சம் சுடு தண்ணீர் ஒத்தடமும் கொடுப்பேன்.

யாரிடத்தில் என்ன குற்றம் கண்டு அதை யாரிடம் போய்ச் சொல்லி அவர்களை நம்பவைக்கலாம் என்ற யோசனையில் நீ உளுத்துப் போனால் உன் உடல் எருவுக்கும் உதவாது. அதைவிட மற்றவருக்கு எப்படி ஒரு மகிழ்ச்சியைத் தரலாம் என்ற சிந்தனையை நீ உச்சாடனம் செய்தால் ஒரு இனிய பாடல் சிறகை விரித்துக் கொண்டு உன் நெஞ்சை மிதித்துக் கொண்டு உனக்குள் பறக்கும்.

திருமணமான பெண்கள் தம் கணவரோடு மகிழ்வாக இருப்பார்கள் என்ற நினைவு உன்னை அரிப்பதால், அவர்களுக்கு என்ன தண்டனை வழங்கலாம் என்று சிந்தித்துச் சிந்தித்துச் சிதறிப் போகாதே. ஒரு தீபத்துக்கு முன்னே மண்டியிட்டு அமர்ந்து கொள். அதையே தொடர்ந்து பார்த்துக் கொண்டிரு. கண் மடல்கள் களைத்துப் போக, தீப ஒளியை மனக்கண்ணுக்கு மாற்றிப் புறக்கண்ணை மூடிக்கொள். இத்தீபத்தினூடே எல்லாம்வல்ல இறைவனுக்கும் உனக்கும் ஒரு இறுக்கமான தொடர்பை ஏற்படுத்திக் கொள். "அன்னவரே எங்கணவர் ஆவார்" என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏற்றுக்கொள். இறைவன் உனக்குள் ஒளியாக நின்று எப்போதும் உன் துணைவராக நின்று உன்னை வழி நடத்துவதாக நம்பு. அப்போது நான் உனக்குப் பக்கத்தில் வந்து படுத்தே விடுவேன். அதன் பிறகு, பனி மூட்டம் பெய்கிற காலையானாலும், இளம் ஒளிவிழுதுகள் இறங்குகிற மாலையானாலும், மழையானாலும் புயலானாலும் எல்லா நேரங்களிலும் சிரிக்க முடியும் உன்னால்!

சந்தனச் சேற்றில் நீ புதையுண்டு போக வேண்டும் என்பதுதான் என் உளமார்ந்த விருப்பம் நிர்மி!

உனக்கும் உஷத் கால மேகங்களுக்கும் இடையே ஒரு சௌந்தர்யமான பாதை உருவாக வேண்டும். இரவு முழுவதும் வானம் கடலுக்கு முத்தம் கொடுத்துக் காலையில் ஓய்ந்திருப்பது உனக்குப் புலனாக வேண்டும். நாகரிகம் உட்கார்ந்து அசை போட்டுக் கொண்டிருக்கும் இடங்களுக்கு நீ போக வேண்டியதில்லை.

இனிச் சொல்லப் போவது இரகசியம் நிர்மிக்குஞ்சு! பிறகு... பிறகு... நான் உன்னை ஒரு கணமும் விட்டுப் பிரிய மாட்டேனாம்.... சரியா!

அதன் பிறகு மௌனம்... எமக்குள் மிக மிக நீண்ட... மெத்தென்ற மௌனம்!

அன்புள்ள

**சாந்தி.**

✦ ✦ ✦ *(வலம்புரி - 04. 04. 2003)*



# 13

# நெருக்கீட்டின் பின்....

முறிந்த வீடு
இல. 8, இறுகிய தெரு,
யாழ்ப்பாணம்.
18.04.2003.



அன்புள்ள சாந்தி.....

உங்களுக்கு எத்தன வயதிருக்கும் நீங்கள் ஆணா? பெண்ணா? ஒன்றும் தெரியாத படியால் சாந்தி அக்கா என்று விழிப்பதா, அம்மாவா, பாட்டியா, அன்ரியா..... அல்லது மாமாவா... அதுதான் அந்த டொற், டொற், டொற்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரி, நீங்கள் நிர்மலாவுக்கு எழுதிய கடிதத்தைப் பார்த்த நேரம் முதல், என் சிந்தனை மயிர்கள் ஒவ்வொன்றும் சிலும்ப ஆரம்பித்தன. சிந்தித்தேன், சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். இன்னும் சிந்திப்பேன். என் சிந்தனைத் தேன் சிந்திப்பின் அதுவே தேன் சிந்தனை ஆயிற்று.

நான் பிறந்தது 1985 இல்... யாழ்ப்பாணத்தில்! எனக்கு ஒரு வயது ஆக முதலே இலங்கை ராணுவம் வடமராட்சிப் பகுதியில் பெரும் ஆக்ரோஷ நடவடிக்கை செய்தது. நான் இரண்டு வயதில் மழலை பேசத் தொடங்கிய போதில் இந்திய அமைதி காக்கும் படை இங்கு வந்திறங்கியது. இன்று எனக்குப் பதினெட்டு வயது... கட்டிளமைப் பருவம். வாழ்வின் வசந்த காலம்... ஆனால் அது அப்படியில்லையே! நீங்கள் என்னை ஒருபோதும் திரும்பிப் பார்க்கவில்லையே!!

பளிச்சென்று வெயில் விழுந்தும் போர்த்துக் கொண்டு தூங்கும் தூங்கு மூஞ்சியான தெருக்களைத் தானே என் வாழ்வின் பெரும்பாலான காலத்தில் நான் கண்டேன்.

குமிழைத் திருகிவிட்டால், கொலை பற்றியும், கொள்ளை பற்றியும், பாலியல் வன்முறை பற்றியும், கொடும் யுத்தம் பற்றியும் கறுப்புக் குரலில் கத்தித் தீர்க்கும் வானொலிப் பெட்டியைத் தானே நான் கேட்டேன்!

நிமிர முடியாமல் நிலவே நெளியும் இரவுகளில் துப்பாக்கிகள் முழங்கும் ஓசையும் ஷெல்கள் வெடிக்கும் அலறலும் விமானங்கள் பொழியும் குண்டுகளின் இரைச்சலுந்தானே எனக்குத் தாலாட்டாயிற்று?



நீங்கள் என்னிடம் வர நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்பதற்காகத்தான் இதை எழுதுகிறேன்.

1988ஆம் ஆண்டில் ஒரு அதிகாலைப் பொழுது! எங்கள் வீட்டிற்கு அருகில் இருந்த ஞான வைரவர் கோயில் மணி ஐந்து மணிக்கு வழமைபோல அடித்தது - எனக்கு அரை நித்திரையிலும் கேட்டதுதான். கதிரவன் எங்கேயோ கட்டுண்டு கிடக்கிறான். வெளிச்சம் இன்னும் வெளியே வரவில்லை.

திடீரென்று ஒரு வாகனம் விரைந்து வந்து எங்கள் புதிய வீட்டின் முன் நின்ற சத்தம். அம்மா கதவு திறந்த சத்தம்... பிறகு அம்மா "போகாதேங்கோ போகாதேங்கோ" என்று குழறிய சத்தம். அப்பா "ஐயோ என்ரை ஐயோ" என்று கத்திய சத்தம். நான் எழுந்து ஓடி வந்து பார்த்தேன். அப்பாவை இழுத்து அந்த வாகனத்தில் ஏற்றியதையும் அவருக்குப் பலமாக அடித்ததையும் பார்த்தேன். அவ்வளவுதான்... அப்பா பிறகு வரவில்லை.

அப்போது மூன்று வயதுக் குழந்தையாக இருந்த உனக்கு விடயங்கள் எப்படி இவ்வளவு தெளிவாக ஞாபகம் இருக்கும் என்று கேட்கிறீர்களா? அன்று முதல் இன்றுவரை இந்தக்கதை எத்தனை முறை சொல்லப்பட்டு விட்டதை நான் கேட்டிருப்பேன்? எனக்கு எல்லாமே பாடம். அல்லது என் மூளையில் இதை விட வேறு ஒன்றும் இல்லை. என் கண்களில் கவிந்து கிடக்கும் வெற்றுப் பார்வை இன்னும் அந்த வாகனம் போன வழியையே பார்க்கிறது.

காணாமல் போனோர் பட்டியலில் மிக மூத்த உறுப்பினர் என் அப்பாதான். அந்த நாளுக்குப் பிறகு இருட்டும் புழுக்கமுமே எங்கள் வீட்டுக்குத் துணை. அப்பம்மாகேட்ட சாத்திரங்கள் எல்லாம் "அப்பா உயிருடன் இருக்கிறார்" என்று சொன்னபடியால், வீட்டில் அம்மா அழவும் உரிமை இருக்கவில்லை. எனக்கோ "அப்பா எங்கே?" என்பது நீண்ட வருடங்களாகக் குழப்பமாகவே இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரவு நேரத்தில் யன்னல் வழி உள்வழியும் காற்றுக் கத்திக் கத்தியே என் கனவுகளைக் குலைக்கும். கனவுகளில் அடிக்கடி சிவப்புக் கம்பளியால் போர்த்தப்பட்ட அப்பாவின் உருவம் அழுதபடி வரும். அந்தப் பயங்கரத்தைத் தாங்க முடியாமல் நான் எழுந்து அழுவேன். இன்னொரு கனவில் சிவப்பு நீளச் சொண்டுடன் ஒரு கறுப்புக் குருவி வரும். அது கொத்து கொத்தெனக் கொத்தியே என் மார்புச் சுவர் பிளந்து விடும் போன்ற வலி. அம்மா வேறு "அல்சர்" நோயாளியாகிவிட்டா.

முற்றுப் புள்ளியை ஏற்றுக் கொள்ளாத அப்பம்மாவும் சாத்திரம் கேட்டுக்கேட்டே போய்ச் சேர்ந்திட்டா.

இன்னும் கூட எங்காவது வாகனச் சத்தம் கேட்டால் என் இதயம் படபடவென அடித்துக் கொள்ளும். மனதிற்குள் பெரும் அந்தரமாய் ஒரு உணர்வு வரும். நான் ஓடிப்போய் சாமி அறையில் இருந்து விடுவேன்.

இப்போது சாமி அறையில் நான் அதிக நேரம் செலவிடுகிறேனாம் என்று அம்மா சொல்கிறா. சுவாமிக்குப் போடும் பூவைத் திருப்பித் திருப்பிப் போட்டுக் கொண்டிருப்பது எனக்கு ஒரு ஆறுதலைத் தருகிறது.

நான் பாடசாலையில் திறமையாகப் படிக்கவில்லையாம் என்பது வேறு அம்மாவுக்குக் கவலை. ஓ.எல் பெறுபேறு வந்தபோது, அம்மாவின் மௌனமான பார்வையின் அணைப்பே எனக்கு இம்சையாய் இருந்தது.

கல்லில் வீழ்ந்த பிறகும் உடையாமல் இருப்பதற்கு மனம் கண்ணாடி இல்லாமல் இருந்தால் தானே! எனது மனதின் தாங்குதிறன் அவ்வளவுதான். அம்மாவுக்கு அது புரியவில்லை.





"அப்பாவும் இல்லை. நீ படியாமல் என்ன செய்யப் போறாய்?" என்ற புராணம் தான்.

அப்பா இருந்திருந்தால் நான் படித்திருப்பேனே? இந்த விஷ வட்டத்தை எங்கே உடைப்பது? எப்படி உடைப்பது?

சாந்தி... எனக்கு ஒரு உதவி செய்! நினைவு தொட முடியாத தூரத்திற்கு அந்த நிகழ்ச்சியை அனுப்பிவிட மாட்டாயா? பச்சை நிறத்தைக் காணும் போதெல்லாம் எனது மனதின் செதில்கள் விறைத்துப் போகின்றனவே!

வீதியில் வாகனம் வந்தால் இன்றும் கூட நான் ஐம்பதடி தூரம் விலகிப் போய் விடுகிறேனே! என்னைப் பார்க்க உனக்குப் பரிதாபமாக இல்லையா? எப்போதுதான் நீ என் வீட்டிற்கு வரப் போகிறாய்?

அம்மாவும் நானும் கௌரவமாகச் சாப்பிட வேண்டும் என்பதற்காக நான் இப்போதெல்லாம் விறகு கட்டப் போகிறேன். கோடாலியைச் சைக்கிளில் கட்டினாலும் அதைப்பத்து முறை அவிழ்த்துக் கட்டிக் கொள்கிறேன். 'பயம்' என்ற உணர்வு என் மூளையில் சிலந்திவலை வலையாய்த் தொங்குகிறது.

இளங்கனவு புஷ்பிக்க வேண்டிய வயதில் ஓர் இளைஞன் இப்படி இருக்கிறேனே! இது யாருடைய தவறு?

தொண்டையைப் பலமுறை செருமிப் பார்க்கிறேன். என்றாலும் அங்கு அடைபட்டுக் கிடக்கும் சோகம் வெளியே வர மறுக்கிறது. என் வயதை ஒத்த நண்பர்கள் எல்லாம் சுவிஸ் என்றும் ஜேர்மனி என்றும் பறந்து விட்டார்கள். இங்கே இருக்கும் ஓரிருவரை நான் பார்த்துச் சிரித்தாலும் அது சோகமுலாம் பூசிய சிரிப்பாகத்தான் இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவின் இதயத்தில் கண்ணீருக்கு வேண்டிய மூலப்பொருள் மட்டும்தான் பாக்கி இருக்கின்றது. சாந்தி... நீ எங்களுக்கு உதவவில்லை என்றால், தற்கொலை செய்வதைத் தவிர எனக்கு வேறு வழி இல்லை.

மற்றொரு வேண்டுகோளையும் நான் உன்னிடம் விடுக்க வேண்டும். அப்பாவைத் தூக்கி வாகனத்துள் எறிந்து கொண்டு சென்ற அந்தப்பச்சை உடைக்காரரிடம் நீ மறந்தும் போகக் கூடாது. பச்சை உடை அணியும் சிவப்பு மனங்களின் எண்ணிக்கை உலகம் முழுவதிலும் அதிகரிப்பதைப் பார்த்து நீயும் பயந்து அவர்கள் பக்கம் போய்விடக் கூடாது. மனிதர்களைப் போல எந்தக் கொள்கையும் இன்றி நேரத்துக்கு நேரம் மாறும் குணம் உனக்கு இல்லை என்று எனக்குத் தெரியும். என்றாலும் அதை உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இந்தக் கடிதம் ஆரம்பத்தில் "நீங்கள்" என்ற மரியாதைப் பன்மையுடன் தொடங்கிப் பிறகு என்னை அறியாமலே உரிமையுடன் "நீ" ஆகிவிட்டது. உன்னை நான் உரிமை கொண்டாட முடியும். அந்தத் தகைமை எனக்கிருக்கிறது. ஏனென்றால் நான் இந்தப் பூவுலகில் எந்த மனிதனுக்கும் துன்பம் செய்யவில்லை. எனது அம்மாவோ யாருக்கும் தீமை செய்வது பற்றி மனதிலும் நினைக்கவில்லை. இந்தத் தகைமை போதாதா உன்னை என்னுடன் வருமாறு அழைக்க?

என் மனப்புண்ணை நானே கிளறி அழுது உன்னிடம் சொல்லித் தீர்த்ததில் ஒரு ஆறுதல் தெரிகிறது. இதை நீ யாருக்கும் சொல்லமாட்டாய் என்ற நம்பிக்கை மனதில் பால் வார்க்கிறது.

வாழ்வில் எனக்கு மாதிரிப் பாத்திரமாக இருந்திருக்க வேண்டியவர் அப்பா. அப்பா போன பிறகு அம்மாவுக்கும் உறுதியான ஆளுமை இருக்கவில்லை. ஒரு ஆண்பிள்ளை எப்படி



இருக்க வேண்டும் என்பதற்கான முன்வழிகாட்டல் எதுவும் இன்றியே நான் வளர்ந்தேன். என் அழுகை என் நெஞ்சையே குடைந்த, என் அலறல் என்னையே ஆடவைத்த வாழ்வு தானே என் வாழ்வு? அதனால்தானா நீ என்னிடம் வரத்தயங்குகிறாய்?

என் வயதுக்கும் நான் பார்க்கும் தொழிலுக்கும் மீறிய ஒரு முதிர்ச்சியை இக்கடிதத்தில் பார்க்கிறாய் அல்லவா? எமது குடும்பத்தில் எல்லாம் சரியாக இருந்திருந்தால் நான் எப்படி இருந்திருக்க வேண்டிய ஆள் என்பதை அதிலிருந்து நீ ஊகித்துக் கொள்வாய்.

என்னைச் சுற்றியும் எரிந்து கொண்டிருக்கும் நெருப்பை ஒருவாறு தணித்து என்னிடம் நீ வந்துவிடு சாந்தி.

அரச அலுவலகத்திற்கு உண்மையாகப் போகிறவர்களிடம் தான் நீ போவாயா? உத்தியோகத்திற்காகக் காகித வீதிகளில் கனவோடு செல்லும் என்னைப் போன்றவர்கள் உனக்கு இரண்டாம் பட்சமா? இல்லைத்தானே!

விழி நீர் தெளித்து ஒரு கோலம் போட்டு உன்னை வரவேற்கக் காத்திருப்பேன். எங்கள் வீட்டுப் படலையின் நிறம் கறுப்பு - சந்திப்போமா?

அன்புடன்
**தாசன்.**

✦ ✦ ✦ *(வலம்புரி - 18. 04. 2003)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14

# கூறானது மனம்

எல்லா நேரத்திலும் புத்திசாலியாய் இருப்பதும், புத்திசாலியாய் நடந்து கொள்வதும் மிகவும் அயர்ச்சி தரும் விடயங்கள். அதனால் இடையிடை எனது அகக் குழந்தையை நான் மேலே தூக்கிவிட்டு விடுவதுண்டு. அப்படியொரு மாலை வேளையில் தான் - அந்த மறையன் பூனை எங்கள் வீட்டுக் கோடியால் பயந்து பயந்து போன போது, நான் "மியா, மியா" என்று அதைக் கூப்பிட்டேன். வால்ப்பக்கத்திலும் பின்னங்காலிலும் அதிகம் தடித்த சாம்பல் நிறத்துடனும் முன்னங்காலிலும்







வயிற்றுப் புறத்திலும் மெல்லிய வெள்ளை கலந்த சாம்பலுடனும் போன அது எனது குரலைக் கேட்டு, நின்று மருண்டு பார்த்துவிட்டு தானும் ஒருமுறை "மியா" என்று விட்டுப் போய்விட்டது.

அந்தச் சம்பவம் எனக்கு மறந்து போய்விட்டதாய் நான் நினைத்திருந்த ஒரு முன்னிரவில், சாப்பாடு எடுப்பதற்காக நான் குசினிக்குப் போனபோது அது வடக்குப் புற ஹொரிடோரில் இருந்த கட்டிலில் இருந்து பாய்ந்து, நெற்றடித்த வெளிப்புறச் சுவரில் இருந்த தூண் இடைவெளி ஊடாக வெளியே கோடிக்கு ஓடியதை நான் எதேச்சையாகக் கண்டேன்.

வெளியே இருள், நரைத்த தலைமாதிரி உலகைக் கவிந்திருந்தது.

நான் இரவுணவை எடுத்துக் கொண்டு ஹோலுக்கு வந்தபோது மீண்டும் அது ஹோலுக்குள்ளே குறுக்கே ஓடியது.

"இந்தப் பூனை ஒண்டு நெடுகவும் வீட்டுக்குள்ளை திரியுது. விடிய வெளிக்கிடுற நேரங்களிலை முழிசுவளத்திற்குக் குறுக்காலை போப்போது...." என்று கணவர் சொன்னார்.

நான் அதற்குப் பதில் சொல்ல வாய் எடுக்க முன்னரே, புதியதோர் அழுகைச் சத்தம் வடக்குப்புறக் கட்டில் பக்கம் கேட்டது.

"இதென்ன புதுச்சத்தம்? பூனைதான் குட்டி போட்டிட்டுதோ?"

என் உடலில் வியர்வை புள்ளி புள்ளியாய்ச் சேர்ந்தது. எழுந்து கட்டில்பக்கம் சென்றேன். ஹோலுக்கு வெளிப்புறமாய் இருந்த அந்தக் கட்டிலில் பல கடதாசிப் பெட்டிகள் - வெறும் பெட்டிகள் - அடுக்கப்பட்டிருந்தன. அந்தப் பெட்டிகளில் ஒன்றுக்குள் இருந்துதான் சத்தம் வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்த வெறும் பெட்டியளை இதிலை அடுக்க வேண்டாம் என்று சொன்னனான்"

"சொல்றது சுகம். பிறகு அடுத்த முறை வீடு மாறேக்கை புத்தகங்கள் கட்டிறதுக்குப் பெட்டிக்கு எங்கை போறது"

தொண்ணூறில் எமது சொந்த வீட்டில் இருந்து இடம்பெயர்ந்த பின் இதுவரை ஒன்பது வீடு மாறியாகி விட்டது. இன்னும் எத்தனை வீடு பார்க்க வேண்டிய தலைவிதி இருக்கிறதோ? அதுவும் நியாயம் தான். பெட்டிகள் தேவை.

மேலிருந்த ஒரு பெட்டியின் மூடியை மெதுவாய்த் திறந்து பார்த்தேன். ஒன்றும் இல்லை. சத்தம் அடுத்த பெட்டியில் இருந்து திடீரென்று கேட்டபோது மனதில் தோன்றிய உணர்வு பயமா? பதற்றமா? மகிழ்வா? அருவருப்பா? பரிதாபமா?

மற்றப் பெட்டியைத் திறக்காமலே இடைவெளியொன்றில் கண்ணை ஓட்டி உள்ளே பார்த்தேன். மார்பு பளபளவென்று மின்ன... இள இளவென்று இருக்கும் புதிய குட்டிகள் நல்..ல்...ல வெள்ளை.

"ஓமப்பா குட்டிதான் போட்டிட்டுது... ரண்டு குட்டி..."

"சீ... சீ... எடுத்து எறியுங்கோ வெளியாலே... அசிங்கம்..." நான் எதுவும் செய்யாதிருப்பதைப் பார்த்து விட்டுக் கணவரும் வந்து எட்டிப் பார்த்தார். பெட்டியோடு தூக்கி எறிவார் என்று நினைத்தேன். அவரும் சிறிது நேரம் பார்த்துவிட்டுப் பேசாமல் போய் விட்டார்.

உயிர்களை நேசிக்கும் மானிடத்தைத் தேடுவதில் ஒரு பயணம் மௌனமாய் நடக்கிறதா?



அடுத்த நாள் காலையில் எழுந்தவுடனேயே குறுக்கே போகும் தாய்ப்பூனைதான் "முழுசு வளம்!" நான் "மியா, மியா" என்று கூப்பிட்டதை ஒரு நட்பார்ந்த அழைப்பாக எடுத்துக் கொண்டுதான் எங்கள் வீட்டைப் "பிரசவ வார்ட்" ஆக்கியிருக்கிறதா? யார் வீட்டுப் பூனை இது?

குட்டிகளுக்குப் பாலூட்டுவதற்காகத் தாய்ப்பூனை பெட்டிக்குள் பாய்ந்து ஏறியவுடன் குட்டிகள் "காச்சு மாச்சென்று" கத்தும். சிறிது நேரத்தில் எல்லாம் அமைதியாகி விடும். "இப்போது அவை தாய் மடியில் மகிழ்வுடன் பால் அருந்தும்!" எனக்குள் அந்த நினைவு மகிழ்வாய்!

என் மகளுக்கு நான் பாலூட்டிக் கொண்டிருந்த ஒரு அந்திப் பொழுதில் தான் எங்கள் வீட்டின் பின்புறத்தில் ஷெல்வீழ்ந்து நாம் ஓட வேண்டி வந்தது என்பதற்காய்... பூனைக்குட்டி அமைதியாய்ப் பால் குடிக்கக் கூடாதா என்ன?

பக்கத்து வீட்டில் நாம் விலை கொடுத்து வாங்கும் பசுப்பாலில் கோப்பி போட்டுக் குசினியில் இருந்து எடுத்துவரும் போது, சாம்பல் நிறப் பூனை என்காலைச் சுற்றி வந்து அழுதது.

பாவம்! பாலூட்டும் தாய், புண்ணான வயிறு என்று யாரும் அதற்குச் சரக்குக்கறி வைத்துச் சோறு கொடுக்கப் போகிறார்களா என்ன? எனக்கும் பூனைக்கும் எந்தவித குடுக்கல் வாங்கலு மில்லைத்தான். சொந்தமும் இல்லை. பந்தமும் இல்லை. ஒரே இனமா? ஒரே சமயமா? தாய்மொழியாவது ஒன்றா? எதுவும் இல்லை. என்றாலும் ஒன்பதாவது வீட்டில் அகதிவாழ்வு வாழும் என்னிடம் அது உணவு கேட்கிறது!. நான் ஆரம்பத்தில் ஒரு நாள் "மியா" சொல்லத்தானும் "மியா" சொன்ன அந்தத் தொடர்பு மட்டும் தான். என்ன மாதிரி அது என்னிடம் உரிமை எடுத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கிறது? எந்தவிதமான கேட்டுக் கேள்வியுமின்றி எங்கள் வீட்டில் பிரசவம் வைத்துக் கொண்டது மட்டுமின்றி இப்போது உணவும் கேட்கிறது! உணவு கேட்பது என்றால், எல்லாரிடமும் போய்க் கேட்க முடியுமா? ஒத்துணர்வு மனங்களை அது தேடுகிறது. மனசுள் பேச்சு ஓடிற்று.

குசினியில் இருந்த சிரட்டை யொன்றை எடுத்து வந்து சிறிதளவு பால்க் கோப்பி ஊற்றி நிலத்தில் வைத்தேன்.

பூனை பால் குடிக்கும்!

சந்தோஷமாய்க் குடித்தது. பின்னர் எலி பிடிப்பதற்காகப் போலும் பாய்ந்து ஓட்டில் ஏறியது.

நான் மெதுவாக நடந்து சென்று, குட்டிகளுக்கு இடைஞ்சல் தரக்கூடாது என்ற கவனத்துடன் மீண்டும் பெட்டியை எட்டிப் பார்த்தேன். அந்த வெள்ளைக் குஞ்சுகள் சோக்கான நித்திரை. பாவம் துயில் கொள்ளட்டும். திடும் திடும் என்று பயங்கரக் கனவுகளோடு வரும் தூக்கமாய் இல்லாதிருக்கட்டும். "என்னப்பா, பூனைக்குட்டி வளக்கிறீங்களா?" "அது இன்னுமொரு ஐந்தாறு நாளைக்குள்ளை தாய்ப்பூனை தூக்கிக் கொண்டு போயிடும். அதுவரைக்கும் தானே இருக்கட்டும்."

"தூக்கிக் கொண்டு போனாப் பிறகு பெட்டியைத்தூக்கிக் குப்பையிலை எறிவம்"

தாய்ப்பூனையா, நானா அதிகளவு நேரம் குட்டிகளை எட்டி எட்டிப் பார்க்கிறோம் என்பது கேள்வியாக இருந்தது.

பாலைப் பெற்றுக் கொண்டதாய்ப் பூனை நாங்கள் சாப்பிடும் வேளைகளில் சாப்பாடும் கேட்டது. அது தான் பரவாயில்லை



என்றால் மாலைத் தேநீருடன் அருந்தும் "கறுக்கு மொறுக்கு" பலகாரங்கள் கட்டாயம் தருமாறு வற்புறுத்தியது. இல்லையென்றால் உரிமையுடன் மடியிலேறிப் பறித்துக் கொண்டது.

"எப்ப இது குட்டியைத் தூக்கிக் கொண்டு போகும்?"

"அது ஏழு வீடு காவும் எண்டு சொல்லிறவை" மிக விரைவில் தாய்ப்பூனை மெத்தென்ற குட்டிகளைத் தூக்கிக்கொண்டு போய்விடும் என்பதே இப்போது ஒரு கவலையாய்ப் போயிற்று. கணம் தோறும் பார்க்க வேண்டும் போல ஒரு நினைவு. அதற்காக நித்திரை கொள்ளாதிருக்க முடியுமா என்ன?

நாலு நாள் "பெத்த வீட்டுப் பராமரிப்பு" சிறப்பாக முடிந்திருந்தது.

அன்றிரவும் நான் படுக்கைக்குப் போகுமுன் அவதானித்தேன். தாய்ப்பூனை கட்டிலின் அருகில் குந்தியிருந்து காலை நக்கிக் கொண்டு காவல் இருந்தது.

அன்று இரவு பூராவும் நல்ல மழை. தலை முதல் பாதம் ஈறாகக் கம்பளியால் போர்த்துக் கொண்டு நானும் தான் நல்ல நித்திரை. இடம்பெயர்ந்த வாழ்வு அகதி வாழ்வு என்கிற சங்கதிகள் எல்லாம் நித்திரைக்குத் தெரியாது. அது எந்த நிலையிலும் என்னை இறுக்கமாய் அணைத்துக் கொள்ளும். கடும் மழையில் இடி இடித்தது. மின்னல் சீறியது. கனவில் பாம்பு வந்தது. விழித்துப் பார்த்து விட்டுக் கனவு தானே என்று மீண்டும் நித்திரை.

கட்டிலில் இருந்த பெட்டிகள் தட்டுப்பட்டு விழுந்தது போன்ற சத்தம் கேட்டபோது அதிகாலை நான்கு மணி இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னப்பா பெட்டியள் விழுந்து சத்தம் கேட்குது?"

"தாய்ப்பூனை பாயேக்கை தட்டுப்பட்டுப் போச்சாக்கும்" இன்னொரு கண் நித்திரை செய்து எழும்ப விடிந்து விடும்.

விடிந்ததும் முதலில் எழுந்தது நான் தான். கடந்த சில நாள் வழக்கம் போல, குசினிக்குச் செல்லும் வழியில் கட்டிலுக்கு அருகில் சென்றேன். பெட்டிகள் கீழே விழுந்திருந்தன.

மிக அவசரமாய் வெள்ளைப் பூனை - பெரிய பூனை - ஒன்று பாய்ந்து தூண் இடைவெளி ஊடே வெளியேறியது.

பெட்டி கிழக்குப்புறம் பார்த்து விழுந்து கிடந்தது. பெட்டியை மெல்லத் திறந்தேன்.

கால் ஒன்று கடித்துக் குதறப்பட்ட நிலையில் இரத்தம் சிந்தக் கிடந்தது வெள்ளைக் குட்டியொன்று. பெட்டியின் மூடியெல்லாம் இரத்தம் சிந்திக் கிடந்தது.

இடி இடித்தது. மின்னல் சீறியது. என் தலையில் மின்னல் இறங்கியது போல இருந்தது. நான் இரண்டு கூறானேன். கூறானது உடம்பல்ல மனம்! "இஞ்சை வந்து பாருங்கோவன்... வெள்ளைப்பூனை ஒன்று குட்டியைக் கடிச்சுப் போட்டுது... குட்டி செத்துப் போச்சு...!

"அது கடுவன் பூனையாய் இருக்கும்..."

"மற்றக் குட்டியையும் காணேல்லை அப்பா..."

"அதைத் தாய்கொண்டு போயிருக்கும்..." வெள்ளைப்



பூனையும், சாம்பல் பூனையும் ஒரே இனம். அவை பேசும் மொழியும் ஒன்றுதானே!

அன்றுமாலை. சாம்பல் பூனை வந்தது. என்னைப் பார்த்து "மியா" என்றது. நானும் "மியா, மியா" என்றேன். என் காலுக்கருகில் குந்தியிருந்தது. நானும் உடனிருந்தேன். அதன் முகத்தை உற்றுப்பார்த்தேன். அது என்னை ஒருமுறை பார்த்துவிட்டுத் தலை குனிந்து கொண்டது. அழுகிறதா?

"பிள்ளையை விட்டுப் பிரியிறது எவ்வளவு உணர்வுச் சுமைகளைத் தரக்கூடியது என்று எனக்கு விளங்குது."

நான் எனது மொழியில் சாம்பல் பூனைக்கு ஒத்துணர்வு கொடுத்து, அதன் முதுகை மெதுவாகத் தடவிக் கொடுத்தேன்.

அது மீண்டும் என் முகத்தைப் பார்த்து "மியா" "மியா, மியா, மியா", "மியா, மியா" "மியா, மியா, மியா, மியா, மியா" ..... "மீ........யா....." என்றது.

இழப்புத்துயர் தொடர்பான சீர்மியம் செய்வதாயின் பூனையை எந்தெந்தப் படி நிலைகளூடாக அழைத்துச் செல்ல வேண்டும் என்ற சிந்தனை என் மனதில் பூத்தது.


✦ ✦ ✦ *(வலம்புரி - 02. 05. 2003)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15

# மலையைச் சுமத்தல் என்பது...



1990ம் ஆண்டில் ஒருநாள். இரவெல்லாம் பேய்மழை கண்ணைக்குருடாக்கும் கனத்த மின்னலுடன் - இயமன் குரல் போன்ற இடியுடன் - வெகு வேகமாய் வீசித்தள்ளிய காற்றுடன்-மா மழை! மழை என்றால் விடியாதா என்ன?

காலை 6.50!

இந்திய வானொலி அதைப் பற்றி முதல் அறிவிப்புச் செய்தது. யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் பத்துலட்சம் பேரையும் அங்கிருந்து





முழுமையாக வெளியேற்றி விட்டு அரசு பயங்கரவாதிகளுக் கெதிராகக் கடும்தாக்குதல் நடத்தப்போகிறதாம்!

(அப்படியானால்..... இதுவரை நடைபெற்றதெல்லாம்..... காலை, மதியம், மாலை, இரவு என்று நாலுக்கு நாலு தரம்தவறாது நடந்தவிமானத்தாக்குதல், அங்குலம் தவறாமல் வந்து விழும் ஷெல்தாக்குதல் எல்லாம் இலேசான தாக்குதல் என்று எழுதிக் கொள்ள வேண்டும்!)

எனக்குள்ளே எலும்புகள் ஒருகணம் முறிந்து போன உணர்வு! முறிந்துபோன எலும்புத்துண்டுகளைப் பொறுக்கி எடுத்துத்தரப் பத்துப்பேர் வேண்டும் போல இருந்தது. கண்கள் ஒரு நரகலோகத்தைக் கற்பனையில் காவியிருந்தன.

நண்பர் ஒருவர் வீட்டுக்குவந்திருந்தார். 'என்னையா இது? அகதிகளாக இந்தியாநோக்கிப் புறப்படுபவர்களைத்தான் தடுத்து.... மன்னாரில் அகதிமுகாம்.... (தடுப்புக்காவல்?') போடப் போகிறார்கள் என்று நினைத்தோம். நாங்கள் எமது சொந்தக் கிராமங்களை விட்டு வெளியேற விரும்ப வில்லை என்று சொல்லுகிறவர்களையும் எமது மண்ணைவிட்டு எழும்பப் போவதில்லை என்று நினைக்கிறவர்களையும் - கட்டாயமாக வவுனியாவுக்கு அனுப்பப் போகிறார்களாமே? இதென்னையா அநியாயம்,' என்று கேட்டேன்.

நண்பர் சிரித்தார்.

'துக்ளக்கின் கதை தெரியுமா உங்களுக்கு?' என்று கேட்டார்.

'தலைநகரை மாற்றப் போகிறேன் என்று சொல்லி, டில்லியில் இருந்து மனிதர்களை மட்டுமல்ல, ஆடு, மாடு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாய்களையும் ஏற்றி இறக்கியகதைதான் இதுவும்.....' என்றுசொல்லி மீண்டும் இடி இடி என்று சிரித்தார்.

'சிரிக்கிறவிஷயமா இது? குறிப்பிட்ட ஒரு திகதியைக் கூறி அதற்குள் எல்லோரும் வெளியேறி விடவேண்டும் என்று அரசு அறிவித்தால்....?'

நானும் விடாப்பிடியாகக் கேட்டேன்.

'இது நடைமுறைச் சாத்தியம் அற்றவிடயம் - பத்துலட்சம் மக்களையும் அவர்களுடைய வீடுவாசல்களையும் கிண்டி அள்ளி எங்கே ஏற்றுவது? எப்படி ஏற்றுவது?'

மீண்டும் சிரித்துக் கொண்டே அவர் போய்விட்டார்.

அவர்மனம் எதிர்காலத்தை நேரானசிந்தனையுடன் பார்ப்பது - எனதுமனம் மறையானசிந்தனைகளையும் உள்ளேவிட்டு தீர்மானம் எடுக்க முனைவது -இவற்றில் எந்தமனம் சிறந்தது என்று என்னால் தீர்மானிக்க முடியவில்லை.

திடீரென்று அவ்விடத்தில் வீசிய காற்றில் துர்நாற்றம் கலந்திருந்த தால் நானும் இடத்தைவிட்டு எழுந்துகொண்டேன்.

என்றாலும் என்மனதை இது விடயம் அரித்து, அரித்துக் கொண்டே இருந்தது. பாதுகாப்பு அமைச்சர் என்னதான் ஜோக்கராக இருந்தாலும், முற்றிலும் சிரிப்புக்கிடமான விடயத்தை ஜனாதிபதியின் பரிசீலனைக்கு வைப்பாரா?

ஓரிரு தினங்களுக்குப்பின், சிலபுத்தகங்களோடு உறவினர் ஒருவர் வீட்டுக்குச் சென்றேன். செல்லும் பாதை எங்கும் புற்கள் முளைத்திருந்தன. சென்ற வார மழையோடு சிவப்பு நட்சத்திர மெனப் புல்லுப் பூக்கள் காலில் மிதிபட்டன. உறவினர் வீட்டில் புத்தகங்களோடு அந்தக் கேள்வியையும் இறக்கினேன்.



''எங்களை யெல்லாம் வவுனியாவுக்கு அனுப்பப் போகிறாராமே?''

இவர் முந்தியவரை விட இன்னும் பலமாகச் சிரித்தார்.

''மலையைச் சுமந்தவனின் கதை தெரியுமா உங்களுக்கு?'' என்று கேட்டார்.

''சொல்லுங்கள்'' என்றேன்.

''மலையைச் சுமப்பதென்பது முடியாத காரியம்'' என்று எல்லோருக்கும் நன்கு தெரியும்.

ஒருவன் வந்தான். புன்னகை பூசிய முகத்துடன் ! மிகத் துணிகரமாக நெஞ்சை நிமிர்த்தி, எல்லோரும் வியக்கும்படி சொன்னான்.

''என்னால் மலையைச் சுமக்க முடியும்.!''

''உண்மைதானா?''

மக்கள் அவனை மிகுந்த அதிசயத்துடன் நோக்கினர்.

''உண்மை தான். நான் செய்து தான் காட்டப் போகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை! ஒரு வருட காலத்துக்கு எனக்குக் கோழி, ஆடு, முட்டை, பால் என்று புஷ்டியான நிறை உணவு தரவேண்டும். உடல் ஆரோக்கியம் இருந்தால் எதையும் செய்யலாம்!''

போனால் போகிறது! ஒரு வருடம் தானே! மக்கள் அவன் விரும்பிய உணவெல்லாம் அவனுக்குக் கொடுத்தனர். அவனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றாகத் தின்று கொழுத்திருந்தான். ஒரு வருட கால அவகாசம் முடிந்தது.

"என்னப்பா? எப்போது மலையைத் தூக்கப் போகிறாய்? எந்த மலையைத் தூக்குவாய்?" மக்கள் கேட்டனர்.

"இதோ பாருங்கள்! சொன்னவாக்குத் தவறாமல் செய்து முடிக்கிறேன்" என்று அறைகூவி அவன் கம்பீரமாய் நடந்து மலையடிவாரத்திற்குச் சென்றான். அந்த நாட்டிலேயே மிக உயர்ந்த மலை அது! அவன் மலை சுமப்பதைப் பார்க்கும் ஆவலோடு மக்கள் அலை அலையாய் அவன் பின் சென்றனர். மலையின் ஒரு பக்கத்தில் உண்மையான சமுத்திரம்! மறு பக்கத்தில் ஜன சமுத்திரம்! "லெப்ட், றைற்" போட்டு, மலையடிவாரத்திற்குச் சென்றவன், அப்படியே பேசாமல் நின்றான். கண்களை மூடிக்கொண்டான்.

"என்ன? இவன் தியானம் செய்கிறானா? கடவுளை வணங்குகிறானா?" நேரம் செக்கன்களில் இருந்து நிமிடங்களாகிக் கரைந்து மறைந்தது.

"என்னப்பா? எங்களை ஏமாற்றுகிறாய்; நீ எப்போது மலையைச் சுமக்கப் போகிறாய்?" மக்களின் குரலில் இப்போது ஒரு உலோகத் தன்மை வந்து விட்டதால் போலும் அவன் கண்களைத் திறந்து கொண்டான்.

குளிர்ந்த மிக இனிமையான இயற்கையின் அழகு அப்பிரதேசத்தைத் தேவ உலகாக்கிக் கொண்டிருந்தது. அவன் மிக அமைதியாகவும் தெளிவாகவும் பேசினான்.

"ஏனையா? நான் என்ன சொல்லியிருந்தேன் என்று நன்றாக நினைவு படுத்திப் பாருங்கள். மலையைச் சுமப்பேன்



என்று தானே சொன்னேன்? மலையைத் தூக்குவேன் என்று சொல்லவில்லையே! நீங்கள் யாராவது தூக்கித் தோளில் வைத்து விடுவீர்கள் என்று எதிர்பார்த்துத் தான் இதுவரை கண்களை மூடிக்கொண்டு "தம்" பிடித்து நின்றேன். நீங்கள் ஏன் தாமதிக்கிறீர்கள்,, ஒருவர் அல்ல.... பலர் சேர்ந்தாவது தூக்கி என்தோளில் வைத்துவிடுங்கள்..... நான் சுமக்கிறேனா.... இல்லையா பாருங்கள்!"

ஜனசமுத்திரம் அசடு வழிந்து திரும்பிச் சென்றது!

"எப்படிக் கதை?" என்று கேட்டார். மீண்டும் இடி இடியென்று சிரித்தார்.

இப்போது எனக்கும் தான் சிரிப்பு வந்தது.

பத்து லட்சம் மக்களை வெளியேற்றிக் கொடுத்தால்.......! எனக்கும் இப்போதே நேரான சிந்தனை தொற்றிக் கொண்டது. மனம் நிறையவே அமைதிப்பட்டது போலிருந்தது. எழுந்து நடந்தேன்.

1995 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30ஆம் திகதி மக்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு சிறுமலையைத் தூக்கி அவனது தோளில் வைத்தனர்.

அவன் சிறிது காலம் காவிக்கொண்டு நின்றான்.

முதுகுவலி தாங்க முடியவில்லை. முறியப்போகிறது முதுகு. உண்மையான பற்களாயினும் பொய்ச்சிரிப்போடு மீண்டும் இறக்கி வைத்துவிட்டான். மரணத்தின் அரும்பு மயிர்கள் முளைப்பதை அவன் புரிந்து கொண்டிருக்க வேண்டும். புரிந்து கொண்ட நாள் 22. 02. 2002!

✦ ✦ ✦ *(வலம்புரி - 09. 05. 2003)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16

## பிறழ்வின் தோற்றம்



நானோ? ஓம்சாப்பிட்டனான். புட்டும் மற்றது பயித்தங்காக் கறி இரவான் இருந்தது. அம்மா தந்தவ – வடிவாச் சாப்பிட்டிட்டுத் தான் பள்ளிக்கூடம் வந்தனான். ஏன் கேட்டனியள்? சும்மா கேட்டனியளோ? அதொண்டு எங்கட அம்மா காலமை, இரவு – இரண்டு நேரம் சாப்பாடு வடிவாத் தருவ. இரண்டு நேரத்துக்கு மேலை சாப்பிட்டா பேத்தை வண்டி வைக்கும்எண்டு சொல்லுவ.

எங்கட முன்னால் வீட்டுப் பெடியன் ரஞ்சன் ஆள் ஒரு ஊமல் பெடியன் தானே – ஆளைப்





பாத்தனியளே என்னமாதிரிப் பேத்தை வண்டி! அவைக்குச் சாப்பாட்டுக்கும் கஷ்டந்தான். அவன் கண்ட நேரமும் எங்கினையும் களவெடுத்தும் தின்னிறது. அதைப் பாத்துத் தான் அம்மா எங்களுக்குச் சொல்லுறவ கண்ட நேரமும் சாப்பிடப் பிடாது எண்டு.

அப்பா என்ன தொழிலோ? ஏன் நீங்கள் அப்பாவைப் பற்றித் தேவையில்லாமல் கேக்கிறியள்? எங்கடை அப்பாவோடை நாங்கள் கதைக்கிறேல்லை. சரியோ? குடிச்சுப்போட்டுவந்து நெடுகவும் எங்கடை அம்மாவோடை சண்டை பிடிக்கிறவர் – அப்படியான ஆளோடை என்னத்தைக் கதைக்கிறது?

ஆய்க்கினை தாங்கேலாமல் அம்மா அப்பாவை ஒருக்காக்காவல் துறையிலை பிடிச்சுக் குடுத்தவ. அவங்களையும் ஏதோ கெஞ்சி மண்டாடியாக்கும் பிறகு காவல் துறை வெளியிலை விட்டிட்டுது இவரை. அவர் ஒழுங்கையிலை வந்து நிண்டு. "எடியே பாத்தியேடி... என்னை விட்டிட்டாங்கள் நான் உன்னை என்ன செய்யிறன்பார்" எண்டு கத்தினவர்.

இல்லை. இல்லை. வெருட்டில்லை. அப்ப அவரை விடேக்கை...... அம்மா இஞ்சை தோட்டத்திலை பயறு, உழுந்து எல்லாம் விதைச் சிருந்தவ. சரியோ? அப்ப, இவர் அதை ஒண்டும் வெட்டவிடாமல் கரைச்சல் படுத்தி, திருப்பியும் அம்மாக்கு அடிச்சு அப்பிடிப் பெரிய பிரச்சினை அப்ப, அம்மா திருப்பியும் காவல் துறைக்குச் சொல்லி அவங்கள் பிடிச்சுப் பேந்தும் உள்ளுக்குப் போட்டிட்டாங்கள்.

என்ன? மேசையிலை ஏறிறதும் இறங்கிறதுமா நிக்கிறனோ? ஓ... அப்பிடித்தான். வகுப்பிலை ஒரு இடத்திலை இருக்கமாட்டன். அதுதான் ரீச்சரும் என்னைக் குளப்படி எண்டு அடிக்கிறவ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரீச்சற்றை அடி எனக்கு நோகிறேல்லை. ஏனெண்டா அப்பாட்டை வாங்கிப் பழக்கந்தானே. எது? அப்பான்ரை அடியோ? ஓ.... அப்பாடி அடியெண்டா.... நினைக்கேலாத அடி. அப்பிடியே முதுகைப் பிடிச்சுக் குத்துவார். சிலவேளை, அழுதா..... அடிஇன்னும் கூட விழும். எனக்கு மட்டுமில்லை. தங்கச் சிக்கு... மற்றது எங்கடை கடைக்குட்டித் தம்பிக்குக் கூட விழும். அப்ப, அம்மா என்ன செய்வ எண்டா...... ஆள் வர..... எங்களைப் பத்தைக்குள்ளே ஒழிச்சு விட்டுட்டு அதுக்குள்ளைதான் சில வேளை சாப்பாடும் கொண்டுவந்து தருவ.

ஒரு நாள் பாருங்கோ.... அம்மாக்கு கிளி சிறியாத் தடியாலை அடிச்சு..... அந்தத் தடி அப்படியே நெஞ்சைச் சுத்திப்பிடிச்ச மாதிரி காயம், அப்படியே பதிஞ்சுபோச்சு....... இப்பிடி .....ஓ..... அதுக்குப் பிறகு அம்மாக்கு ஒரே நெஞ்சுக்குத்துவாறது....

ஆர்.... நானோ.... ஓ... கோவம் வந்தால் வகுப்பிலை பெடியளுக்கு அடிப்பன்.... அவை ஒருத்தரும் என்னோடை செருக ஏலாது. சரியோ....

ஓ... நான் கதையைப் பாதியிலை விட்டிட்டன். பிறகு ஒரு நாள் அம்மாக்கு இவ்விடத்திலை குத்தி... அம்மாக்குச் சாப்பிட ஏலாது...... பேந்தொருநாள் காலை அடிச்சு.... கால் வெடிச்சுக் கொஞ்சநாள் நடக்க மாட்டாமலும் இருந்தவ.

அப்ப..... எனக்கு அப்பா எண்டாலே பிடிக்காது. எங்களுக்குத்தான் ஒண்டுமில்லாட்டிலும் இவன் குட்டி ..... சின்னத்தம்பிக் கெண்டாலும் ஒரு விசுக்கோத்துப் பெட்டி எண்டாலும் ஒரு நாளும் வாங்கிக் குடுக்கேலை அவர்.





அது தானே.... அப்ப எங்கடை தங்கச்சி ஒரு நாள் ஒரு பொல்லாங்கட்டையாலை தூக்கி அப்பாக்கு எறிஞ்சவள். ஆத்திரத்திலை.

எனக்கோ...:.. எனக்கு இப்ப சரியாப் பத்துவயது. நான் ஐஞ்சாம் வகுப்புப் படிக்க வேணும். இப்ப.... ஆனா நான் மூண்டாம் வகுப்புத்தான் படிக்கிறன். எனக்கு இடையிடை முட்டு வருத்தமும் வாறது. பள்ளிக்கூடமும் ஒழுங்காவாறேல்லைத்தான். எந்த நாளும் சளி. மூக்காலை சளி வடியிறதெண்டு பெடியள் என்னை "மூக்குச் சளி" எண்டு பட்டம் தரிப்பங்கள். கொஞ்ச நேரம் கேட்டுக்கொண்டிருப்பன். பேந்து பட்டம் தரிக்கிற ஆக்களுக் கெல்லாம் பிடிச்சு நல்ல சாத்துப்படி கொடுத்துடுவன். அந்தநேரத்திலை தான் ரீச்சரிட்டையும் அடி வாங்கிறனான். எனக்கு "முகுந்தன்" எண்டு நல்ல பெயர் ஒண்டு இருக்கத்தக்கனையா "மூக்குச் சளி"எண்டு கூப்பிட்டால் என்ன ஆத்திரம் வரும் சொல்லுங்கோ பாப்பம்! நுளம்புக் கடிக்கை கிடந்து மலேரியாவும் அடிக்கடி வரும். பிறகு மலேரியா குளிசை போட மாறும். பேந்து வரும். காச்சல் வரேக்கை சும்மா குலைப்பன் அடியெண்டாத் தாங்கேலாமல் இருக்கும். இந்தப் பிரச்சினைகளுக் குள்ளை நான் ஊத்தையா வாறனாம் எண்டு ரீச்சரும் பேசிறா.

ஆ..... எங்களுக்கோ? சொந்தக்காரரோ? இருக்கினம். ஆனாநாங்க ஒரு வீட்டையும் போறேல்லை. ஆக ஒரே ஒரு பெரியம்மா வீட்டை தான் போறனாங்கள். எங்கடை அம்மம்மா கலா அன்ரி வீட்டிலை தான் இருக்கிறா. நாங்கள் அங்கையும் போறேல்லை. அப்பாவாலை எல்லாரும் எங்களோடை கோவம். அப்பான்ரை ஆக்கள் ஒருத்தரும் கதைக்கிறேலை. ஆக மாமி மாத்திரம் இந்தியாவிலை இருந்து வந்த நேரம் கதைச்சவ ஆ.....? இல்லை. இல்லை. பிரச்சினை இல்லை. நீங்கள் இருங்கோ நான் இதிலை நிண்டு கதைக்கிறன். நிண்டு கதைக்கிற தான் சுகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இவ்வளவு நேரமாக் கனகதையள உங்களுக்கு நான் சொல்லிக் கொண்டு வந்தனான். ஒரு கதை மட்டும் சொல்லேல்லை. என்னெண்டா... சரியோ.. முந்தி ஒரு நாள் அம்மாவை சரியோ அப்பா கூட்டிக் கொண்டு கொழும்புக்கு போனவராம். சரியோ.... அப்ப..... அங்கை ஒரு பெரிய கோயில் மடம் மாதிரி ஒரு இடத்திலை தானாம் நிண்டவையாம் சரியோ........ நிறையச் சனங்களும் படுத்திருந்ததுகளாம். சரியோ....... அப்ப இரவு சாப்பாட்டுப் பாசல் எடுத்தரச் சொல்லி அம்மா ஐந்நூறு ரூவாத் தாள் குடுத்தவவாம். அவர் அதைக் கொண்டு போய்க் குடிகுடியெண்டு குடிச்சிட்டு இரண்டு சாப்பாட்டுப் பாசலோடை மிச்சக்காசும் இல்லாமல் வந்த வராம். சரியோ... அப்ப...... மேலை வெளவால் இருக்கெண்டிட்டு அம்மா கொஞ்சம் தள்ளிப்படுத்தவவாம் சரியோ... அப்ப இவர் வந்து "எடியே...... ஏன் அங்க போனனி.... நான் விட்ட இடத்தை விட்டிட்டு ஏன்ரி போனனி" எண்டு அவ்ள சனத்துக்கையும் கத்த அதுகள் எல்லாம் கீயோ மாயோ எண்டு எழும்பீற்றுதுகளாம். அண்டைக்கும் அம்மாக்குப் போட்டு அடி அடி எண்டு அடிச்ச வராம். சரியோ.....

சனங்கள் ஆரோ பொலிசுக்குச் சொல்லிப் போட்டுதாம். பொலிசு வந்து இவரைப் பிடிக்கப் பிறகு எங்கடை அம்மா தான் "விடுங்கையா, விடுங்கையா" எண்டு குழறினவாம். பிறகு அவங்கள் விட்டிட்டாங்களாம்.

அப்ப, நெடுக இப்படித்தான். அம்மா சொல்றவ...... கலியாணம் கட்டின காலத்திலை இருந்து இப்பிடித்தானாம்.

அப்பாவை இப்ப காவல்த்துறை பிடிச்சு வைச்சிருக்குத் தானே. அப்ப அவங்கள் சிலநேரம் ஏதும் சாமான் வேண்டிக்கொண்டு வரச்சொல்லிவிட்டால் அவர் அதுக்கிடையிலை ஒருக்கா இந்தப்





பக்கம் வந்து தங்கச்சியைத் தேடி "எடியே ஓடாதை இந்தா" எண்டு சொல்லிப் பொக்கேற்றுக் காலை காசு பத்து ரூபா எடுத்து நீட்டினவராம்.

அப்ப தங்கச்சி வேண்டுமே? அது எனக்கு வேண்டாம் எண்டு தாம். சரியோ..... "இதைப்பிடி, ஓடினியெண்டால் அடிப்பன் எண்டவராம்". தங்கச்சி ஒழிச்சு ஒழிச்சு ஒடி வந்திட்டுது.

தங்கச்சி பாவம்.... அது இப்பகன நாளா வருத்தமாக் கிடந்தது. தங்கச்சியை அம்மன் தொட்டிட்டுது எண்டு அம்மா தங்கச்சியைக் கொண்டு போய் கோயில் அம்மாட்டைக் காட்டி அவ திருநீறும் போட்டு நூலும் கட்டி விட்டவ. இப்ப அதுக்குப் பிறகுதான் தங்கச்சிக்குக் கொஞ்சம் சுகம். பிறகு இவர் இப்படி வெருட்டினால் எப்பிடி இருக்கும்.

முந்தி ஒருநாள் தங்கச்சி சின்னப்பிள்ளையாய் இருக்கேக்கை தங்கச்சிக்கு அடிச்சுப் போட்டு, கேற்றுக்கைதூக்கிக் கொண்டு போய் வைச்சிட்டு அப்பா கடந்தவராம், சரியோ...... கடந்தவராம்...... அது தங்கச்சிக்கு இப்ப சரியான கவலை. கடந்த வராம் ........ சரியோ.

இப்ப நானும் பள்ளிக்கூடத்திலை எல்லாருக்கும் அடிக்கிறன் எண்டு என்னோடை கதைக்கச் சொல்லி வேறை ஒரு ரீச்சரை விட்டிருக்கு. எனக்குக் கோபம் வந்தா அடிப்பன் எண்டு நான் அந்த ரீச்சருக்கும் சொன்னனான்.

அம்மா சொன்னவ..... இந்தக் கரைச்சலுக்கை இனியும் இருக்கேலாதாம். யாழ்ப்பாணம் போய் குஞ்சியம்மா வீட்டிலை இருப்பம் எண்டவ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓ.... இந்த உழுந்தை வெட்டி அடிச்சுக் கொண்டு நாங்கள் போடுவம். சரியோ..... எங்கடை சித்தப்பா ஆக்களுக்கும் நாங்கள் போறதுதான் விருப்பம்...... ஏன் சொல்லுங்கோ..... அப்பதானே எங்கடை காணியளைப் பிடிக்கலாம். நாங்கள் ஆரையாவது இருத்திப்போட்டுத் தான் போவம். எங்கடை அம்மா நல்லாய்த்தைப்பா. காணி இல்லாட்டியும் அவ தைச்சு உழைப்பா. தையல் மிசினை யாழ்ப்பாணம் கொண்டு போவம். எங்கடை அம்மா தைக்கிறதுக்குக் கொஞ்சக் காசுதான் எடுக்கிறவா. ஒரு பாவாடை தைக்க வேறை இடத்திலை ஐம்பது ரூபாவாம். எங்கடை அம்மா 30 ரூபா தான் எடுக்கிறவா. அதாலை ஆட்கள் விரும்பி வருவினம். அண்டைக்கு ஒரு சட்டை தைச்சுக்கொடுக்க அந்த அன்ரி எல்லாருக்கும் காட்டினவ...... வடிவு எண்டு. அப்ப யாழ்ப்பாணத்திலையும் கனபேர் தைக்க வருவினம். நாங்கள் பள்ளிக்கூடம் வந்தா அம்மா தைச்சுக் கொண்டிருப்பா.

அம்மாக்குத் தனிய இருக்கவும் பயமில்லை. சரியோ...... எந்த இரவிலையும் எங்கையும் போவா. வருவா. அப்பாக்கு மட்டும் தான் பயம். வேறை முனிக்குக்கூட அம்மாக்குப் பயமில்லை.

அப்ப நான் போட்டு வரட்டே........ கனநேரமாய் கதைச்சுக்கொண்டு நிண்டுட்டன். யாழ்ப்பாணம் போனா அங்கையும் சிலவேளை சந்திப்பம் தானே... வாறன் ஆ.......

✦ ✦ ✦ *(வலம்புரி - 23. 05. 2003)*



# 17

# உயர்ந்து செல்லும் சீரழிவு மானி



ரீச்சர், ஏதும் பிரச்சினை இருக்கிறவை உங்களோடை வந்து கதைக்கலாம் எண்டு அசெம்பிளிலை இரண்டு மூண்டு தரம் சொன்னனீங்கள் தானே! எண்டாலும்என்ரை கதையைக் கேட்டிட்டு நீங்கள் என்ன சொல்லுவீங்களோ எண்டு எனக்குப் பயமாயிருந்ததாலை தான் இவ்வளவு நாளும்வரேல்லை.

ஓம் ரீச்சர் கவலையோடை இருக்கிற ஆக்களுக்கு உதவி செய்யிறத்துக்கு நீங்க படிச்சனீங்கள் எண்டு தெரியும், அது தான் இண்டைக்கு வந்தனான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எங்கடை வீட்டிலையோ? எங்கடை வீட்டிலை அப்பாவும் அம்மாவும் அம்மம்மாவும் நானும் தான் இருக்கிறம். வேறை ஒருத்தரும் இல்லை.

ஓமோம். நான் ஒரு பிள்ளை தானே.... அதாலை கொஞ்சம் செல்லம்தான். அம்மா என்னோடை நல்ல விருப்பம். என்னிலை நல்ல நம்பிக்கை அவவுக்கு..... காசெல்லாம் எடுத்து வைக்கச்சொல்லி என்னட்டைத்தான் தாறவ... நான் அதிலை எனக்குத் தேவையான தெல்லாம் வாங்குவன்.

அம்மா காசு வட்டிக்கு குடுக்கிறவ. கடன் வாங்கினாக்கள் வட்டி கொணந்து தரேக்கை, பாதியை நான் எடுத்துப்போடுவன். அம்மா அதுக்கு ஒண்டும் சொல்லமாட்டா. இப்பிடி எடுக்கிற காசெல்லாம் சேத்து வைச்சிட்டு ஏதாவது வாங்குவன்.

அப்பாவோ? அவரைப் பற்றிக் கேக்காதேங்கோ. அவர் ஒரே குடிச்சிட்டுக் கத்திக்கொண்டிருப்பர். சிலவேளை எங்களையும் தூசணத்தாலை ஏசுவர்.

நாங்கள் தொண்ணூற்றைஞ்சிலை இடம் பெயர்ந்து இருந்தனாங்க ளெல்லோ....... அப்ப.......

ரீச்சர் நான் சொல்லுறதை ஒருத்தருக்கும் சொல்ல மாட்டீங்கதானே!

அப்ப..... சுகந்தன் அண்ணை எங்களோடை இருந்தார். அவர் என்னை லவ் பண்ணக் கேட்டார். நான் ஏலா தெண்டு ஏசிப்போட்டன். அதுக்குப் பிறகு டொபியிலையும் தண்ணியிலையும் போட்டுத்தந்தவர். மருந்து போட்டுத்தந்த டொபியை பக்கத்து வீட்டு அக்கா சாப்பிட்டுட்டா. மருந்து போட்டுதந்த தண்ணியை நான் குடிச்சிட்டன். இப்ப மருந்து வயித்துக்குள்ளை இருக்கோ வெளியேறிட்டுதோ தெரியேல்லை.





ஓம் ரீச்சர். அதாலை இந்தப் பிரச்சினையள் அம்மாவுக்குத் தெரிய வந்திட்டுது. அவா எடுத்ததுக்கெல்லாம் இப்ப இதைச் சொல்லிக்காட்டி ஏசுவா, இதை என்னாலை தாங்க ஏலாமல் இருக்கு ரீச்சர். ஏன் தாங்க ஏலாமல் இருக்கெண்டால் நான் சுகந்தன் அண்ணையை விரும்பேல்லை. அவர் தான் வில்லங்கத்துக்கு வந்தவர். இதை அம்மா விளங்கிக்கொள்றா இல்லை.

எனக்கு இதாலை ஒரே யோசனையும் பதற்றமுந்தான். ஒரு நாள் நான் கறிக்கு மிளகாய்த்தூள் போடுறத்துக்குப்பதிலாத் தேயிலையைப் போட்டிட்டன். தேத்தண்ணி குடிக்கிறகப்பை எங்கேயும் வைச்சிட்டு உலகமெல்லாம் தேடிக்கொண்டு வருவன். இப்பிடித்தான் இப்ப அநேகம் நடக்குது.

ஓம்ரீச்சர். பிரச்சினை அதோடை முடியேல்லை. பேந்து நாங்கள் இடம்பெயர்ந்து கிளிநொச்சியிலை இருக்கேக்கை மணி மாமா என்னை விரும்பினவர். அவர் கடிதம் எழுதிக்கப்பல் செய்து அனுப்பினவர். நாங்கள் இரண்டு பேரும் றோட்டிலை எத்தனையோ நாள் கதைச்சுக்கொண்டு நிண்டிருப்பம். அப்பவும் ஒருத்தருக்கும் தெரியாது. எனக்கு இதுகளை யெல்லாம் யோசிச்சா வாயாலையும் மூக்காலையும் இரத்தம் வரும். மூக்காலை மூச்சே வராது. அப்ப வாயாலைதான் மூச்சு விடுறனான். நான் வயித்திலை இருக்கேக்கை அம்மாவுக்கு மலேரியா வந்ததாம். அது தான் எனக்கு ஒரே வருத்தம் எண்டு அம்மா சொல்லுவ. நெஞ்சிலையும் தலையிலையும் ஒரே சளி. நித்திரை கொள்ளேக்கை சளி இழுக்கிற சத்தம் கேக்கும் எண்டு அம்மா சொல்லுறவ.

அப்பிடித்தான் ரீச்சர் தலையிடி, தலைநோ, வயித்து நோ, ஓங்காளம், பலவீனம், கைநடுக்கம் எல்லாம் இருக்குரீச்சர். எல்லாத்தையும் நினைச்சாச் சாகவேணும்போல இருக்கும். நான் நிறைய மலேரியாக் குளிசை போட்டுச் சாகத்தான் இருந்தனான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்து வீட்டு அன்ரி வந்து தடுத்துப் போட்டா. மலேரியாக் குளிசை எல்லாத்தையும் பறிச்சு எறிஞ்சு போட்டா.

அப்பிடி என்ன கவலை எண்டு நினைப்பீங்கள். நான் நடந்த பிரச்சினை எல்லாம் ஒரு டயரியிலை எழுதி வைச்சிருக்கிறன். அதை ஒருத்தரும் வாசிச்சு விளங்கமாட்டினம். ஏனெண்டால் தமிழை இங்கிலிசிலை எழுதி வைச்சிருக்கிறன். அதோடை டயரியை றங்குப்பெட்டிக்குள்ளை போட்டுப் பூட்டி வைச்சிருக்கிறன். நான் இந்தப் பிரச்சினையளை ஒருத்தருக்கும் சொல்லேல்லை. இப்ப உங்களுக்குத்தான் சொல்லுறன். நீங்க அம்மாட்டைச் சொல்ல மாட்டீங்கள்தானே.

நான் அக்காவைப்பற்றி உங்களுக்குச் சொன்னனானோ? அவவை முதல் எனக்குத்தெரியாது. இடம் பெயர்ந்த பிறகு தான் அவவைத் தெரியும். அவ எனக்கு மச்சாள் முறை. நான் அக்கா எண்டு தான் கூப்பிடுவன். எங்கடை வீட்டுக்குப் பக்கத்திலை தான் அக்காவை இருந்தவை. நெடுக நான் அக்கா வீட்டை போய்க் கதைக்கிறது அம்மாவுக்குப்பிடிக்காது. அக்கா தண்ணி அள்ளப்போகேக்கை வாளியாலையெண்டாலும் தட்டுவ. நான் அந்தச்சத்தத்துக்கு அவவோடை போவன். போய்க் கதைச்சிட்டு வருவன். நானும் அக்காவும் ஒரே மாதிரி உடுப்புப் போட்டுச் சுத்தி அடிப்பம்.

நாங்கள் இடம்பெயர்ந்து இருக்கேக்கை மணி மாமா என்னை விரும்பினார் எண்டு சொன்னனானோ? அவரும் பக்கத்திலைதான் இருந்தவர். அப்ப எனக்கு பதின்மூண்டு வயது. நாங்கள் மணிமாமாவோடை விளையாடுவம். அவர் எங்களைக் கூட்டிக்கொண்டு திரிவர். வீட்டிலையும் எல்லாரும் மணிமாமாவிலை சரியான பாசம். எங்கை போறதெண்டாலும் என்னை மணிமாமா வோடை தான் அனுப்புவினம்.



அவர் அப்ப என்னைத்தூக்கிக் கொண்டு திரிவார். எல்லாருக்கும் முன்னாலையும் என்னைக் கட்டிப் பிடிச்சுக்கொஞ்சுவார். கிள்ளுவார். அதை அக்காவும் பார்த்துச் சிரிக்கிறவ. இப்ப மணிமாமா அக்காவை விரும்பிறாராம். அக்காவைத்தான் கலியாணம் கட்டப்போறாராம். ஆனால் அவர் முந்தி என்னையும் விரும்பினவர் ரீச்சர். அது தான் எனக்கு ஒரே யோசனை.

ஒரு நாள் ரீச்சர். வீட்டிலை ஒருத்தரும் இல்லை. மணிமாமா என்னை அறைக்குள்ள விட்டுப் பூட்டி........ என்னைக் கெடுத்திட்டார் ரீச்சர். நான் பயத்திலை அம்மாக்குச் சொல்லேல்லை.

வீட்டிலை ஒருத்தரும் இல்லாத நேரம் மணிமாமா இப்படித்தான் செய்யிறவர். அப்பா இல்லாத நேரம் அம்மாவும் பக்கத்துவீட்டை படம் பார்க்கப்போயிடுவா. நான் படிச்சுக் கொண்டிருந்தா..... மணிமாமா சோடா விலை ஏதோ கலந்து தந்திடுவர். நான் குடிச்சா....... தலைசுத்துற மாதிரி இருக்கும். அவர் பழையபடி தான் எல்லாம் செய்வர். அம்மா படம் முடியத்தான் வீட்டை வருவ. அம்மம்மா நித்திரையாப்போடுவா. இப்பிடிக் கன தரம் எனக்குச் சோடா தந்தவர் ரீச்சர்.

பிறகு சொல்லுவார். இதை ஒருத்தருக்கும் சொல்லப்பிடாது எண்டு. இது ஒண்டும் செய்யாது எண்டும் சொல்லுவார். நானும் பயத்திலை ஒருத்தருக்கும் சொல்லேல்லை.

பிறகு நாங்கள் யாழ்ப்பாணம் வந்திட்டம். எனக்கு மூண்டு மாதமா சுகமில்லாமல் வரேல்லை. நான் மாலா அன்ரியோடை இதை அழிக்கிறதுக்கு ஒரு பொம்பிளை டொக்டரிட்டைப் போனனான். அவ என்னைப் புழுத்தபாட்டாப் பேசிப்போட்டா. வீட்டிலை ஒருத்தருக்கும் தெரியாது. பிறகு மாலா அன்ரி தான் ஒரு இடத்திலை என்னைக்கொண்டு போய்விட்டவ. அங்கை இருந்து பிள்ளை பிறந்தாப் பிறகு அவை பிள்ளையை எடுத்து ஆருக்கோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குடுத்திட்டு என்னை அனுப்பினவை.

இப்ப எல்லாருக்கும் தெரிஞ்சிட்டுது. ஆறு மாதத்துக்குப் பிறகு தான் என்னைக்கொணந்து பள்ளிக்கூடத்திலே படிக்க விட்டவை.

எனக்கு மணிமாமாவை நினைச்சால் சரியான கோபம் வரும். அவர் அக்காவோடையும் இப்பிடித்தான் பழகியிருக்கிறார். இப்ப அவவைக் கலியாணம் முடிக்கிறதெண்டு சொல்லுறார். நம்ப ஏலாது.

எனக்கு இதுகளை யோசிச்சா யாரோடையும் கதைக்க விருப்பமில்லை. தனிய இருந்து யோசிப்பன். வகுப்பிலை ஒருத்தரோடையும் கதைக்க மாட்டன். உடம்பு முழுக்க ஒரே வருத்தம்.

அண்டைக்கு மணி மாமா கடிதம் போட்டிருக்கிறார். குழந்தை தனக்கோ அல்லது வேறு யாருக்கும் பிறந்ததோ எண்டு கேட்டிருக்கிறார். நான் அவரை நேரை கண்டனெண்டால் மூஞ்சையிலை அடிப்பன். எனக்கு விளங்காப்பருவத்திலை என்னைப் பேக்காட்டிப்போட்டார். அந்த நேரம் உங்களைப் போலை ஒரு ரீச்சர் இருந்திருந்தா இப்பிடி ஒண்டும் நடந்திருக்காது ரீச்சர்.

நான் இனிக் கலியாணமே முடிக்கமாட்டன். படிக்க வேணும். படிச்சு என்னைப்போல ஏமாந்த பொம்பிளைப் பிள்ளையளுக்கு உதவி செய்யவேணும். என்ரை பிள்ளை என்ன மாதிரி இருக்குதோ எண்டு நினைச்சால் குற்ற உணர்வும் கவலையுமா இருக்கும்.

இப்ப உங்களைச் சந்திச்சதாலை என்ரை கவலை மாறும் எண்டு ஒரு நம்பிக்கை இருக்கு ரீச்சர். எனக்கு உதவி செய்வியள் தானே!

✦ ✦ ✦

*(வலம்புரி - 20. 06. 2003)*



# 18

# புலன்களுக்கு அப்பால் உள்வாங்குதல்



நான் அதை முதலில் பார்த்த போது கால் மட்டும் தான் மன்னிக்கவும் தூக்கங்கள் இரண்டு மூன்று தான் வெளியில் தெரிந்தது. அதன் பெயரை என்னால் மட்டிட முடியவில்லை. இவரது பெயர், ''புலிமுகச் சிலந்தி'' என்பதாக இருக்குமோ என்ற பயம் கலந்த கேள்வி என் மூளையில் பொறி தட்டி மறைந்தது. என்னவாக இருந்தாலும் ''ஆரோ பயங்கரமான ஆள்......'' என்பதில் சந்தேகமில்லை. இப்போது இவர் யார்? ''எங்கிருந்து வந்திருக்கிறார்?'' ''ஏன் வந்திருக் கிறார்?'' ''எப்படி இதற்குள் வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுந்தார்?'' என்ற கேள்விகளுக் கெல்லாம் பதில் கண்டுபிடித்த பிறகுதான் நான் வந்த காரியத்தைச் செய்ய வேண்டும் என்றால்.... அது வலு கஷ்டம்.

எனக்கோ அவசரம் வேலைக்குப் போகவேண்டும். இவர் இருக்குமிடத்தில் தான் எனது அலுவல் பார்க்க வேண்டும். ஒன்றும் செய்ய முடியாது. நான் எனது தேவையைப் பூர்த்தி செய்து கொண்டு, எழும்பிவந்துவிட்டேன். ஆளைக் குனிந்து பார்க்கவே இல்லை. அவர் என்னை ஒன்றும் செய்யமாட்டார் - ஒன்றும் செய்ய முடியாத நிலையில் தான் இருக்கிறார். என்றாலும், மனதில் ஒரு சிறு பயம் இல்லாமல் இல்லை.

இந்தப் பயம் எப்போது தொடங்கியிருக்கும். சிறு பிள்ளையாக இருக்கும் போது...... இரண்டோ, மூன்றோ வயதில் புலிமுகச் சிலந்தி அழகாக இருக்கிறது என்று அதனுடன் விளையாடப் போயிருப்பேன். அம்மா பதறி அடித்துக்கொண்டு ஓடிவந்து....... ''ஐயையோ தொடாதை பிள்ளை கடிக்கும் பொல்லாத நஞ்சு'' என்று சொன்ன போது, தொடங்கியிருக்கும். பிறகு ''புலிமுகச் சிலந்தி'' கடித்த பலர் பட்ட வேதனைகளைப் பார்த்த, கேட்ட அனுபவங்கள் அந்தப் பயத்தை உறுதிப்படுத்தியிருக்கும். இதிலே வேடிக்கை என்னவென்றால், புலியான புலி கடித்த ஒருவரையும் நான் பார்த்ததில்லை. அதுபற்றிக் கேள்விப்பட்டது மில்லை. புலிதேவையில்லாமல் மனிதர் வாழும் இடங்களுக்கு வருவதில்லை. தற்செயலாக வந்தாலும்...... அது வலு பெரிய மிருகம் என்பதால் எல்லாருக்கும் தெரியும். யாரும் போய் அதனிடம் கடிவாங்க மாட்டார்கள். ஆனால்...... இந்தப் ''புலிமுகச் சிலந்தி......'' ஆள் வலு சிறிது. எங்கேயும் மறைவிடங்களில் ஒழிந்திருந்துவிட்டுக் கடித்து விடும். அது சரி... இதற்கு ஏன் மனிதர் ''புலிமுகச் சிலந்தி'' என்று பெயர் வைத்தார்கள்? புலிக்கும் இதனுடைய முகத்திற்கும் ஏதும் ஒற்றுமை இருப்பதாக எனக்குத்



தெரியவில்லை. சும்மா.... எங்களைப் பயமுறுத்துவதற்காகத்தான் இருக்கும்.

அன்றைய நாள் வலு ''பிசி'' யாக இருந்தபடியால்..... அந்தக் காலைப் பொழுதுடன் நான் அதை மறந்தே விட்டேன்..

இது இரண்டாவது நாள். எங்கள் வீட்டுப் ''போட்டிக்கோ'' வின் அழகிய தூணுக்கும் முன்பக்கச் சுவருக்கும் இடையில் ஒரு உயரமானபடி இருக்கிறது. அதில் உடகார்ந்து காலைத் தேநீர் அருந்துவதில் ஒரு சுகம். அப்போது ஒரு சிறு பூச்சி அந்த வடிவான தூணில் மேலிருந்து கீழாக வழுக்கிக் கொண்டு வந்தது. நான் அது ஓடிவந்த அழகை இரசித்துக் கொண்டு தேநீரையும் சுவைத்துக் கொண்டேன். எங்கிருந்து வந்தது என்று தெரியாமல் படாரென்று பாய்ந்து வந்து இந்தச் சிறு பூச்சியை அப்பிக்கொண்டது ஒரு பல்லி. கண்டறியாத பல்லியும் அதனுடைய நாக்கும்! ''சொச் சொச் சொ'' என்று சொல்லிச் சொல்லி எல்லாருக்கும் வழிகாட்டும்...... மன்னிக்கவும் வழி காட்டுவதாக மக்கள் பலர் நம்பும் பல்லி ஏன் இப்படியொரு சிறு பூச்சியை விழுங்கித் தொலைக்கிறது? இதற்கெல்லாம் விடை தேடிக்கொண்டிருக்க நேரமில்லை. இன்றும் வேலை நாள். தேநீர்க் கோப்பையை வைத்துவிட்டு, ''பாத்ரூமை'' நோக்கிப் போனேன்.

கதவைத் திறந்து உள்ளே போனதுதான்..... அடுத்த கணம் அவரைப் பற்றி நினைவு வந்தது. பார்த்தேன். இருக்கிறார்...... ''எட .... இன்றைக்குக் காலை விட்டுவிட்டு வாலை..... மன்னிக்கவும்...... போஸ்ட் அப்டோமினை (Post Abdomen) நீட்டிக்கொண்டிருக்கிறார்''

அப்படியானால் இவர் ''புலிமுகச் சிலந்தி இல்லை''

இவரது பெயர் தேள். என்ன தேள்? மட்டைத் தேளா? பூரானா? பிள்ளைத் தேளா? ஒருவேளை, திரு நீல கண்டனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளைச் சரியாக இனங்காண முடியாமல் இருக்கிறது. தன்னை முழுமையாகக் காட்டிக் கொண்டால்தானே யாரென்று கூற முடியும். ஒருநாள் காலைக் காட்டுகிறது. மறுநாள் வாலைக் காட்டுகிறது. மிகுதியைக் கோப்பை நீருக்குள் மறைத்து வைத்துக் கொள்கிறது. என்ன பெயருடனாவது இருந்துவிட்டுப் போகட்டும். எனக்கென்ன பிரச்சினை? என்னைக் கடிக்காவிட்டால் சரி. ஆ...... தான் உயிருடன் தான் இருக்கிறேன் என்பதை நிரூபிக்க அந்த வாலை ஆட்டுகிறது. "பேசின்" வழுவழுப்பாக இருப்பதால், அவர் நீரை விட்டு வெளியேற எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் தோல்வியைத் தழுவுகின்றன. அதனால், நான் தப்பினேன். அவர் என்னைக் கடிக்க முடியாது என்று அறிவு சொல்கிறது. ஆனாலும், உணர்வு அதை முழுதாக ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. இன்று, நேற்றைய தினத்தை விட அதிக பயத்தை அது என்னுள் ஏற்படுத்தியிருப்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அது இருக்கும் இடத்திற்குப் போகாமல், அதைப் பார்க்காமல் விட்டால் பயம் குறையும் என்றால்.... போகாமல் இருக்கவும் முடியவில்லை. காலைக் கடன் கழிப்பது மிக அவசர வேலையாயிற்றே! மீண்டும் ஒருமுறை அதைப் பார்த்தேன். வெள்ளைப் பின்னணியில் நல்ல கறுத்த உருவம். கறுப்பு வானத்தின் பின்னணியில் வெள்ளைக் கொக்குகளைக் கண்ட இராமகிருஷ்ண பரமஹம்சர் தெய்வீக அனுபவம் பெற்று மூர்ச்சை அடைந்தாராம். எனக்கும் மெதுவாகத் தலை சுற்றுகிறது. இன்னும் ஒருமுறை அதைப் பார்த்தேன். அது வாலைப் பலமாக ஆட்டுகிறது. "ஆளை ஆளைப் பார்க்கிறாய், ஆளை ஆளைப் பார்க்கிறாய்! ஆட்டத்தைப் பார்த்திடாமல் ஆளை ஆளைப் பாக்கிறாய்...." என்ற பழைய சினிமாப் பாடல் வேறு இந்த நேரத்தில் எனது மனதில் வந்து தொலைக்கிறது. ஒருவாறு மயக்கம் போடாமலே எனது வேலையைச் செய்து முடிப்பதில் வெற்றி கண்டேன்.



அன்றைய பகலப் பொழுது பலவேறு வேலைகளை நான் செய்த போதிலும், இந்த விடயத்தை மறந்து விட முடியாதிருந்தது.

க.பொ.த உயர்தர வகுப்பில் படித்த ஏகாம்பரநாத ஐயர் எழுதிய "அவுற்லைன்ஸ் ஒப் சோலஜி" (Outlines of zoology) என்ற புத்தகத்தில் முந்நூற்று நாற்பத்திரண்டாம் பக்கத்தில் இரண்டு தேளின் படம் இருக்கும். பைலம் - ஆர்த்திரோ போடா (Phylum - Arthropoda) - கிளாஸ் அரக்னிடா (Class Arachnida) ரைப் - ஸ்கோப்பியன் (Type - Scorpion)..... இப்போது அதெல்லாம் ஞாபகத்திற்கு வருகிறது. என்றாலும், அது தனது கொடுக்கை - மன்னிக்கவும் - பெடிபால்ப்பை (Pedipalp) இன்னும் எனக்குக் காட்டவில்லை. தான் நல்ல பிள்ளை என்றுதான் எனக்குக் காட்ட முனைகிறதோ? என்றாலும், அது தேள் என்றபடியால், அதற்குக் கட்டாயம் "கொடுக்கு" இருக்கும் என்று எனக்குத் தெரியும். எனக்குத் தெரியும் என்று அதற்கும் தெரிந்திருக்க வேண்டும்.

"கொடுக்கு" என்பது இரையைப் பற்றிப் பிடிப்பதற்கே பயன்படும். சிறு பூச்சிகளும் சிலந்திகளுமே அதற்கு இரையாக முடியும். புலிமுகச் சிலந்தியின் குஞ்சை இது பிடித்துத் தின்று விடும். (அப்படியானால். இவர் அவரை விடப் பொல்லாத ஆள்!) என்னை அது இரையாகக் கொள்வதில்லை. அப்படி இருக்கும் போது, இரையைப் பிடிக்கும் கொடுக்கிற்கு நான் ஏன் இவ்வளவு பயம்? அறிவு சொல்வதை எப்போது தான் உணர்வு கேட்டது? அவரவர் தான் தான் நினைத்தது நினைத்தபடிதான்!

தேள் பொதுவாக வெப்ப வலயநாடுகளில் தான் காணப்படுகிறது. தேளில்லாத நாடுகளும் உலகில் உண்டு. அப்படி ஒரு நாட்டுக்குத் தப்பி ஓடிவிட்டால் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு நேரங்களில் தான் தேள் பொதுவாக வெளியே காணப்படும். அது நாங்கள் நித்திரை செய்யும் நேரம். இவர் வெளியே உலாவுவது பற்றி எங்களுக்குத் தெரியாதது நல்லது.

பகலில் பொதுவாகக் கற்கள், விழுந்து கிடக்கும் மரங்கள், மரப்பட்டைகள், பொந்துகள் போன்றவற்றினடியில் மறைந்து வாழும். அவரிடத்தில் ஏதோ குற்ற உணர்வு இருக்கிற படியால்த்தானே மறைந்து வாழுகிறார்? இல்லாவிட்டால் பகல் நேரத்திலும் துணிந்து வெளியில் உலாவலாமே? என்னவோ....... பகல் நேரத்தில் மறைந்திருந்தால் எனக்குப் பிரச்சினை இல்லை. பகல் நேரத்தில்... எனக்குத் தேவையான இடத்தில் வந்து குந்தி இருப்பது தானே எனக்குப் பிரச்சினையாக இருக்கிறது?

இரவு கனவிலும் அவர் வந்தார். வெள்ளைப்பின்னணியில்... நல்ல கறுப்பாக! வெள்ளளைப் பின்னணி இல்லாவிட்டால் இந்தக் கறுப்பு நிறம் இவ்வளவு எடுப்பாகத் தெரியாது என்று கனவிலும் நான் நினைத்துக் கொண்டேன்.. ஆனால் கனவில் சரியான பயமாக இருந்தது. எங்கோ உயரத்தில் இருந்த நான் கால் தவறி இவருக்கு மேல் விழுந்தேன். இவர் தன் வாலை வளைத்து என்னைக்குத்துகிறார். அந்த நடு இரவில் உடலெல்லாம் வியர்த்து எழுந்து உட்கார்ந்த போது தான் அது வெறும் கனவு என்பது உறைத்தது. ஒரு உண்மையும் புரிந்தது. அவருடைய வாலில் மன்னிக்கவும் போஸ்ட் அப்டோமினில் தானே நஞ்சு இருக்கிறது! அதற்கு என்ன பெயர்? ஆ.... போர்ஸ்ட் ஏனல் ஸ்பைன் (Post Anal spine) அப்படி இருக்கும்போது நான் ஏன் கொடுக்குக்கு இவ்வளவு பயம்? வாலுக்குப் பயப்பட்டாலும் அதில் ஓர் அர்த்த முண்டு.

விடிந்து விட்டது. இது மூன்றாவது நாள் முதல் வேலையாக அவரைப் போய்ப்பார்த்தேன். இருக்கிறார் சுகமாக!



இன்றைக்குத்தனது முழு உருவத்தையும் காட்டுகிறார். சுமார் 7 அங்குலத்திற்குமேல் இருக்கும். வெளியே வருவதற்குக் கடும் முயற்சி செய்கிறார் ஆக இருக்கலாம். இரவு சாப்பாடு ஒன்றும் கிடைத்திருக்காது. ஆனாலும் நான் என்னுடைய கோணத்தில் இருந்துதான் பார்க்க முடியும். என்னை இன்று அவர் மேலும் அதிகமாகப் பயப்படுத்துகிறார். எந்த விசயத்திற்கும் ஒரு மூன்று நாள் பார்க்கலாம். அதற்குமேல் முடியாது. காய்ச்சல் என்றால் கூட மூன்று நாள் வீட்டில் வைத்து ''பனடோல்'' கொடுக்கலாம். நாலாவது நாள் ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டும் என்று சொல்வார்கள்.

இவரோடு இதற்குமேல் செல்லம் கொஞ்ச முடியாது. எனக்கும் கொஞ்சம் கோபம் வருகிறது. நான் என்ன ஞானியா? இல்லைத்தானே! ஒருபெரிய வாளிநிறையத் தண்ணீர் எடுத்து.... அடித்து ஊற்றிப்பார்த்தேன். தண்ணீர் போகும் வரைக்கும் கால்களை..... மன்னிக்கவும் தூக்கங்களை ...... மடித்து வைத்திருந்து விட்டுப் பிறகு உல்லாசமாக வெளியே தலை நீட்டுகிறார்.

வளவு முழுவதும் தேடி ஒரு பொருத்தமான தடி எடுத்தேன். நுனிப்பக்கத்தில் சிறு கவர்களைக கொண்ட நீளமான தடி. கவர்ப்பக்கத்தை அவருக்கு அருகில் கொண்டு சென்றேன். வளவளப்பற்ற, சொரசொரப்பான இடத்தைத் தேடிக் கொண்டிருந்தவர். அதில் மெல்ல ஏறினார். தடிவழியே விறுவிறென்று ஏறி எனது கைக்குக்கிட்ட வந்து விடுவாரோ என்று அதீதமான பயம் ஒன்று இருந்தாலும்......... எதிர்கால நன்மை கருதி அந்தச் சில கணங்களின் பதட்டத்தைத் தாங்கிக் கொண்டேன். ''யாருடைய அனுமதியுமில்லாமல் எங்களுடைய வீட்டிற்கு வந்தது மட்டுமில்லை..... நான் அவசிய அலுவல் செய்கிற இடத்தில் குந்திக் கொண்டு பயம் காட்டுகிறீர். என்ன? வாரும் வெளியாலே!''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தடியுடன் மெல்ல வெளியே வந்து, ஆளை நிலத்தில் உதறி, அவர் ஓட முதல், தடியின் மறுபக்கத்தால் போட்டேன் தலையில் ஒரு போடு, மன்னிக்கவும் கெபலோ தொறாக்சில், (Cephalo Thorax) வாலைக் கொஞ்சநேரம் ஆட்டிக் கொண்டிருந்தார். பிறகு தனது இறுதி மூச்சை விட்டார். மலகூடம் என்றாலும் அது அதற்கேற்ற முறையில் சுத்தமாக இருக்க வேண்டும். இல்லையோ?

எங்கள் வீட்டு மலகூடத்திற்கு நாங்கள் சந்தோஷமாகத் தளர்வான மனநிலையில் போக வேண்டும். இல்லையா?

அவருடைய சவம் பின் வளவில் கிடக்கிறது. ஒரு மணித்தியாலத்தின் பின் வேலைக்குப்புறப்படும் நேரம் எட்டிப்பார்த்தேன். எறும்பு கூட அவரை எட்டிப்பார்க்கவில்லை. அப்படியே கிடக்கிறார். "அனற்றமி" படிப்பதற்கு வசதியாக. நஞ்சுச் சவம்!

நான் உள்ளே திரும்பி வந்தபோது, எனது தந்தையார் வேலைக்குப் புறப்பட ஆயத்தமாகிவிடார். வெள்ளை உடையில் துப்பரவாக இருந்தார்.

"மூண்டு நாளா அதுக்குள்ளை இருந்து பயங்காட்டின தேளை நீங்கள் ஏன் அடிக்கேல்லை?" என்று கேட்டேன்.

"தேளா? எங்கையிருந்தது? நான் காணேல்லை" என்றார் அவர். மூன்று நாளும் அவர் காலைக் கடன் கழித்தது நிச்சயம். அவரது வெள்ளை ஆடையை இப்போது நான் உற்றுப் பார்க்கத் தொடங்கினேன்.

✦ ✦ ✦ *(வலம்புரி - 15. 08. 2003)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்த்து

செந்தமிழ் வளர்த்த செழுங்குடிப் பிறந்து
கல்விச் செல்வம் கைவரப் பெற்றே
நல்லாசிரியையாய் நற்பணி புரிந்த
கோகிலா எனும் குலக் கொழுந்தே வாழிய

மாணவியாகத் திகழ்ந்திடும் போதே
நாடகம் நடித்தும் சிறுகதை எழுதியும்
மாணவரிடையே தனித்துவம் கொண்டனை
பேணரும் குணத்துப் பெரியோய் வாழிய

எழுத்துள்ள பலவாம் ஏட்டிலும்
இன்னும் பிறவாம் நாட்டுள ஏட்டிலும்
வாழும் இலக்கியம் இது வெனக் காட்ட
வளமார் இலக்கியம் பலவும் படைத்தனை

மேடைகள் பலவினும் நாடகம் நடத்தி
நாடகத் துறைக்குப் புதுமைகள் சேர்த்தனை
யாநலத்துள்ளும் சிறந்ததாய்க் கொள்ளும்
நாநலம் விளங்க மேடையில் பேசி

பேச்சுக் கலைக்கே அழகினைச் சேர்த்தனை
சரியெனப் பட்டதைச் சபையே எதிர்க்கினும்
சரியெனக் கூறும் இயல்பினை வாழிய
பெண்ணின் பெருமை புவியோர்க் குணர்த்திய
திண்மை உள்ளம் படைத் தோய் வாழிய
சிந்தையைத் தூண்டவும் கற்பனை வளர்க்கவும்
வல்ல நின் எழுத்து வாழிய நிலைத்தே
தெய்வ அருளால் நீயும் நின் துணைவரும்
அருமைப் புதல்வனும் வாழிய நீடே

புலவர். ம. பார்வதி நாதசிவம்.
மயிலங்கூடல், இளவாலை.
17.12.2008

Harikanan Printers, 424, K.K.S Road, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org